
# இந்தியாவில் எல்லா மதங்களிலும், பிற்படுத்தப்பட்டவர்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள்! ஆனால், இந்திய ஆட்சிப் பணிகளிலும், மாநில ஆட்சிப் பணிகளிலும், கல்வியிலும் பிற்படுத்தப்பட்டவர்கள் மிகக்குறைவாகவே இருக்கிறார்கள்!



ஆங்கிலேயர் காலத்தில் இந்தியாவில் பிரிட்டிஷ் மாகாணங்கள் 11 இருந்தன. அத்துடன் குட்டி சுதேச அரசுகள் 460-க்கு மேல் இருந்தன; அய்தரா பாத், மைசூர், பரோடா முதலான பெரிய சுதேச அரசுகளும் இருந்தன.

பிரிட்டிஷ் மாகாணங்கள் 1947 வரையில் வெள்ளை ஆளுநர்களால் ஆளப்பட்டன. பிரிட்டிஷ் மாகாணத் துக்குட்பட்ட மாவட்டங்களை பிரிட்டிஷ் ஆட்சியர் கள் (Collectors) ஆட்சி செய்தார்கள். மாவட்ட ஆட்சியருக்குக் கீழ் எழுத்தர், தலைமை எழுத்தர் போன்ற உயர் அதிகார எழுத்துப் பணிகளில் வடநாட்டில் பார்ப்பனர்களும் காயஸ்தர்களும் இருந்தார்கள். தென்னாடு எனப்பட்ட சென்னை மாகாணத்தில் பார்ப்பனர்கள், அடுத்து கார்காத்தார், துளுவர், ரெட்டி, நாயுடு, நாயர் முதலான மேல்சாதிக்காரர்கள் இருந்தார்கள்.

நீதிக்கட்சி ஆட்சியில் சென்னை மாகாணத்தில் 1921இல் கீழ்நிலை அரசு வேலைகளில் 100 இடங்களும் பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதார், இசுலாமியர், கிறித்துவர், ஆதித்திராவிடர் என அய்ந்து வகுப்புகளுக்குப் பிரித்தளிக்கப்பட்டன. ஆனால் இது நடப்புக்கு வரவில்லை.

1926-இல், நீதிக்கட்சி மாகாணத் தேர்தலில் தோல்வி அடைந்தது. சுயேச்சை அமைச்சரவை டாக்டர் ப.சுப்பராயன் தலைமையில் அமைந்தது. மேற்சொன்ன வகுப்புவாரி இடப்பங்கீட்டு ஆணை 1928இல்தான் முதன்முதலாக நடப்புக்கு வந்தது.

சென்னை மாகாணத்தில், 1947 நவம்பரில் முதலமைச்சர் ஓமந்தூரார், பார்ப்பனரல்லாத இந்துக்களில் பார்ப்பனரல்லாத இந்து பிற்படுத்தப்பட்டவர் என்னும் ஒரு பிரிவை ஏற்படுத்தி அவர்களுக்கு 14 இடங்களில் 2 இடங்கள் அதாவது 14 விழுக்காடு இடஒதுக்கீடு அளித்தார்.

1947-இல் வெள்ளையர் வெளியேறினர். இந்திய அரசமைப்புச் சட்டம் 9.12.1946 முதல் 26.11.1949 வரை எழுதப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. அச்சட்டம் 26.01.1950 முதல் நடைமுறைக்கு வந்தது.

அச்சட்டம் எழுத அமைக்கப்பட்ட குழுவுக்குத் தலை வராக இருந்த டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், ஏற்கெனவே பட்டியல் வகுப்பு மக்களுக்கு இடஒதுக்கீடு பெற்றுக் கொடுத்திருந்தார். மய்ய அரசுப் பணிகளில் இப்போது **மத்திய அரசு வேலைகளிலும், மாநில அரசு வேலைகளிலும் எல்லாப் பிற்படுத்தப்**


சுவடி : 44
ஏடு : 8
பிப்ரவரி 2020
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**இரா.பச்சமலை**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**‘சிந்தனையாளன்’**
பெரியார்-நாகம்மை அறக்கட்டளை வளாகம்
மனை எண்.277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
பெரியார்-நாகம்மை நூலகம்
அம்பத்தூர், சென்னை - 600 050.
தொடர்புக்கு :
**94448 04980**
**86681 09047**
**95975 26990**
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

**பட்ட வகுப்புகளுக்கும் இட ஒதுக்கீடு அளிக்க வழி செய்தார்.**

**இதற்காக 16(4) என்ற விதியை எழுதினார். அவ்விதியாவது, "அரசு நிருவாகப் பணிகளில் அல்லது வேலையில் எந்தப் பிற்படுத்தப்பட்ட வகுப்புக் குடிமக்கள் போதிய பிரதிநிதித்துவம் பெறவில்லை என அரசு கருதுகிறதோ அவர்களுக் குச் சாதகமாக இடஒதுக்கீடு செய்ய எந்த ஏற்பாடு செய்வதையும் இந்த விதியில் உள்ள எதுவும் தடுக்காது" எனக் கூறுகிறது.**

"ஓமந்தூரார் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு அளித்ததனால், முற்பட்ட வகுப்பைச் சேர்ந்த எனக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை" என்று சண்பகம் துரைராஜு என்பவர் வழக்குத் தொடுத்தார். அவ்வழக்கில் சண்பகம் துரைராஜுக்குச் சார்பாகத் தீர்ப்பளிக்கப்பட்டது. அதனால் இந்திய அரச மைப்புச் சட்டத்தில் 15(4) என்ற உட்பிரிவு சேர்க்கப் பட்டது. அதற்கு, முழுமுயற்சியையும் பெரியார் செய்தார்.

1951இல் பட்டியல் வகுப்பினருக்கும் பழங்குடியினருக் கும் 15 விழுக்காடு, பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு 25 விழுக்காடும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மீதம் உள்ள 60 விழுக்காடு பொதுப் போட்டிக்கு ஒதுக்கப்பட்டது.

1954-இல் முதலமைச்சராக வந்த கு.காமராசர் பட்டியல் வகுப்பினருக்கும் பழங்குடியினருக்கும் அளிக்கப்பட்டு வந்த இடஒதுக்கீட்டை 15 விழுக்காட்டிலிருந்து 16 விழுக்காடு என உயர்த்தினார். பிற்படுத்தப்பட்ட வகுப்பு களுக்கு அளிக்கப்பட்டு வந்த 25 விழுக்காடு அப்படியே தொடர்ந்தது. இதனால் மொத்த இடஒதுக்கீடு 41 விழுக்காடு ஆனது.

1967 மார்ச்சில் தி.மு.க. பதவிக்கு வந்தது. சி.என். அண்ணாதுரை அவர்கள் 03.02.1969 வரை முதல்வராக இருந்தார். அவர் மறைந்தவுடன், கலைஞர் மு. கருணாநிதி முதலமைச்சர் ஆனார்.

இடையில் கர்நாடக மாநிலத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. அது செல்லாது என்று மைசூர் உயர்நீதிமன்றமும் உச்சநீதிமன்றமும் தீர்ப்பளித்தன. அப்படி இருப்பினும், 33 விழுக்காடு வரை பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்க லாம் எனப் பெரியார் கோரினார்.

முதலமைச்சரான கலைஞர் மு. கருணாநிதி பெரி யாருடைய கோரிக்கையை ஏற்று, இடஒதுக்கீட்டில் 8 விழுக்காடு அதிகப்படுத்தினார்; 1971இல் பிற்படுத்தப் பட்டோருக்கு 6 விழுக்காடும், பட்டியல் வகுப்பினருக்கு 2 விழுக்காடும் அதிகப்படுத்தினார். இரண்டு வகுப்பு களுக்கும் சேர்ந்து மொத்தம் இடஒதுக்கீடு 49 விழுக்காடு ஆயிற்று.

அ.தி.மு.க. 1977-இல் ஆட்சிக்கு வந்த பிறகு, "1979இல் கல்வி ஆண்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு உள்ள 31 விழுக்காடு அளிப்பதில், பொருளாதாரத்தில் வசதி உள்ள வர்களை நீக்கிவிட்டு, வசதியில்லாதவர்களுக்கு மட்டும் இடஒதுக்கீடு தரவேண்டும்" என்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஆணையிட்டார். மா.பெ.பொ.க. உட்பட எல்லாக் கட்சிக்காரர் களும் இதை எதிர்த்தார்கள். ஆனால், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி-நன்கு சிந்தித்து பிற்படுத்தப்பட்டவர் களுக்குத் தமிழ்நாட்டில் உள்ள நிலைமையை விளக்கி, எம்.ஜி.ஆர். அவர்களுக்கு சந்தித்து 19.8.1979-இல் ஒரு கோரிக்கை ஆவணம் அளித்தது. அதில், "தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டவர்கள் 67.5 விழுக்காடாக உள்ளனர். இது அரசுக் கணக்குப்படி. அதனால், பிற் படுத்தப்பட்ட வகுப்புக்கு அளிக்கும் இடஒதுக்கீடு 31 விழுக்காட்டை உயர்த்தி, 60 விழுக்காடு அளிக்க வேண்டும்" என்று கோரியது. எம்.ஜி.ஆர். இசையவில்லை.

அப்பொழுது தமிழ்நாடு மின்சாரத் துறை அமைச்ச ராக இருந்த பண்ருட்டி எஸ்.இராமச்சந்திரனை நானும், சேலம் அ. சித்தய்யன் அவர்களும் நேரில் சந்தித்து அவரிடம் சட்ட விவரங்களை விளக்கினோம்.

பண்ருட்டி எஸ். இராமச்சந்திரன் அவர்கள் சனவரி பிற்பகுதியில் எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்தித்தார். எம்.ஜி.ஆர்., உடனேயே வந்து கோட்டையில் அதிகாரி களை அழைத்துப் பேசினார், "01.02.1980 முதல் தமிழ்நாட்டுப் பிற்படுத்தப்பட்டோருக்கு அரசு வேலை யிலும், கல்வியிலும் 50 விழுக்காடு இடஒதுக்கீடு அளிக் கப்படும்" என அறிவித்தார்.

இப்போது தமிழ்நாட்டில் 69 விழுக்காடு வழங்கப் படுகிறது. அதை நிலைப்படுத்துவதற்காக, தி.க. தலைவர் கி. வீரமணி, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அட்டவணை 9-இன்கீழ் சேர்க்க ஒரு திட்டத்தை முன்மொழிந்து, 1988-இல் அத்திட்டத்தை முதலமைச்சர் செல்வி ஜெய லலிதாவிடம் அளித்தார். அத்திட்டத்தை ஏற்று, அதை இந்திய அரசுக்கு முதலமைச்சர் அனுப்பி வைத்தார். இந்திய அரசமைப்புச் சட்டம் அட்டவணை 9-இல் அது சட்டமாக இடம்பெற்றது. நிற்க.

**வடநாட்டில் எந்த மாகாணத்திலும் அல்லது மாநிலத்திலும் 1978 வரையில் அரசுப் பணிகளில் வகுப்புவாரி பங்கீடு தரப்படவில்லை.**

8.8.1976-இல் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி சீர்காழியில் தொடங்கிய போதே, ‘‘இனி நாம் பெரியாரின் கொள்கைகளுள் வகுப்புவாரி உரிமைக் கோரிக்கை ஒன்றையாவது முழுவதுமாக வென்றெடுக்கப் பாடுபடுவோம்’’ என்று முடிவெடுத்தோம்.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 340இன் படி பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பரிநதுரைகள் என்னென்ன செய்ய வேண்டும் என்று கண்டு பரிந்துரை செய்ய முதலாவது பிற்படுத்தப்பட்டோர் குழுவை காகா கலேல்கர் தலைமையில் 29.01.1953-இல் நேரு அமைத்தார். காகா கலேல்கர் குழு அறிக்கையை 30.3.1955-இல் நேருவிடம் அளித்தது.

அறிக்கையைப் பெற்ற நேரு 1961 வரை அதை நடைமுறைப்படுத்தாமல் -

அ. காகா கலேல்கர் கண்டபடி, 2999 சாதிகள் பிற்படுத்தப்பட்டோர் என்பதை ஏற்க முடியாது எனவும்; அவர்களுக்கு இடஒதுக்கீடு மத்திய அரசுப் பணிகளில் அளிக்கவும் முடியாது எனவும் இந்திய அமைச்சரவை முடிவு செய்கிறது என்று, 1961-இல் தீர்மானித்தார்.

ஆ. சில மாதங்கள் கழித்து, மாகாண முதலமைச்சர்களுக்கு ஒரு கமுக்க மடல் (Demy Official Letter) அனுப்பினார். அதில், ‘‘பிற்படுத்தப்பட்டவர்களுக்கு கல்வியிலும் வேலையிலும் சாதி அடிப்படையில் இடஒதுக்கீடு தரக்கூடாது எனவும், அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமானால் பொருளாதார உதவி செய்யலாம் என்றும் எழுதினார்.’’

**பிரதமர் நேரு எதை ஏற்க முடியாது என்று சொன்னாரோ, அதை ஏற்றுப் பிரதமராக இருந்த வி.பி. சிங் 13.8.1990-இல் ஆணை பிறப்பித்தார். நம் பேரவையின் கோரிக்கை வென்றது. எப்படி?**

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோருக்கு 50 விழுக்காடு இடஒதுக்கீடு பெற்ற நாம், இந்தியாவில் உள்ள எல்லா வடமாநிலங்களிலும் மத்திய அரசிலும் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு பெறவேண்டும் என்கிற கோரிக்கையை முன் வைத்து, இந்திய அரசுக்கும், நாடாளுமன்றத்துக்கும், விதி 15(4) விதி 16(4) இவற்றின்படி இந்தியா முழுவதிலும் உள்ள எல்லா மாநிலங்களிலும் மத்திய அரசிலும் விகிதாசார இடஒதுக்கீடு பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பட்டியல் பழங்குடியினர், மதச்சிறுபான்மையினர் ஆகியோருக்கு விகிதாசாரம் அளிக்க இந்திய அரசு வழிசெய்ய வேண்டும் என்று வே. ஆனைமுத்து, மா. முத்துசாமி, தாதம்பட்டி எம். இராஜு ஆகியோர் முடிவு செய்து கொண்டு, தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மூன்று மொழிகளில் கோரிக்கை ஆவணம் அச்சிட்டுக் கொண்டு, மூவர் மட்டும் தில்லி நோக்கிப் புறப்பட்டோம்.

29.4.1978 காலை தில்லி அடைந்தோம். நேரில் ஒப்புதல் பெற்றிருந்தபடி புதுதில்லியில் 94, நார்த் அவென்யூ என்கிற வாழப்பாடி கூ. இராமமூர்த்தி அவர்கள் வீட்டில் நாங்கள் மூவரும் ஓர் ஆண்டில் ஓரிரு மாதங்கள், தங்கி 13 ஆண்டுகள் - 1991 வரையில், அன்றாடம் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கண்டு, அவர்களுக்குக் கோரிக்கை ஆவணங்களை அளித்தோம்.

7.5.1978-இல் உத்தரப்பிரதேசப் பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டில் நானும், மா. முத்துச்சாமியும், பீகார் நாடாளுமன்ற உறுப்பினர் இராம் அவதேஷ் அவர்களும் பங்கேற்றோம். நான் அந்த மாநாட்டைத் தொடங்கி வைத்தேன்.

8.5.1978-இல் நானும், மா. முத்துச்சாமி, சேலம் எம். இராஜு, காலை 10 மணிக்கு இந்திய குடியரசுத் தலைவர் நீலம் சஞ்சீவ ரெட்டியைப் பார்த்து, கோரிக்கை விண்ணப்பத்தை அளித்தோம். அவர் மேல்சாதி ரெட்டி வகுப்பினர். ஆதலினால், ‘‘சென்னையில் இந்தி எதிர்ப்பு மாநாடு போடுங்கள்; நான் அதைத் தொடங்கி வைக்கிறேன்’’ எனத் திசை திருப்பினார்.

எதிர்பாராத விதமாக இந்திய அரசு உள்துறை இணை அமைச்சர் தணிக்லால் மண்டல் அவர்களை 12.5.1978 மாலை அவருடைய இல்லத்தில் சந்தித்தோம். அவர், நம் கோரிக்கையை இருகை நீட்டி வரவேற்றார். உடனே, அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, ‘‘சென்னையில், 24.6.1978-இல் அகில இந்திய விகிதாசார இடஒதுக்கீடு மாநாடு நடத்துகிறோம்; நீங்கள் அதைத் தொடங்கி வைக்க வாருங்கள்’’ என்று கோரிக்கை வைத்தோம். அவர் ஒப்புதல் தந்தார். சென்னையில் மாநாடு வெற்றிகரமாக நடந்தது.

சென்னை மாநாட்டுக்கு வருகை தந்திருந்தார். இராம் அவதேஷ் சிங்கும் நானும், தென் மாநிலங்களில் பயணம் செய்து ஆதரவு திரட்ட வேண்டும். அந்த ஆதரவைக் கொண்டு, அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர் பேரவை ஒன்றை அமைக்க வேண்டும்’’ என்று திட்டமிட்டோம்.

அதன்படி கர்நாடகம், கேரளம், ஆந்திரம் முதலிய மாநிலங்களில் ஆதரவு திரட்டினோம். 19.8.1978 மாலை சென்னை எழும்பூர் பீப்பிள்ஸ் விடுதியில் கூடி, ‘‘அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், மதச் சிறுபான்மையினர் பேரவை’’ என்ற அமைப்பை அமைத்தோம். அப்பேரவைக்கு நான் புரவலர்-தலைவராகவும், இராம் அவதேஷ் சிங் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டோம்.

அன்று திட்டமிட்டபடி, நாங்கள் நான்கு பேர் பீகார் மாநிலம் முழுவதும் பயணம் செய்து, இடஒதுக்கீடு பற்றிப் பீகார் மக்களுக்கு விழிப்புணர்வு உண்டாக்குவது என முடிவு செய்தோம்.

அம்முடிவின்படி, வே.ஆனைமுத்து, மா. முத்துச்சாமி, திருச்சி து.மா. பெரியசாமி, வேலூர் நா.ப. செந்தமிழ்க்கோ ஆகியோர் 16.9.1978 அன்று பீகார் தலைநகரம் பாட்னாவை அடைந்தோம். 17.09.1978 முதல் இராம் அவதேஷ் சிங் 31 நாட்கள், 31 மாவட்டங்கள் பயணம் செய்ய ஏற்பாடு செய்திருந்தார். விரிவாக விளம்பரம் செய்திருந்தார். பீகார் தொடர்வண்டி முழுக்க பெரியார் நூற்றாண்டு விழாவைப் பற்றிச் சுவரொட்டிகள் ஒட்ட ஏற்பாடு செய்திருந்தார். பீகாரில் 31 நாள் விழிப்புரைப் பயணம் செய்தோம்.

18.10.1978 முதல் பீகார், பாட்னா காந்தி மைதானத்தில் சிறை நிரப்பும் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

எங்கள் விழிப்புணர்வுப் பிரச்சாரத்திற்கு எதிர்ப்பாக, அன்றையப் பிரதமர் மொரார்ஜி தேசாய், 10.10.1978 முதல் பத்து நாள் பீகாரில் பயணம் செய்தார். எங்கள் விழிப்புணர்வுப் பரப்புரையால் விழிப்புப் பெற்ற மக்கள், அவருக்கு எங்கும் பேச இடம் கொடுக்கவில்லை.

அந்த பீகார் பயணத்தில் பிரதமர் தேசாய் கற்ற பாடத்தினால்தான், 20.12.1978-இல் நாடாளுமன்ற மக்கள் அவையில் ‘‘உடனே இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆய்வுக்குழு அரசினால் அமர்த்தப்படும்’’ என்று பிரதமர் மொரார்ஜி தேசாய் அறிவித்தார்.

**இது நாம் வட நாட்டில் பெற்ற முதல் வெற்றி.**

அப்போதைய பீகார் முதலமைச்சர் கர்ப்பூரி தாகூர் அவர்கள் ‘‘பீகாரில் அரசு வேலைகளில் 20 விழுக்காடு பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்’’ என 31.10.1978-இல் அறிவித்தார்.

**இது நாம் வடக்கே பெற்ற இரண்டாவது வெற்றி**

பீகார் பயணத்தில், கற்றபடியும், நாடாளுமன்றத்தில் அறிவித்தபடியும் பிந்தேசு வரி பிரசாத் மண்டல் தலைமையில் ‘‘இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் குழு 01.01.1979 அன்று அமைக்கப்பட்டது.

23.3.1979 புதுதில்லி போட் கிளப் மைதானத்துக்கு, பழைய தில்லி ஃபெரோஸ்ஷா கோட்லா கிரவுண்ட் மைதானத்திலிருந்து, 30,000 பேர் கொண்ட பேரணி புறப்பட்டது.

எல்லா மக்களும் அரியானா, இராசஸ்தான், பஞ்சாப், உ.பி., பீகார், மேற்கு வங்கம், தமிழ்நாடு, கேரளா, ஆந்திரம், கருநாடகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு, பட்டியல் வகுப்பு, பழங்குடி மக்களும், சிறுபான்மையினருமாகத் திரண்டனர்.

குறிப்பாகப், பேராசிரியர் சென்னை மு. நாகநாதன், டி.என். அனந்தநாயகி, சென்னை இரா. குசேலர், காஞ்சி தி.க. அரங்க சானகிராமன், க. சுப்பு போன்ற தமிழ்நாட்டுத் தலைவர்கள், போட் கிளப் மைதானத்தில் - வே. ஆனைமுத்து தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் எதிர்பாரா வண்ணம் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர்.

அது தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவும், டாக்டர் இராம் மனோகர் லோகியா 80ஆம் பிறந்த நாள் விழாவும் ஆகும்.

இராம் அவதேஷ் சிங் வரவேற்புரையாற்றினார். இந்தியத் துணைப் பிரதமர் பாபு ஜெகசீவன் ராம் கூட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

‘‘சமூகநீதிக்குப் போராடுவோம்’’ என்ற - தந்தை பெரியாரின் பேச்சு - எழுத்து இந்திமொழி நூலை மத்திய அமைச்சர் ராஜ் நாராயணன் வெளியிட்டார். பல கட்சிகளைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றினர்.

அண்மையில் 30.4.2019-இல், மறைந்த என் துணைவியார், ஆ.சுசீலா அவர்கள் அப்பேரணியிலும், பொதுக் கூட்டத்திலும் பங்கேற்றார் என்பதைப் பதிவு செய்கிறேன்.

25.3.1979 அன்று, அனைத்திந்தியப் பேரவையின் சார்பில், 25 பேர் கொண்ட குழுவினர், பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களைச் சந்தித்தோம்.

கடுமையான தொனியில் பிரதமர் எங்களிடம் பேசினார்; நாங்களும் கடும் தொனியில் பேசினோம்.

கடைசியில், ‘‘மண்டல் குழுவின் பரிந்துரை வரட்டும்; நான் அதை அமுல்படுத்துகிறேன்’’ என வாக்களித்தார்.

மண்டல் அவர்கள், 31.12.1980-இல், அப்போது பிரதமராக இருந்த இந்திராகாந்தியிடம் பிற்படுத்தப்பட் டோர் குழு அறிக்கையை அளித்தார்.''

அந்த அறிக்கையில் இந்துக்களில் 52 விழுக்காடு பிற்படுத்தப்பட்டவர்களும், சிறுபான்மையினரில் 52 விழுக்காடாக - சராசரி மொத்த மக்கள் தொகையில் 52 விழுக்காடு இருக்கிறார்கள் என்றும், அவர்களுக்கு 1963-ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத் தீர்ப்பை மனதில் வைத்து, கல்வியிலும் வேலைகளிலும் மத்தியிலும் மாநிலங்களிலும் 27 விழுக்காடு மட்டும் இடஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்தார்.

பிரதமர் இந்திராகாந்தி அமைச்சரவையில் உள்துறை அமைச்சராக இருந்த கியானி ஜெயில்சிங் மண்டல் பரிந்துரை பற்றி விவாதிக்க 25.1.1982 அன்று என்னை அதிகாரபூர்வமாக தில்லிக்கு அழைத்தார், நம் தோழர்களும் நானும் அவரிடம் வாதித்ததும், அவர் எங்களைத் தெளி வாகப் புரிந்து கொண்டதும் மிக முதன்மையாகும்.

மேலும், நானும் சேலம் அ. சித்தய்யன் அவர்களும் 29.4.1981, 03.03.1982 இப்படிப் பல நாள்களில், தில்லியில் அரசமைப்புச் சட்ட அவைக் கூடத்தில் (Constitution Club) இடஒதுக்கீடு பற்றிக் குறைந்தது 5 தடவைகள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட் டத்தை நடத்தினோம். அவர்களுக்கு, எங்கள் கோரிக் கை பற்றி அப்போது விளக்கினோம்.

29.4.1981இல், நடந்த அந்த முதல் நிகழ்ச்சிக்கு எல்லாக் கட்சிகளை யும் சார்ந்த 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வந் தார்கள். ஆனால், 03.03.1982 நாடாளுமன்ற உறுப்பி னர்கள் கூட்டத்திற்கு, ஏழு பேர் மட்டும் வந்தார்கள். இது என் மனதைப் பிசைந்தது.

04.03.1982 மதிய வேளை உணவுக்குப் பிறகு ''ஜெயில் சிங்கிடம் நான் தனியாகப் பேச வேண்டும்; நீங்கள் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று மதிப்புமிகு மறைந்த வாழப்பாடி கூ.இராமமூர்த்தி, எம்.பி., அவர்களிடம் தெரிவித்தேன்.

அவர் உடனேயே என்னை மாண்புமிகு ஜெயில் சிங் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று ''இவர் என் மதிப்பிற்குரியவர்; இவர் தனியாக உங்களிடம் பேச வேண்டுமாம்; இவருக்கு உதவி செய்யுங்கள்'' என்று சொன்னவுடனே, வாழப்பாடி போய்விட்டார்.

அடுத்தகணமே, மதிப்புமிகு ஜெயில் சிங் அவர்கள் தன் வலது காதை என் வாயில் வைத்து, "Tell Me" என்று சொன்னார்.

நான் "I don't have faith in Indira Gandhi : I have faith in you" என்றேன். மேற்கொண்டு பேசிட, என் வீட்டுக்கு வாருங்கள் என்று சொன்னார். உடனே, "I request you to place Mandal Recommendation Report on the table of the Parliament" என்று வேண்டிக் கொண்டேன்.

4.3.1982இல் மாலை 4.30 மணிக்கு உள்துறை அமைச்சர் ஜெயில் சிங் அவர்கள், **''இந்திய அரசு மண்டல் பரிந்துரையை அமுல்படுத்த ஒப்புக்கொள் கிறது; பிற்படுத்தப்பட்டவர்களுக்கு சாதி அடிப்படை யில் இடஒதுக்கீடு வழங்கப்படும்'' என்று உறுதி கூறுகிறது என நாடாளுமன்ற மக்கள் அவையில் அறிவித்தார்.**

இதைத் தம் அறையிலிருந்து கவனித்த பிரதமர் இந்திரா காந்தி, உடனே அன்று மாலையே 5.30 மணிக்கு நாடாளுமன்ற மேலவையில் **''இந்திய அரசு பிற் படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு அளிக்க ஒப்புக்கொள்கிறது; ஆனால் இடஒதுக்கீட்டைப் பொருளாதார அடிப்படையில் கொடுக்க இந்திய அரசு ஒப்புகிறது'' என்று, அவருடைய உண்மை நிலையைக் காட்டிவிட்டார்.** நிற்க.

1986 முதல் 1992 முடிய நம் பேரவைத் தலைவர் இராம் அவதேஷ் சிங் நாடாளுமன்ற மாநிலங்கள் அவை உறுப்பினராக இருந்தார். இராம் அவதேஷ் சிங் அன்றாடம் கேள்வி நேரத்தில், விடாமல் மண்டல் பரிந்துரை பற்றித் தவறாமல் வினா எழுப்பினார்.

**மேலும், 12.3.1990-இல், குடியரசுத் தலைவர் நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில், குறுக்கிட்டுக் கேள்வி கேட்டு, குடியரசுத் தலைவர் தொடர்ந்து பேச முடியாமல், இராம் அவதேஷ் சிங் அவர்கள் தடுத்துவிட்டார். இந்த நிகழ்ச்சி இந்தியாவை உலுக்கியது.**

இது பிரதமர் வி.பி. சிங் அவர்களைத் துணிவு கொள்ளச் செய்தது. 06.08.1990இல் பிற்படுத்தப்பட்டோருக்கு மய்ய அரசு வேலையில் 27 விழுக்காடு வழங்கப்படும் என அறிவித்து 13.08.1990இல் ஆணையும் பிறப்பித்தார். இதுவும் நாம் பெற்ற வெற்றி.

29.4.1978-இல் நாம் தொடங்கிய இந்தியப் பய ணத்தில், 18.10.1991, 19.10.1991, 20.10.1991 ஆகிய நாள்களில், தில்லியில், மவ்லங்கர் மண்டபத்தில் நடந்த மூன்று நாள் மாநாடுகளும் மிக முதன்மையாகும்.

18.10.1991 வெள்ளி மண்டல் பரிந்துரை அமலாக் கக் கருத்தரங்கு இந்தியக் கூட்டாட்சிக் கொள்கைக்

கருத்தரங்கு 19.10.1991 சனி மண்டல் பரிந்துரை போராட்ட விளக்க மாநாடு பெரியார் 113ஆவது பிறந்த நாள் விழா 20.10.1991 ஞாயிறு இந்தியக் கூட்டாட்சிக் கொள்கை விளக்க மாநாட்டுத் தீர்மானங்கள் நிறை வேற்ற தமிழ்நாட்டிலிருந்து, ஆடவரும் மகளிரும் - நாங்கள் 200 பேர், தில்லி மாநாடுகளுக்குப் போயிருந் தோம்.

அந்த மாநாட்டின் வழியாகத்தான், மா.பெ.பொ.க. ''இந்தியக் கூட்டாட்சி'' என்கிற கோட்பாட்டுக்குக் கால்கோள் நாட்டியது. அங்கு நடந்த வகுப்புவாரி உரிமை மாநாட்டில் தான், ''வகுப்புவாரி விகிதாசார உரிமைக்கு அடித்தள மிட்டது.''

அந்த மாநாட்டுக்குப் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ச.இராமதாசு அவர்கள், 400 தோழர்களுடன் வருகை தந்து சிறப்பித்தார்.

மூன்று நாள் மாநாடுகளுக்கும் தில்லி மாநகர மா.பெ.பொ.க. செயலாளர் ச.தமிழரசு, புதேரி தானப்பன், ஆகியோர் நிறையப் பங்களிப்புச் செய்தனர்.

மூன்று நாள் மாநாட்டை அடுத்து, 10 நாள்கள் பயணமாக, கான்பூர், அலிகர் (தங்கல்), லக்னோ (2 நாள் தங்கல்), பீகார் மாநிலம் பாட்னா (தங்கல்), மேற்கு வங்கம் - கல்கத்தா (தங்கல்) என, தொடர்வண்டி, வழியாக 50 ஆண்கள், 10 பெண்கள் ஆக 60 பேர் வடநாட்டுப் பயணத்தை மேற்கொண்டோம். எல்லா இடங்களிலும் அந்தந்த நகரத்திலிருந்த நம் பேரவைத் துணைத் தலைவர்கள், பொதுச் செயலாளர்கள் நல்ல உணவு, வசதியான தங்குமிடம், உள்ளூரில் பயணம் செய்யப் பேருந்து, ஆக எல்லா வசதிகளையும் செய்து அளித்தனர். எங்கள் வடநாட்டுப் பயணம் முடிந்து, 31.10.1991 அன்று சென்னை சென்ட்ரல் தொடர் வண்டி நிலையம் அடைந்தோம்.

எங்களோடு பயணம் வந்த 60 பேர்களும் மகிழ்ச்சி பொங்க, அவரவர் ஊருக்கு-வீட்டுக்குப் பயணப்பட்டோம்.


இவ்வளவு அலைச்சலையும் என்னுடன் பங்கு போட்டுக் கொண்ட என் தோழர்களையும், தோழியர் களையும் என்றும் மறவேன்.

20-10-1991 அன்று தொட்டு, வகுப்புவாரி விகிதாசார உரிமைக்குப் பாடுபட்ட நாம், இன்று, நம் கொள்கை எதிரிகளோடு வலிவாகப் போராட வேண்டிய ஈன நிலை யிலிருக்கிறோம்.

தொடர்ந்து போராடுவோம்! இடையறாப் போராட்டம், நம்மை வெற்றி நோக்கி இட்டுச் செல்லும்!

**1.2.2020** **- வே.ஆனைமுத்து**

## சேலம் ஆசிரியர் திரு.சு.துரைசாமி மறைவுற்றார்



சேலம் ஆசிரியர் திரு.சு.துரைசாமி அவர்கள் ஒரு முதுபெரும் சோஷ லிஸ்ட் சிந்தனையாளர். என்னை அறிவுத்தளத்தில் செதுக்கியவர். சோஷலிசக் கருத்துக்களை- குறிப்பாக டாக்டர் ராம் மனோகர் லோகியா அவர்களின் சோசலிசச் சித்தாந்தத்தைப் பெரிய அளவில் பரப்புரை செய்தவர். மா.பெ.பொ.க.பயிற்சி வகுப்புகள் நடத்தினார்.

தமிழகச் சட்டமன்றத்தில் நான்கு முறை உறுப்பி னராக இருந்த முதுபெரும் சோஷலிஸ்ட் தலைவர் திரு க.ர.நல்லசிவம், எழுமாத்தூர் திரு.மு. சென்னியப்பன், வழக்குரைஞர் திரு.கு. செங்கோட்டையன், செவ்வந்தி கி.வடிவேலு, கோவை திரு.கோ.ராம் மோகன் ஆகி யோர் இணைந்து 90களின் துவக்கத்தில் லோகியா அகாடமி என்று ஒரு சிறு அமைப்பைத் தொடங்கி அதன் தலைவராக, ஆசிரியர் துரைசாமி அவர்களும் அதன் செயலாளராக நானும் சிறிது காலம் செயல் பட்டோம். அப்பொழுது ஆசிரியர் அவர்கள் எழுதி இரண்டு முக்கியமான புத்தகங்களை வெளியிட்டோம். முதல் புத்தகம்"ஆகஸ்ட் புரட்சியும்- மறைக்கப்பட்ட உண்மைகளும்"''இரண்டாவது புத்தகம் ''இடஒதுக் கீடும் சமூக நீதியும்''. இந்த இரண்டு புத்தகங்களும் மிக முக்கியமான ஆவணங்கள். 98 வயதான ஆசிரியர் திரு.சு.துரைசாமி அவர்கள் சில மாதங்கள் உடல்நலக் குறைவாக இருந்து 17.01.2020இல் அவரது இல்லத்தில் மறைவுற்றார். மா.பெ.பொ.க.சார்பில் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உற்பத்தியின்போது மனிதர்கள் இயற்கை மீது மட்டும் செயலாற்றுவதில்லை. கூடவே ஒருவர் மீது ஒருவரும் செயற்படுகின்றனர். தம்மில் ஒருவரை ஒருவர் பாதித்தும் கொள்கின்றனர். ஒரு குறிப்பிட்ட முறையில் ஒத்துழைப் பதன் மூலமும் தமது செயற்பாடுகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வதற் மூலமுமே உற்பத்தி செய்கின்றனர். உற்பத்தியில் ஈடுபடும் பொருட்டு அவர்கள் ஒருவருடன் ஒருவர், திட்டவட்டமான தொடர்புகளையும் உறவுகளையும் உருவாக்கிக் கொள்ளவேண்டும். இந்த சமூகத் தொடர்புகள், உறவுகள் ஆகியவற்றுக்கு உள்ளேதான் மீதான அவர்களது இயக்கம், உற்பத்தி நடைபெறுகிறது.

**- காரல் மார்க்ஸ்**

# சவகர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் போராட்டம் உணர்த்தும் படிப்பினை

- க. முகிலன்

இந்தியாவில் தற்போது 940 பல்கலைக்கழகங்கள் உள்ளன. அரசின் ஆய்வறிக்கையின்படி அவற்றுள் முதலாவதாகத் திகழ்வது தில்லியில் உள்ள சவகர்லால் நேரு பல்கலைக் கழகம் (ச.நே.ப.) ஆகும். ச.நே.ப. 1969-இல் தொடங்கப் பட்டது. ச.நே.ப. தொடங்கப்பட்டது முதலே சுதந்தர மனப் போக்கிற்கும், எதையும் கேள்வி கேட்கும் அறிவாண்மைக் கும், அதிகாரத்துக்கு எதிரான போராட்டங்களுக்கும் பன் மைத்துவத்துக்கும் களமாக இருந்து வருகிறது. ச.நே.ப.-வில் படிப்பது பெருமைக்குரியதாக இளைஞர்களால் கருதப்படு கிறது. ச.நே.ப., ஒன்றிய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இயங்குவதாகும்.

1973-இல் ச.நே.ப. மாணவர்களின் போராட்டத்தின் விளைவாக மாணவர் சேர்க்கையில் சமூகத்திலும் பொரு ளாதாரத்திலும் பின்தங்கிய மாணவர்களுக்குக் கூடுதல் மதிப்பெண் வழங்கும் நடைமுறை பின்பற்றப்படுகிறது. பழங் குடியினர், பட்டியல் இனத்தவர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகிய பிரிவினருக்கு இடஒதுக்கீடு வழங்கப்படுவதுடன் மாற்றுத்திறனாளிகள், பெண்கள், மூன்றாம் பாலினத்தவர், வேளாண் தொழிலாளர்கள், ஊரகப் பகுதியினர், வடகிழக்கு மாநிலத்தவர், படை வீரர்களின் பிள்ளைகள் என்று வகைப் பிரித்து மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். எந்த அளவுக்குப் பின்தங்கிய நிலையினராக இருக்கின்றனரோ, அந்த அள விற்குக் கூடுதல் மதிப்பெண் தரப்படுகிறது.

ஆகவே, ச.நே.ப. மாணவர்களில் அய்ம்பது விழுக்காட்டி னருக்கு மேற்பட்டவர்கள் ஒடுக்கப்பட்ட-எளிய குடும்பங்களி லிருந்து வந்தவர்களாக இருக்கின்றனர். எனவேதான் பீகாரில் எளிய குடும்பத்திலிருந்து வந்த கன்னையா குமார் போன்றவர்கள் ச.நே.ப.-வில் மாணவர் தலைவராக வர முடிகிறது. ஒவ்வொரு மாணவரும் தன் முழு ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்கான சுதந்தரமான கல்விச் சூழல் ச.நே.ப.-வில் நிலவுவது அதன் சிறப்புக் கூறாகும். அடிப்படை அறிவியல், கலை, இலக்கியம், சமூக அறிவியல், அரசியல், வரலாறு, தத்துவம், மானுடவியல் என எண்ணற்ற துறை சார்ந்த கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. நாள்தோறும் ஆய் வரங்குகள், கருத்தரங்குகள், விவாதங்கள் நடந்துகொண்டே இருக்கின்றன. இந்தியாவிலும் அயல்நாடுகளிலும் உள்ள பல்துறை அறிஞர்கள் இவற்றில் கலந்துகொண்டு மாணவர் களுடன் உரையாடுகின்றனர். மாணவர் விடுதிகளில் இரவு களில் விவாதக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. சுதந்தரமான, அறிவார்ந்த சூழல் காரணமாக ச.நே.ப.-வில் படித்த வர்கள் இந்திய ஆட்சிப்பணி (IAS), இந்தியக் காவல் பணி (IPS) போன்ற உயர் பதவிகளிலும், பல்கலைக்கழகங்களில் பேராசிரியர் களாகவும், பல்துறை வல்லுநர்களாகவும் விளங்கி வருகின்றனர்.

2019 அக்டோபர் மாதம் ச.நே.ப. நிர்வாகம் மாணவர் களின் விடுதிக் கட்டணத்தை உயர்த்தியது. விடுதியின் விதி களை மாற்றியது. இதன்படி உணவு விடுதி களின் ஊழியர்கள், தங்கும் விடுதிகளின் பணியாளர்கள் ஆகி யோரின் ஊதியத்தை மாணவர்களே ஏற்க வேண்டும். மேலும் இச்செலவுக்காக ஆண்டு தோறும் பத்து விழுக் காடு கட்டணம் உயர்த் தப்படும். தற்போது நூலகம் 24 மணிநேர மும் திறந்திருப்பது என் பது இரவு 11 மணிக்கு மூடப்படும் என்று அந்த அறிவிப்பாணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. உடை கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன. கட்டண உயர்வால் பாதிக்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கள் படிப்பைத் தொடர முடியாத நிலை ஏற்படும் என்பதால் இந்த ஆணையைத் திருப்பப் பெறக்கோரி சவகர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் சங்கம் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர்; கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர்; ச.நே.ப. வளாகத்திற்குள்ளும், தில்லி வீதிகளிலும் ஊர்வலங்கள், பேரணிகள் நடத்தினர். மாணவர்களின் போராட்டத்திற்கு ச.நே.ப. ஆசிரியர் சங்கமும் ஆதர வளித்தது. கட்டண உயர்வைத் திரும்பப் பெறவேண்டும் என்கிற போராட்டத்தில் ஆர்.எஸ்.எஸ்.-இன் மாணவர் அமைப்பான அகில பாரதிய வித்தியார்தி பரிசத் (ஏபிவிபி) தொடக்கத்தில் கலந்து கொண்டது. நவம்பர் மாதம் விலகிக் கொண்டு ச.நே.ப. நிர்வாகத்துக்கு ஆதரவாகச் செயல்படத் தொடங்கியது.



*குண்டர்களால் தாக்கப்பட்ட மாணவர் சங்கத்தலைவர் அய்சேகோஷ்*

144 தடை ஆணையை மீறி ஊர்வலமாகச் சென்ற ச.நே.ப. மாணவர்களைக் காவல்துறையினர் தாக்கினர்; தளைப்படுத்தினர்; அவர்கள் மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்தனர். அந்நிலையில் மனித வள மேம்பாட்டு அமைச்சகம் ச.நே.ப.-வில் இயல்பு நிலை திரும்புவதற்கான வழிகளைக் கண்டறியுமாறு பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு (UGC)வின் தலைவர் வி.எஸ். சவுகான் தலைமையில் மூவர் கொண்ட உயர்நிலைக் குழுவை அமைத் தது. அக்குழு அளித்த அறிக்கையில், ''இப்போது உயர்த்தப்

பட்டுள்ள கட்டண உயர்வு முழுமையாகத் திரும்பப் பெறப்பட வேண்டும். ச.நே.ப.-வின் நிதிப்பற்றாக்குறையை யு.ஜி.சி. வழங்கும் எதிர்காலத்தில் கட்டணம் உயர்த்தப்படும் போது மாணவர்களின் பிரதிநிதிகளுடன் கலந்துபேசி முடிவெடுக்க வேண்டும்'' என்று பரிந்துரைக்கப்பட்டிருந்தது. உயர்கல்வித் துறையின் செயலாளர் இக்குழுவின் பரிந்துரைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

தில்லி உயர்நீதிமன்றம் இப்பிரச்சனையைத் தீர்க்க ச.நே.ப. நிர்வாகம் மாணவர்களுடன் பேச வேண்டும் என்று ஆணையிட்டது. அதன் பிறகே துணைவேந்தர் எம். ஜெகதீ சுகுமார் மாணவர் விடுதிகளின் மாணவர் தலைவர்களை அழைத்துக் கட்டணத்தைத் தரப்படுத்துவதற்காக ஒவ்வொரு மாணவரும் மாதந்தோறும் ரூ.5,000 கூடுதலாகக் கட்டணம் செலுத்த வேண்டும் என்பதற்கான காரணத்தை விளக்கினார். விடுதிகளின் மாணவர் தலைவர்கள் இதை ஏற்க மறுத்தனர். மாணவர் சங்கப் பிரதிநிதிகளுடன் பேசுமாறு கூறினர். அச்சமயத்தில் துணைவேந்தரும் மற்ற அதிகாரிகளும் பேச்சு வார்த்தைக் கூட்டத்திலிருந்து வெளியேறினர்.

2019 நவம்பர் 18 அன்று காவல்துறையினர் ச.நே.ப. வளாகத்திற்குள் நுழைந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்களைக் கடுமையாகத் தாக்கினர். இதற்குக் கல்வி யாளர்களும் எதிர்க்கட்சியினரும் கண்டனம் தெரிவித்தனர். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் ச.நே.ப. நிர் வாகம் 2019 நவம்பர் 25 அன்று ஓர் அறிக்கையை வெளி யிட்டது. அதில் உணவு விடுதிகளிலும் மாணவர்கள் தங்கும் விடுதிகளிலும் பணியாற்றும் ஊழியர்களின் செலவுகளை மாணவர்களே ஏற்க வேண்டும் என்று கூறுப்பட்டிருந்தது. 2019 திசம்பர் 9 அன்று நாடாளுமன்றத்தை நோக்கிப் பேரணியாகச் சென்ற மாணவர்களைக் காவல் துறையினர் தாக்கியதைக் கண்டித்தும், கட்டண உயர்வு திரும்பப் பெறப் பட வேண்டும் என்று கோரியும் மாணவர் போராட்டம் மேலும் தீவிரமடைந்தது. ச.நே.ப. வளாகத்தைச் சுற்றிலும் காவல் துறையினர் குவிக்கப்பட்டனர்.

இரண்டு மாதங்களாக மாணவர் போராட்டம் நடந்து வரும் நிலையில் குளிர்கால பருவ காலத்திற்கான (Semester) படிப்புக்கு 2020 சனவரி 1 முதல் 5ஆம் நாளுக்குள் மாண



*2019 நவம்பர் 23 அன்று தில்லி ஜந்தர் பகுதியில் சநேப மாணவர்கள் நடத்திய பேரணி*


*சநேப துணைவேந்தர் எம்.ஜெகதீஷ்குமார்*

வர்கள் பதிவு செய்ய வேண்டும் என்று ச.நே.ப. நிர்வாகம் அறிவித்தது. கட்டண உயர்வைத் திரும்பப் பெறாத வரையில் பருவப் படிப்புக்குப் பதிவு செய்ய மாட்டோம் என்று மாணவர் சங்கம் அறிவித்தது. ஆனால் ஏ.பி.வி.பி.யினர் பதிவு செய் வோம் என்று அறிவித்தனர். இரு பிரிவினருக்கும் இடையே மோதல் ஏற்படும் சூழல் நிலவியது. 2020 சனவரி 3 அன்று போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தகவல் தொடர்பு அறையில் நுழைந்து 'சர்வரை'ச் செயலிழக்கச் செய்ததுடன், கருவிகளைச் சேதப்படுத்தியதாக ச.நே.ப. நிர்வாகம் காவல் துறையில் புகார் அளித்தது. (அதன்பின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பதிலளித்த ச.நே.ப. நிர்வாகம், ``எங்கள் அலுவலகத்தின் சர்வர் அறை சூறையாடப்படவில்லை. கண்காணிப்புப் படக்கருவிகள் உடைக்கப்படவில்லை. மின் விநியோகம் இல்லாததால் சர்வர் சனவரி 3 அன்று செயலிழந்தது. கண்காணிப்புப் படக்கருவியில் அதனால் தொடர்ச்சியாகக் காட்சிகள் பதிவாகவில்லை'' என்று கூறியது - இந்து தமிழ் திசை 22.1.2020).

2020 சனவரி 5 மாலை ச.நே.ப. வளாகத்தில் சபர்மதி மாணவர் விடுதியின் (மாணவர் விடுதிகளுக்கு இந்திய ஆறுகளின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன). அருகில் முப்பது ஆசிரியர்களும் மாணவர் தலைவர் ஆய்சேகோஷ் உள்ளிட்ட இருநூறு மாணவர்களும் வளாகத்திற்குள் அமைதியான சூழலைக் கொண்டு வருவது பற்றிக் கலந்துரையாடல் கூட்டம் நடத்தினர். அச்சமயம் சுமார் எழுபது பேர் கொண்ட முகமூடி அணிந்த கும்பல் திடீரென வந்து மாணவர்களைக் கற்களாலும் தடிகளாலும் இரும்புக் கம்பிகளாலும் தாக்கினர். மேலும் விடுதிகளுக்குள் புகுந்து தலித்துகள், இசுலாமியர்கள், காஷ்மீர் மாணவர்களைக் குறிவைத்துத் தாக்கினர். அறைகளில் இருந்த பொருள்களை அடித்து நொறுக்கினர். சன்னல், கதவுகளை உடைத்தனர். பார்வைக்குறைபாடு உடைய சூரிய பிரகாசு என்கிற மாண வரின் அறையில் அம்பேத்கர் படம் வரையப்பட்டிருந்தது என்கிற காரணத்தாலேயே அவரைத் தாக்கினர்.

மாணவர் சங்கத் தலைவர் அய்சேகோசும் மற்றவர் களும் உதவி கோரி ச.நே.ப. நிர்வாகத்திற்கும் காவல் துறைக்கும் கைப்பேசி வாயிலாகத் தொடர்பு கொள்ள முயன்றனர். மாணவர் போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் ஆசிரியர்களும்



*விடுதி அறையில் அம்பேத்கர் படம் இருந்ததால் இந்துத்துவக் குண்டர்களால் தாக்கப்பட்ட பார்வைக் குறைபாடு உடைய மாணவர் சூரியப் பிரகாஷ்*

வெறிக்கும்பலால் தாக்கப்பட்டனர். அவர்களின் குடியிருப்பு களும் மகிழுந்துகளும் தாக்கப்பட்டன. மூன்று மணி நேரம் இத்தாக்குதல் நீடித்தது. ச.நே.ப. நிருவாகம் இத்தாக்குதலைத் தடுக்க காவல்துறையை அழைக்கவில்லை. பல் கலைக்கழ கத்தின் பாதுகாப்புப் பிரிவினரும் இதைத் தடுக்க வில்லை. தெரு விளக்குகள் திட்டமிட்டு அணைக்கப்பட்டு, வெறிக்கும்பல் வெளியேறிட உதவி செய்யப்பட்டது.

சனவரி 5 அன்று அடையாள அட்டை உடைய மாண வர்கள் மட்டுமே காவல்துறையால் ச.நே.ப. வளாகத்திற்குள் அனுமதிக்கப்பட்டனர். அவ்வாறெனில் வெளியிலிருந்து குண்டர்கள் எப்படி உள்ளே நுழைந்தார்கள்? ஆர்.எஸ்.எஸ்.-இன் மாணவர் பிரிவான ஏ.பி.வி.பி.யினர் ச.நே.ப. நிர் வாகத்தின்-காவல் துறையின் துணையுடன் வெளியிலிருந்து இந்துத்துவ குண்டர்களை வரவழைத்து இத்தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள். போராடும் மாணவர்களை அச்சுறுத்தி அடிபணியச் செய்வதே இத்தாக்குதலின் நோக்கமாகும். அய்தராபாத் பல்கலைக்கழக நிர்வாகமும் ஏ.பி.வி.பி.யினரும் சேர்ந்து தலித் மாணவர் ரோகித் வெமுலாவை 2016 சனவரி 17 அன்று தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளினர். அதே ஆண்டு பிப்பிரவரி மாதம் ச.நே.ப.மாணவர் சங்கத் தலைவர் கன்னைய குமார் ஏ.பி.வி.பி.யினரால் தாக்கப்பட்டார். அவர் மீது பல வழக்குகள் பதியப்பட்டன. சாவர்கர் கூறிய 'அரசியலை இந்து மயமாக்கு; இந்து மதத்தை இராணுவ மயமாக்கு' என்கிற கோட்பாட்டைச் செயல்படுத்துவதில் முன்னணியில் நிற்கும் ஏ.பி.வி.பி. பல்கலைக்கழகங்களை இந்துத்துவ மயமாக்குவதற் காக நரேந்திர மோடி 2014-இல் ஆட்சிக்கு வந்தது முதல் வன்முறை வழிகளைக் கையாண்டு வரு கிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதிதான் ச.நே.ப. மாணவர்கள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல். இத்தாக்குதலில் பலரின் மண்டை உடைந்தது; கை, கால் எலும்புகள் முறிந்தன. மாணவர் சங்கத் தலைவர் அய்சேகோஷ் என்கிற இனப் பெண்ணின் தலையில் 16 தையல்கள் போடப்பட்டன. அவரின் இடது கை எலும்பு முறிந்தது. காயமடைந்த அய்ம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு தில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் மருத்துவ உதவி செய்யப்பட்டது.


2019 திசம்பரில் ஜாமியாமி லியா இசுலாமியா பல் கலைக்கழகம் மற்றும் அலிகர் முசுலீம் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் வளாகத்திற்குள் நுழைந்து காவல் துறையினர் மாணவர்களைத் தாக்கியதற்கு மக்களிடமிருந்து எதிர்ப்பு எழுந்தது போல் ச.நே.ப. மாணவர்கள் மீது சனவரி 5 அன்று நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் கடும் கண்டனங்கள் எழுந்தன. இந்திய அளவில் பல்கலைக்கழகங்களிலும் கல்லூரி களிலும் மாணவர்கள் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். உலக அளவில் பல்துறை சார்ந்த 250 அறிஞர்கள் கையொப்பமிட்ட அறிக்கை மூலம் இத்தாக்குதலைக் கண்டித்தனர்.

இத்தாக்குதல் நடந்து அய்ந்து நாள்கள் கழித்து தில்லி காவல்துறை இத்தாக்குதலுக்கு ச.நே.ப. மாணவர் சங்கத் தலைவர் அய்சேகோஷ் உள்ளிட்ட ஏழு பேரும் ஏ.பி.வி.பி.யினர் இரண்டு பேரும் காரணம் என்று கூறி இத்தாக்கு தலுக்கு எழுந்த கண்டனத்தைத் திசை திருப்ப முயன்றது. முகமூடி யணிந்து தாக்குதல் நடத்திய காட்சிகள் வெளியான பிறகும் இதுவரை (சனவரி 26) அவர்களில் ஒருவரையும் கைது செய்யவில்லை என்பது ஏ.பி.வி.பி.யினர்-காவல் துறையினரின் கூட்டுச் சதியே இத்தாக்குதல் என்பதைக் காட்டுகிறது.

சவகர்லால் நேரு பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட காலம் முதலே சுதந்தரமான சிந்தனைப் போக்கிற்கும், மாறு பட்ட கருத்துகளை அறிவார்ந்த முறையில் வெளிப்படுத்து வதற்கும் இடமளிப்பதாக விளங்கி வருவதால் மாணவர்களுக் கிடையே வன்முறையான மோதல் நிகழ்ந்ததில்லை. கம் யூனிஸ்டுகளின் ஆதிக்கத்தின் கீழ் ச.நே.ப. மாணவர்கள் இருப்பதாக சங் பரிவாரங்கள் தொடர்ந்து கூறி வந்தன. ஆனால் 2008-இல் மேற்கு வங்கத்தில் சிங்கூரில் டாடாவின் சிறிய மகிழுந்து திட்டத்திற்கு மேற்கு வங்கத்தில் சி.பி.எம். தலைமையிலான ஆட்சி உழவர்களின் நிலத்தைப் பறித்து அளித்ததை எதிர்த்து ச.நே.ப. மாணவர்கள் போராட்டம் நடத்தினர். சி.பி.எம். கட்சியுடன் தொடர்புடைய இந்திய மாணவர் கூட்டமைப்பு (SFI) அதன்பின் பத்து ஆண்டுகள் மாணவர் தேர்தலில் வெற்றி பெற முடியவில்லை. பிரதமராக இருந்த இந்திராகாந்தி ச.நே.ப.-இன் அலுவல்சாரா துணைவேந்தர் பொறுப் பிலிருந்து விலக வேண்டும் என்று ச.நே.ப. மாணவர்கள் பேரணியாக இந்திராகாந்தி வீட்டிற்குச் சென்று விண்ணப்பமளித்தனர். எனவே ச.நே.ப. வளாகம் இடதுசாரி களின் கூடாரமாக இருக்கிறது என்று சங்பரிவாரங்கள் கூறுவது தங்கள் ஆதிக்கத்தை அங்கு நிலைநாட்டுவதற்கான சூழ்ச்சியே ஆகும். ச.நே.ப. மாணவர்கள் எந்தவொரு ஆதிக் கத்தையும் எதிர்த்துப் போராடும் சனநாயகப் பண்பு கொண்ட வர்கள் என்பதே உண்மையாகும்.

தற்போது ச.நே.ப. துணைவேந்தர் எம். ஜெகதீசுகுமார் 2016 சனவரியில் இப்பதவியில் அமர்த்தப்பட்டார். அதுமுதல் நிர்வாக அலகுகளின் தலைமைகளிலும் துறைத் தலைவர் பதவிகளிலும் தனக்குக் கீழ்படிந்து நடக்கக் கூடியவர்களையே நியமித்தார். தனித்து முடிவெடுக்கக் கூடிய அமைப்புகளின் அதிகாரங்களைப் பறித்தார். இப்போக்கினை ஆசிரியர்களும் மாணவர்களும் எதிர்த்தனர். இண்டர்-ஹால் (Inter-Hall)

நிர்வாகக் குழுவில் மாணவர்களின் பிரதிநிதித்து வம் குறைக்கப்பட்டது. இக்குழுதான் விடுதிக் கட்ட ணத்தை உயர்த்தியது. துணைவேந்தரின் சர்வாதி காரப் போக்கும், முறைகேடுகளும் மாணவர்களின் போராட்டத்துக்கு மூலகாரணங்களாக உள்ளன. எனவே மாணவர்கள் துணைவேந்தர் பதவியி லிருந்து ஜெகதீசுகுமார் விலகவேண்டும் என்று கோருகின்றனர். மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் கட்டண உயர்வு சிக்கலை மாணவர்களுடன் கலந்து பேசி தீர்க்குமாறு இரண்டு தடவை அறிவுறுத் தியும் அதன்படி செயல்படாத ஜெகதீசு குமாரைத் துணைவேந்தர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று பா.ச.க.வின் முன்னாள் அமைச்சர் - மூத்த தலைவர் முரளி மனோகர் ஜோஷி கூறியுள்ளார்.



*2019 திசம்பர் 9 அன்று நாடாளுமன்ற நோக்கிப் பேரணியாகச் சென்ற சநேப மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தும் காவல் துறையினர்*

தில்லியில் சவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் விடுதிக் கட்டண உயர்வை எதிர்த்து மாண வர்கள் நடத்தும் போராட்டம் என்கிற அளவில் இச்சிக்கலைச் சுருக்கிப் பார்க்க முடியாது. இதை சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியில் வைத்து விரிவாக ஆராய வேண்டி யுள்ளது. அப்போதுதான் இதன் பின்னால் உள்ள சாதிய - மத - அரசியல் ஆதிக்கத்தை விளங்கிக் கொள்ள முடியும்.

1990 முதல் ஒன்றிய அரசும் மாநில அரசுகளும் தாராள மயம், தனியார் மயம், உலக மயம் எனும் கொள்கையைச் செயல்படுத்தி வருவதால் விளைந்த முதல் பெருங்கேடு, கல்வி அளிக்கும் பொறுப்பிலிருந்து அரசு விலகி, கல்வி தனியார்மயமாக்கப்பட்டதே ஆகும். அரசிடம் கல்விக்குச் செலவிட பணம் இல்லை என்பதால் கல்வியில் தனியார் அனுமதிக்கப் படுவதாகக் கூறப்பட்டது. மக்களாட்சியில் பள்ளிக் கல்வி வரை இலவயமாகவும், உயர்கல்வியை மிகக் குறைந்த செலவிலும் அளிக்க வேண்டியது அரசின் கடமை அல்லவா! 1990 வரை உயர்கல்வி கிட்டத்தட்ட முழுவதுமாக அரசால் அளிக்கப்பட்டது.

ச.நே.ப.வில் கட்டண உயர்வுக்கான காரணம் ஆண்டு தோறும் ச.நே.ப. வரவு-செலவில் ரூ.45 கோடி பற்றாக் குறை ஏற்படுவதே ஆகும் என்று சொல்லப்படுவது வெட்கக் கேடானதல்லவா! 2006-2007-ஆம் ஆண்டு முதல் கல்விச் செலவுக்காகக் கூடுதல் வரி வசூலிக்கப்படுகிறது. இதுகுறித்து 2017-ஆம் ஆண்டு தலைமைக் கணக்குத் தணிக்கை அலுவலக அறிக்கை நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டது. கல்விச் செலவுக் காகக் கூடுதல் வரியாகத் திரட்டப்பட்ட நிதியில் 7.73 விழுக்காடு மட்டுமே செலவிடப்பட்டுள்ளது; மீதி ரூ.83,497 கோடி செலவிடப் படாமல் இருக்கிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஒன்றிய அரசு கல்விக்காக நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் (ஜி.டி.பி.) 2013-2014-இல் 0.6 விழுக்காடு ஒதுக்கியது. 2018-19-இல் இது 0.2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதாவது ரூ.64,500 கோடி என ஒதுக்கப்பட்டது. ரூ.41,200 கோடியாகக் குறைக்கப்பட்டு உள்ளது. அதேசமயம் பெருமுத லாளிகளுக்கு அளிக்கப்படும் வரிச்சலுகை 2013-14-இல் ஜி.டி.பி.யில் 1.7 விழுக் காடாக இருந்தது. 2017-18-இல் 2.8 விழுக்காடாக உயர்த்தப் பட்டுள்ளது. அதாவது 2018-19-ஆம் நிதி ஆண்டில் ரூ.1,67,000 கோடி பெருமுதலாளிய நிறுவனங் களுக்கு வரிச்சலுகையாக அளிக்கப்பட்டுள்ளது. இதைக் குறைத் தாலே அரசின் கல்விச் செலவுக்குத் தேவையான நிதி கிடைக்கும். ஆனால் இந்த அரசுகள் முதலாளிகளின்-பெருவணிகர்களின் நலன் காப்பவை; வெகு மக்களுக்கு விரோதமானவை என்பதை மக்கள் புரிந்து கொண்டு போராடும் நிலை ஏற்படும் போது தான் இந்த மாற்றம் நிகழும்.

பெருமுதலாளிய நிறுவனங்களுக்கு வரிச்சலுகைகள் அளித்தால்தான் தொழில்களில் முதலீடுகள் பெருகும்; நாட்டின் உற்பத்தி வளர்ச்சியடையும்; புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும் என்று அரசும், முதலாளியப் பொருளியல் வல்லு நர்களும் கூறுகின்றனர். ஆனால் 2016 நவம்பரில் பண மதிப்பு இழப்பு நடவடிக்கை எடுத்தபின் - 2017-இல் சரக்கு-சேவை வரிவிதிப்பை (GST) நடைமுறைப்படுத்திய பின் ஒன்றிய அரசு பெருமுதலாளிய நிறுவனங்களுக்கு இன்னும் கூடுதலான வரிச்சலுகைகளையும், வங்கிக் கடன்களையும் வாரி வழங்கிய போதிலும் பொருளாதாரம் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது; கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வேலையின்மை இருக்கிறது.

ஆனால் ஆண்டுதோறும் இந்தியாவில் கோடீசுவரர் களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே போகிறது. உலக வறுமையை ஒழிப்பதற்கான 'ஆக்ஸ்ஃபாம்' அமைப்பு 2020 சனவரியில் வெளியிட்ட அறிக்கையில், "இந்தியாவில் பணக் காரர்களின் சொத்தில் ஒவ்வொரு நாளும் ரூ.2,200 கோடி அதிகரிக்கிறது. மேல் தட்டில் உள்ள 10 விழுக்காட்டினரிடம் நாட்டின் வளத்தில் 77.4 விழுக்காடு இருக்கிறது. உச்சியில் உள்ள 1 விழுக்காட்டினரிடம் 51.53 விழுக்காடு சொத்து இருக் கிறது. கீழ்த்தட்டில் உள்ள 60 விழுக்காட்டினரிடம் தேசிய வளத்தில் 4.8 விழுக்காடு மட்டுமே உள்ளது" என்று தெரி விக்கப்பட்டுள்ளது (இந்து தமிழ் திசை 24.01.2020). எனவே கல்விக்கு நிதி ஒதுக்கிட அரசிடம் பணம் இல்லை என்கிற காரணம் ஒரு ஏமாற்று.

ச.நே.ப. மாணவர் போராட்டத்தின் போது தொலைக் காட்சி விவாதங்களில் பார்ப்பன - மேல்சாதி அறிவாளிகள் இரண்டு கருத்துகளை முன்வைத்தனர். வசதியற்ற மாணவர் களுக்குக் குறைந்த கட்டணமும், மற்றவர்களுக்கு அதிகக் கட்டணமும் நிர்ணயிக்கலாம் என்று கூறினர். இடஒதுக் கீட்டுப் பிரிவின்கீழ் சேரும் மாணவர்களை உயர்கல்வி நிறுவனங்களில் இழிவாக நடத்துவது போல், குறைந்த கட்ட ணத்தில் சேரும் மாணவர்களையும் இழிவாக நடத்துவார் கள். அடுத்தகட்டமாக வசதியற்ற மாணவர்களுக்கு மிகவும் குறைந்த இடங்களை மட்டும் ஒதுக்கிவிட்டு, பெரும் பகுதி இடங்களை இவர்களே கைப்பற்றிக் கொள்வார்கள். மேல்சாதி ஏழைகளுக்கு 10 விழுக்காடு இடஒதுக்கீடு என்பதன் சூழ்ச்சியைப் புரிந்து கொண்டால் இவர்களின் உள்நோக்கத்தை விளங்கிக் கொள்ள முடியும். இவ்வாறு பேசுகின்றவர்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் உயர் கல்வி பெற்ற நயவஞ்சகர்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பார்ப்பன-மேல்சாதி அறிவாளிகள் முன்வைத்த மற்றொரு கருத்து - மக்களின் வரிப்பணத்திலிருந்து தரப்படும் கல்வி மானியத்தில் படிக்கும் மாணவர்கள் படிக்கின்ற வேலையை மட்டும் செய்யாமல், அரசுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடலாமா? என்பதாகும். ச.நே.ப. மாணவர்கள் எந்த வொரு சமூக, அரசியல் ஆதிக்கத்திற்கும் எதிராகத் தொடர்ந்து போராடி வருபவர்கள். சமூக அநீதிகளையும் அரசியல் அட்டூழியங்களையும் எதிர்த்துக் கேள்வி கேட்காமல் ஆளும் வர்க்கத்தின் அநியாயங்களுக்கு அடங்கி ஒடுங்கி நடக்கும் இளைஞர்களை உருவாக்க வேண்டும் என்பதே பார்ப்பன-மேல்சாதி ஆதிக்கவாதிகளின் நோக்கமாகும். மேலும் காலங் காலமாக சாதியின் பேரால் கல்வி உரிமை மறுக்கப்பட்ட சூத்திரர்களையும் தலித்துகளையும் கட்டண உயர்வு என்கிற ஆயுதத்தால் உயர்கல்வி நிறுவனங்களிலிருந்து விரட்டுவதும் இவர்களின் நோக்கமாகும்.

இந்தியாவில் தற்போது 940 பல்கலைக்கழகங்கள் உள்ளன. இவற்றுள் தனியார் பல்கலைக்கழகங்கள் 340, நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் 126 (தனியார் துறையில் மட்டும் 466), ஒன்றிய அரசின் கீழ் 50, மாநில அரசுகளின் கீழ் 424 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. இவற்றில் மொத்தம் 40,000 கல்லூரிகள் உள்ளன. இவற்றுள் 70 விழுக்காடு கல்லூரிகள் தனியாரிடம் உள்ளன. உயர்கல்வி எந்த அளவுக்குத் தனியார்மயமாகி உள்ளது என்பதையே இது காட்டுகிறது. தனியார் கல்லூரிகளில் இடஒதுக்கீடு இல்லை. எனவே பிற்படுத்தப்பட்ட, பட்டியல் இன, பழங்குடி வகுப்பு மாணவர்கள் அரசுக் கல்லூரிகளை தம் உயர் கல்விக்குச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் கட்டணத்தை உயர்த்துவது ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் உயர்கல்வி வாய்ப்பைப் பறிப்ப தாகும். கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்தியத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களில் (IIT) கட்டணம் உயர்த்தப் பட்டதால் இடஒதுக்கீட்டின் மூலம் இடம்பெற்ற மாணவர் ஒருவர் ஆண்டிற்கு மூன்று இலக்கம் உருபாவுக்குமேல் செலவு செய்ய வேண்டியுள்ளது. கடுமையாக உழைத்துப் படித்து இத்தகைய உயர் கல்வி நிறுவனங்களில் சேருவதற் கான தகுதியைப் பெற்றாலும் பெருந்தொகையைச் செலவிட முடியாமையால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்ட முடியாத நிலை ஏற்படுகிறது.

1990-க்குப்பின் உயர்கல்வி என்பது பெருமுதலாளிய நிறுவனங்களில் வேலை செய்வதற்கான இளைஞர்களை உருவாக்குவதே என்பதாகிவிட்டது. முதலாளியச் சந்தையில் கல்வி ஒரு பண்டம் போல் ஆகிவிட்டது. பன்னாட்டு நிறு வனங்களுக்கு ஆங்கிலம் கற்றவர்கள் தேவை என்பதால் மழலையர் பள்ளி முதல் உயர்கல்வி வரையில் ஆங்கில வழிக் கல்வி மேலோங்கியது. முதலாளியச் சந்தையின் தேவைக்கு ஏற்ப பொறியியல், மேலாண்மை இயல், வணிக வியல் கல்லூரிகள் புற்றீசல் போல் முளைத்தன. இத்தனியார் கல்வி நிறுவனங்கள் கட்டுத்தளையற்ற கல்வி வணிகக் கொள்ளையில் ஈடுபட்டு வருகின்றன. பள்ளிகளையே முதன் மையாகக் கொண்டுள்ள வேலம்மாள் கல்வி நிறுவனங்களில் இந்த சனவரி மாதம் வருமான வரித் துறையினர் நடத்திய ஆய்வில் ரூ.100 கோடிக்குமேல் வரி ஏய்ப்பும் ரூ.520 கோடிக்குக் கணக்கில் காட்டப்படாத சொத்தும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேலம்மாள் கல்விக் குழுமம் ஒரு மீன்தான்; திமிங்கிலங்கள் நிறைய இருக்கின்றன. பள்ளி களிலும் கல்லூரிகளிலும் அதிகக் கட்டணம் வாங்குவது, ஆசிரியர்களுக்கு அடிமாட்டு விலையில் ஊதியம் தருவது ஆகியவற்றின் மூலமே கல்வி வணிகக் கொள்ளை நடந்து வருகிறது. உயர் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் இக்கொள் கையில் பங்கு பெறுகின்றனர்.

கல்வியின் நோக்கம் வயிற்றுப் பிழைப்புக்கான வேலைக் குச் செல்வது என்பதைத் தாண்டி, மனித விழுமியங்களை அடைவதற்கான வாயில்களைத் திறப்பதாக இருக்க வேண்டும். அரசுத் துறையில் - தனியார் துறையில் அமைப்பு சார்ந்த பிரிவில் (Organised Sector) 8 விழுக்காட்டினர் மட்டுமே வேலை செய்கின்றனர். மீதி 92 விழுக்காட்டினர் அமைப்பு சாராப் பிரிவுகளில் வேலை செய்கின்றனர். எனவே கல்வி என்பது முதலாளியச் சந்தையின் தேவையை நிறைவு செய்வது என்பதுடன் சுருங்கி நிற்காமல், ஒவ்வொரு மனிதனிடமும் உள்ள ஆற்றல்களும் அறிவும் முழுமையாக வெளிப்படு வதற்கான வாய்ப்பை அளிப்பதாகவும், மானுட விழுமியங் களைப் பேணி வளர்ப்பதாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் எல்லாத் தளங்களிலும் சமூகம் மேம்பாடு அடையும். கல்வி அளிக்கும் பொறுப்பு அரசிடம் இருக்கும் போது மட்டுமே இத்திசை நோக்கிப் பயணிக்க முடியும்.

உயர்கல்வியில் தனியார் மயத்தைப் படிப்படியாகக் குறைத்து, அரசு உயர் கல்வி நிறுவனங்களைப் பெருக்க வேண்டும். அப்போதுதான் ஒடுக்கப்பட்ட வகுப்பு இளைஞர் கள், குறிப்பாகப் பெண்கள் உயர்கல்வி வாய்ப்பைப் பெற முடியும். சவகர்நேரு பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம் ஒட்டுமொத்த ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் உயர்கல்விக்கும், சமூக மேம்பாட்டுக்குமானது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய போராட்டங்களுக்கு மக்கள் துணைநிற்க வேண்டும்.

# குடியுரிமைத் திருத்தச் சட்டம் - 2019

**கண-குறிஞ்சி**

நாடாளுமன்றத்தில் திசம்பர் 9ஆம் நாள் அவசர அவசரமாக அறிமுகம் செய்யப்பட்டு, விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாளிலேயே நள்ளிரவு 12 மணிக்கு இந்தச் சட்ட மசோதா வாக்கெடுப்பின் மூலம் மக்களவையில் நிறைவேறியது. பிறகு அது மாநிலங்கள் அவையிலும் நிறைவேற்றப் பட்டது.

2014 திசம்பர் 31-க்கு முன்பு இந்தியாவுக்குள் நுழைந்த ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளைக் சேர்ந்த இந்துக்கள், சீக்கியர்கள், பார்சிகள், சமணர்கள், பௌத்தர்கள் மற்றும் கிருத்துவர்கள் ஆகிய ஆறு பிரிவினருக்கு இந்தியக் குடியுரிமை வழங்க இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் ஆகியவை இந்தியாவின் அண்டை நாடுகள் என்பதாலும், அவை மத அடிப்படையிலான அரசுகள் என்ப தாலும், அங்குள்ள இந்த ஆறு பிரிவினரும் பெரும்பான்மை மதமான இசுலாம் மதத்தின் ஒடுக்குமுறைக்கு உள்ளாகின்றனர் என்பதாலும் இந்தச் சலுகை வழங்கப்படுகிறது என இந்திய அரசின் சார்பாக விளக்கம் தரப்பட்டது.

### விடை தெரியாத சந்தேகங்கள்

அரசின் அறிவிப்புக் குறித்துப் பல்வேறு ஐயங்கள் எழுகின்றன. இந்தியாவைச் சுற்றி எட்டு அண்டை நாடுகள் இருக்கும் பொழுது, மூன்று நாடுகள் மட்டும் ஏன் எடுத்துக் கொள்ளப்பட்டன? குறிப்பாக நேபாளம், பூடான், மியன்மார் போன்ற அண்டை நாடுகளை வேண்டுமென்றே தவிர்த்தது ஏன்? இந்தியாவுடன் அதிகத் தொடர்பில்லாத ஆப்கானிஸ் தானத்தை இணைத்துக் கொண்ட பொழுது, இந்தியாவுடன் மிக நெருக்கமான இலங்கையைத் தவிர்த்தது ஏன்? ஈழத் தமிழர்களை மென்மேலும் நசுக்க வேண்டும் என்பதாலா?

மேலே குறிப்பிடப்பட்ட ஆறுபிரிவினரைத் தவிர, வேறு பலரும் அரசின் ஒடுக்குமுறைக்கு உள்ளாகி வருகின்றனரே? எடுத்துக்காட்டாக சீனாவில் திபெத்திய பவுத்தர்கள், உய்குர் இசுலாமியர்கள், பாகிஸ்தானில் அஹமதியர்கள், ஷியா முசுலீம்கள், பலூச்சுகள் போன்றோரும், ஆப்கானிஸ்தானில் ஹசாரா பிரிவினரும் கடுமையான துன்புறுத்தலுக்கு ஆளாகி வருகின்றனரே? அவர்களுக்குக் குடியுரிமை வழங்குவதில் என்ன தயக்கம்? அதே போல் உலகிலேயே மிகக் கொடுமையான மதஒடுக்குமுறைக்கு உள்ளாகி வரும் மியான்மர் ரோஹிங் கியாக்களுக்கு ஏன் குடியுரிமை வழங்கப்படவில்லை? மேலும் 3 நாடுகளைச் சேர்ந்த கிருத்துவர்களுக்குக் குடியுரிமை வழங்கப்படும் பொழுது, இந்தியாவின் அண்டை நாடான பூடான் கிருத்துவர்களுக்கு அச் சலுகை ஏன் நீட்டிக்கப்படவில்லை?

மத ஒடுக்குமுறையால் பாதிக்கப்பட்டவர்களுக்குத்தான் இந்தியக்குடியுரிமை என்றால், ஆயிரக்கணக்கான இந்துக் கோயில்களை இடித்து, ஈழத்தமிழர்கள் மீது பௌத்த மதத்தைத் திணிக்கும் இந்து மதத்தைச் சார்ந்த இலங்கைத் தமிழர்களுக்குக் குடியுரிமை தரத் தயக்கம் காட்டுவது ஏன்? தமிழர்கள் என்றாலே தனிமைப்படுத்தும் ஒரு தலைப்பட்சமான அணுகு முறைதான் இதற்குக் காரணமா?

அது என்ன "மதஒடுக்குமுறை" எனும் அளவுகோல்? அரசியல் ஒடுக்குமுறை, இன ஒடுக்குமுறை போன்றவற்றால் பாதிக்கப்படுவர்களைக் கணக்கில் கொள்ளவில்லையே? அது ஏன்? அவர்கள் மீது மனிதநேயம் இல்லையா?

மத அடிப்படையில் மட்டும் குடியுரிமை அரசியல் சட்டம் 14ஆம் பிரிவுக்கு எதிரானது அல்லவா?

குடியுரிமை வழங்குவதற்கு மதத்தை அடிப்படையாகக் கொள்ளும் அணுகுமுறை உலகில் எந்த நாட்டிலும் இல்லையே? இங்கு மட்டும் ஏன் இந்த வேண்டாத வேலை?

இவற்றைப் போன்ற எண்ணற்ற கேள்விகள் எழுப்பப்பட்டாலும், இந்திய அரசிடமிருந்து ஏற்கத்தக்க விளக்கம் ஏதும் இதுவரை வரவில்லை.

மதத்தால் முசுலீம்களையும், இனத்தால் தமிழர்களையும் கருவறுக்கும் இரகசியச் சதியா? எனும் குடியுரிமைத் திருத்தச் சட்டம் என்பது திட்டமிட்டு இசுலாமியர்களையும், 30 ஆண்டு களாக அகதிகளாக அல்லலுறும் ஈழத் தமிழர்களையும் தனிமைப்படுத்திப் பழி வாங்கும் நடவடிக்கைதான் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இந்தியா இதுவரை பேணி வந்த "மதச்சார்பின்மை" எனும் விழுமியத்திற்கு இது முற்றிலும் முரணான நிலைப்பாடாகும்.

தேசியக் குடிமக்கள் பதிவேடு / தேசிய மக்கள் தொகைப் பதிவேடு என்றால் என்ன? மக்கள் தொகைப் பதிவேடு என்பது வழக்கமாக எடுக்கப்படும் பொதுமக்களின் எண்ணிக்கை மற்றும் விவரம் (சென்சஸ்) மட்டும் குறித்ததன்று. அவரது பெற்றோர் - மூதாதையர் ஆகியோரது பிறந்த நாள், பிறந்த இடம் போன்ற வற்றையும் இது கோருகிறது.

### அதைத் தொடர்ந்து வரும் தேசியக் குடிமக்கள் பதிவேடு

ஒருவர் இந்தியக் குடிமகன் தானா என்பதைத் தீர்மானிக்க அவரது பெற்றோர் மற்றும் மூதாதையரின் பிறந்த நாள் சான்றிதழ் போன்றவற்றைக் கோருகிறது. இது எவ்வளவு பெரிய பேராபத்து?

ஆனால் இந்தியா முழுவதும் இவை நடைமுறைப்படுத் தப்படும் என நாடாளுமன்றத்திலேயே உள்துறை அமைச்சர் அமித்ஷா உறுதிபடப் பிரகடனப்படுத்தி உள்ளார்.

### அசாமில் நடைபெற்றது என்ன?

அசாமில் குடிமக்கள் பதிவேடு ஏற்படுத்திய பாதிப்புகளைப் பெரும்பாலோர் அறிவார்கள். அசாமில் எடுக்கப்பட்ட கணக்கீட்டின்படி இந்தியக்குடியுரிமை இல்லாத " அந்நியர்கள் " என 19 இலட்சம் பேர் கண்டறியப் பட்டுள்ளனர். இதில் 7 இலட்சம் பேர்தான் இசுலாமியர், மீதியுள்ள 12 இலட்சம் பேர் இந்துக்கள் எனும் அதிர்ச்சிகரமான உண்மை வெளியானது. இப்பொழுது கொண்டு வந்திருக்கும் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தைப் பயன்படுத்தி இந்துக்களுக்குக் குடியுரிமை வழங்கி விட முடியும். ஆனால் எஞ்சியுள்ள ஏழு இலட்சம் முசுலீம்கள் தடுப்பு (வதை) முகாமுக்கு அனுப்பப்படுவார்கள் என்றால், அது எத்தனை நாளைக்கு? அதற்கு எவ்வளவு கோடி ரூபாய் ஆண்டுதோறும் செலவாகும்? இந்தியப் பொருளாதாரம் அதல பாதாளத்தில்

விழுந்து கிடக்கும் இந்த நெருக்கடியான வேளையில், இதெல்லாம் சாத்தியமா? மேலும் முன்னாள் குடியரசுத் தலைவராகிய பக்ருதீன் அகமது அவர்களின் உறவினர்கள், கார்கில் போரில் வீரச்சமர் புரிந்து அரசின் பாராட்டைப் பெற்றவர்கள் போன்ற பலரும் குடியுரிமை இழந்த அந்நியர்களாக அசாமில் இப்பொழுது தனிமைப்படுத்தப்பட்டு வாடி நிற்கின்றனர். இதுவெல்லாம் முறையா என்ற கேள்விகள் வரிசைகட்டி நிற்கின்றன. இதற்கெல்லாம் மோடி அரசிடமிருந்து பதில் ஏதும் இல்லை.

குடியுரிமைப் பதிவேடு அனைத்து மக்களுக்கும் பேராபத்தை உண்டாக்கும்.

நமது பெற்றோர்களின் பிறப்புச்சான்று, பிறப்பிடம் ஆகியவை குடிமக்கள் பதிவேட்டின் அடிப்படையில் பொது மக்களிடம் கேட்கப் படும். நம்மில் பெரும்பாலானோரிடம் இதற்கான ஆவணங்கள் இருப்பது கடினம். அதிலும் வீடற்ற ஏழை எளிய மக்களிடம் இப்படிப்பட்ட ஆவணச் சான்றுகள் எங்கே இருக்கும்? ஆவணங் கள் இல்லை என்றால், குடிமக்கள் இல்லை என முத்திரை குத்தப் பட்டு, தடுப்பு முகாமுக்கு அனுப்பப்படும் பேராபத்து உள்ளது.

**பிரதமர் மோடி அவர்களின் பொய்ப் பிரச்சாரம்**

இந்தியாவில் தனது ஆட்சியின் கீழ் தடுப்பு முகாம்கள் ஏதும் இல்லை என்று தில்லியில் அண்மையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடி அவர்கள் மிகப்பெரிய பொய்யைக் கட்டவிழ்த்து விட்டார்.ஆனால், சர்வதேச மன்னிப்புச் சபை எனும் மனித உரிமை அமைப்பு, தனது 2018 நவம்பர் அறிக்கையில் அசாமில் தடுப்பு மையங்கள் இருப்பதை உறுதி செய்து விட்டது. மேலும் கர்நாடகா போன்ற இடங்களில் இப்படிப்பட்ட தடுப்பு மையங்கள் இருக்கும் படங்களையே ஊடகங்கள் வெளியிட்டு அம்பலப்படுத்தியதையும் அனைவரும் அறிவார்கள்.

பாரதிய சனதாக் கட்சி அரசின் மக்கள் விரோத நடவடிக் கைகளால் எத்தகைய அச்சமூட்டும் விளைவுகள் உண்டாகும்?

இன்றைய இந்துத்துவ அரசு கொண்டு வந்துள்ள / கொண்டு வரவுள்ள இத்தகைய மக்கள் விரோதத் திரிசூலச் சட்டங்கள் அரச மைப்புச் சட்டத்திற்கு விரோதமானவை. திட்டவட்டமாக இசுலாமி யர்களையும், தமிழர்களையும் தனிமைப்படுத்தக் கூடியது. மேலும் இந்தியத் துணைக்கண்டம் முழுவதுமுள்ள ஏழை-எளிய மக்களை நாடாற்றவர்களாக மாற்றக் கூடியது. பலரை வதை முகாமிற்குள் அடைத்துக் சித்திரவதை செய்யக்கூடியது. தவிரவும் இந்தியாவின் மதச்சார்பின்மை-வேற்றுமையில் ஒற்றுமை போன்ற உயரிய கோட்பாடுகளைத் தகர்க்கக் கூடியது.

**இந்தியா முழுவதும் பரவும் போராட்டத் தீ!**

ஆர்எஸ்எஸ் அரசின்இக்கொடிய சட்டங்களை எதிர்த்து இந்தியா முழுவதும் போராட்டத் தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. மாணவர்கள் - இளைஞர்கள் - அறிஞர்கள் - திரைக்கலைஞர்கள் - எழுத்தாளர்கள் - பெண்கள் - அதிகாரிகள் - முன்னாள் நீதிபதிகள் - மூத்த வழக்குரைஞர்கள் - இயக்கங்கள் - அரசியல் கட்சிகள் எனப் பல தரப்பினரும் கொதித்தெழுந்து வீதிக்கு வந்து போராடுகின்றனர்.

**வெங்கட்ராமன்இராமகிருஷ்ணன், அமர்த்தியா சென், அபிஜித் பானர்ஜி போன்ற நோபல் பரிசு பெற்ற அறிஞர்களும், புக்கர் பரிசு பெற்ற ஆங்கிலமொழி எழுத்தாளர் அருந்ததி ராய், புகழ் பெற்ற மனித உரிமைப் போராளி ஹஷ்மந்தர் போன்ற ஆளுமை களும், மோடி அரசின் இத்தகைய சட்டத்திற்கு எதிராகக் குரல் கொடுக்கின்றனர்.** இந்தியா மட்டுமல்ல, உலகளாவிய எதிர்ப்பு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக மாணவர்கள், நோபல் பரிசு பெறும் எண்ணற்ற அறிஞர்களை உருவாக்கும் கிங்ஸ் கல்லூரி மாணவர்கள் ஆகியோர் இலண்டனில் இந்தியத் தூதரகத்திற்கு முன்னால் ஒன்று கூடி, இச்சட்டத்திற்கு எதிராகப் போராடுகின்றனர். வியன்னாவிலும், தெற்காசிய நாடுகளின் மாணவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். ஐக்கியநாடு களின் மனித உரிமை அமைப்பு, சட்டம் பாகுபாட்டை உண் டாக்கக் கூடியது எனப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளது. இதேபோல் அமெரிக்கச் சிந்தனையாளர்களும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

**மாநில அரசுகளின் கடும் எதிர்ப்பு**

இந்தியாவிலுள்ள 12 மாநில அரசுகள் மோடி அரசின் இத்தகைய மக்கள் விரோதப் போக்கிற்கு எதிராகக் குரல் கொடுத்துள்ளன. பாரதிய சனதாக் கட்சியின் கூட்டணியில் இருக்கக் கூடிய கட்சிகளே குடிமக்கள் பதிவேட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. சட்டத்தைத் தவிர்க்குமாறு கேரள சட்டசபையிலும், பஞ்சாப் சட்டமன்றத்திலும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. மேலும் இச்சட்டத்தை எதிர்த்து, கேரள அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளது. இதுதவிரவும் 50-க்கும் மேற்பட்ட வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் தனியாரால் தொடுக்கப்பட்டுள்ளன.

**இத்தகைய சட்டங்களுக்கு எதிரான மக்கள் போராட்டத்தில், 25ம் மேற்பட்டோர், பல்வேறு அரசுகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.**

**குடியுரிமைச் சட்டம் பற்றிய திசை திருப்பும் பொய்ப் பிரச்சாரம்**

குடியுரிமைத் திருத்தச் சட்டத்தால் இந்தியாவில் இருப்பவர்களுக்கு எத்தகைய பாதிப்பும் இல்லை என மிகப் பெரிய பொய்ப் பரப்புரையை இந்துத்துவ வெறியர்கள் திட்டமிட்டுச் செய்து வருகிறார்கள். மேலும் இவற்றுக்கிடையில் எந்தத் தொடர்பும் இல்லை என்ற பிரச்சாரமும் தொடர்கிறது? சிஏஏ மற்றும் என்ஆர்சி ஆகியவை குடியுரிமைச் சட்டம் (1955) மற்றும் 2003 விதிகளுடன் தொடர்பு கொண்டனவாக உள்ளன என்பது கருதத்தக்கது. இதைத் திட்டமிட்டு மறைக்கின்றனர்.

மேலும் 2020 ஏப்ரல் 1 முதல் 2020 செப்டம்பர் 30 வரை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட என்பிஆர் குறித்த அரசின் அதிகார பூர்வமான அறிக்கை அரசு இணையத் தளங்களிலிருந்து திடீரெனக் காணாமல் போயுள்ளன. இதை இந்திய அரசு மறைக்க வேண்டிய காரணம் என்ன?

குடியுரிமை குறித்து மூன்று வகையான மக்கள் விரோத நடவடிக்கைகளை இப்பொழுது எடுக்க வேண்டிய பின்னணி என்ன?

**இந்தியாவின் மதச்சார்பின்மை மற்றும் வேற்று மையில் ஒற்றுமை எனும் உயரிய கோட்பாட்டை உருத்தெரியாமல் அழித்து, இந்தியாவை இந்து ராஷ்டிரமாக மாற்றி அமைத்து விட வேண்டும் என்பதே ஆர்எஸ்எஸ் மற்றும் பாரதிய சனதாக் கட்சியின் ஒரே**

**இலட்சியமாக இருக்கிறது. அதற்குச் சாதகமாகவே இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.**

தவிரவும், இந்தியப் பொருளாதாரம் அதல பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கிறது எனப் பல்வேறு பொருளாதார நிபுணர்களும், நோபல் பரிசு பெற்ற அறிஞர்களும் தொடர்ந்து எச்சரித்து வருகின்றனர். வேலை வாய்ப்பு இன்மை, மக்களிடம் பணப்புழக்கமின்மை, பொதுத் துறை நிறுவனங்கள் விற்பனை, கறுப்புப் பணம் அதிகரிப்பு , கோடிக்கணக்கில் வாராக்கடன் போன்ற சிக்கல்களால் இந்தியா விழி பிதுங்கி நிற்கின்றது. இதனால் பொதுமக்களிடம் எழும் அதிருப்தி மற்றும் கோபத்தைத் திசை திருப்புவதற்காக, மோடி அவர்களின் இந்துத்துவ அரசு இத்தகைய வேலைத் திட்டத்தைச் முன்வைத்து உள்ளது. எனவே இத்தகைய திரிபுவாதப் போக்குக் கண்டு ஏமாறாமல், பொதுமக்கள் விழிப்புணர்வோடு செயல்பட வேண்டிய நேரமிது. ஊர் கூடித் தேர் இழுக்கும் முயற்சி இது.

சங்பரிவாரின் நடவடிக்கைகள், அசாம் போன்ற வட கிழக்கு மாநிலங்களின் பிரச்சனை மட்டுமல்ல அல்லது முசுலீம்களுடைய பிரச்சனை மட்டுமல்ல அல்லது ஈழத் தமிழ் அகதிகளின் பிரச்சனை மட்டுமல்ல. இது ஒட்டுமொத்தமாக அனைத்து மக்களின் பிரச்சனை ஆகும். குடிமக்கள் பதிவு செய்து கொள்ளும் முறை வந்தால், நாம் ஒவ்வொருவரும் நமது பெற்றோர் - பாட்டன் - முப்பாட்டன் கால ஆவணங்களைக் காட்டித்தான், நாங்கள் எல்லோரும் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என நிரூபிக்க வேண்டும். இல்லை என்றால், நம்மை எல்லாம் இந்த நாட்டுக் ‘குடிமக்கள் இல்லை’ என்று சொல்லி, நமது குடியுரிமையைப் பறித்து விடுவார்கள். எனவே இந்த ஆபத்து முசுலீம்களுக்கு மட்டும் தான் என, நாம் சும்மா இருந்து விடக்கூடாது. நம் எல்லோருக்குமே இந்த ஆபத்து வரப்போகிறது. இந்துத்துவ அரசியலுக்கு இடம் கொடுக்காத மாநிலம் என்பதால், ஏற்கெனவே தமிழ்நாட்டின் மீது மோடி அரசுக்கு ஓர் ஒவ்வாமையும், எரிச்சலும் இருக்கிறது. தொண்டையில் சிக்கிய முள்ளாகத்தான் தமிழகத்தைத் தில்லி சுல்தான்கள் கருதுகின்றனர். ஒரு பக்கம் தமிழ்நாட்டின் மீதும், தமிழ் மொழியின் மீதும் அக்கறை இருப்பது போல் பாவனை செய்து கொண்டே, இன்னொரு பக்கம் தமிழினத்தை வேரோடு பிடுங்கி எறிவதற்கான நடவடிக்கை களைக், கமுக்காகச் செய்து வருகின்றனர். எனவே நம்மை நெருங்கிக் கொண்டிருக்கும் இத்தகைய பேராபத்தை நாம் அலட்சியப்படுத்திவிடக்கூடாது.

**"தேசியக் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தைச் செயல் படுத்துவதிலிருந்து ஓர் அங்குலம் கூடப் பின் வாங்கப் போவதில்லை" என, அமித்ஷா கொக்கரிக்கிறார். "எனது அரசின் முடிவு 1000 மடங்கு சரியானது" என முழங்கு கிறார் மோடி. இந்தத் தருணத்தில் தந்தை பெரியார் அவர்களின் வழிகாட்டுதலை நினைவுகூருவது பொருத்த மாக இருக்கும். மக்கள் திரள் போராட்டத்தின் மூலம், அரசமைப்புச் சட்டத்தையே மாற்ற முடியும் என நமக்கு மெய்ப்பித்துக் காட்டியுள்ளார் பெரியார். எனவே அவரது வழியைப் பின்பற்றி மக்கள் திரள் போராட்டங்களைத் தொடர்ந்து தொய்வுறாமல் முன்னெடுத்தால், மாற்றங் களை நிகழ்த்த முடியும்.**

## திருமதி. வள்ளியம்மாள் மறைவு



சென்னை, மேற்கு தாம்பரம், இரும்புலியூர், முருகேசன் தெருவில் வாழ்ந்துவரும் தமிழ்நாடு விவசாயிகள் தொழிலா ளர்கள் கட்சியின் தலை வரும், கட்டடத் தொழிலா ளர்கள் மத்திய சங்கத்தின் தலைவரும், சமூகநீதி சத்திரியர் பேரவையின்



தலைவருமான பொன்.குமார் அவர்களின் தாயாரும், திருவாளர் பொன்னுசாமி அவர்களின் துணைவி யாருமான திருமதி.வள்ளியம்மாள் அவர்கள் 24.01.2020 அன்று இரவு இயற்கை மரணம் அடைந்தார் என்பதை வருத்ததுடன் தெரிவித்துக் கொள்கிறோம். 25.01.2020 மாலை இறுதி நிகழ்ச்சியில் திமுக தலைவர் மு.க. ஸ்டாலின், மாபெ.பொ.க பொதுச் செயலாளர் வே.ஆனை முத்து, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.இராசா, மாம்பலம் சந்திரசேகர், ஆனை பன்னீர் செல்வம், தாம்பரம் சுப்பிரமணி உழவர் மகன் ப.வடிவேலு, க.பழனி, தாம்பரம் த.கிருட்டிணமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பெரியாரைக் கேளுங்கள்

மா.நன்னன் - வினா எண். : 3.1.12

**தங்களின் நாட்டுப்பற்றைச் சிலர் குறை கூறிய துண்டு என்பது உண்மையா அய்யா?**

**பெரியாரின் விடை:** நான் தேசத்துரோகி என்றழைக்கப் படுவதிலோ நாட்டை அரசாங்கத்திற்குக் காட்டிக் கொடுத்தவன் என்று அழைக்கப்படுவதிலோ கடுகளவு கூடக் கவலைப்பட வில்லை. எப்படிப்பட்டவர்களால் அப்படி அழைக்கப்படுகிறேன் என்பது எனக்குத் தெரியும். அயோக்கியர்களாலும், சுய நலக்காரர்களாலும், ஒரு வேளைக் கஞ்சிக்கு மானத்தை விற்றுப் பிழைக்கின்ற இழி நிலையில் உள்ளவர்களாலும், முட்டாள் களாலும் அழைக்கப்படுவதை எவனாவது லட்சியம் செய்வானா அதற்காகத் தன்னுடைய முயற்சியை எவனாவது மாற்றிக் கொள்வானா என்று கேட்கிறேன்? பதிவிடுபவர் வேண்மாள். பேரா. நன்னன் அவர்களின் மகள்.

# மார்க்சியப் பார்வையில் மதம்

இரா.திருநாவுக்கரசு

ஒட்டு மொத்த மனித இனத்தையும் உடைமையுடையோர், உடைமையற்றோர் என வர்க்க அடிப்படையில் இரண்டாகப் பிரிப்பதுபோல், மத நம்பிக்கையுடையோர், மத நம்பிக்கை யற்றோர் என மத அடிப்படையிலும் இரண்டாகப் பிரித்து விடலாம்.

730 கோடி கொண்ட உலக மக்கள் தொகையில், 130 கோடிக்கும் மேலானவர்கள் தங்களை ''மதமற்றோர்'' என அறிவித்திருப்பதாக ஆய்வுகள் சொல்லுகின்றன. அப்படி யானால் மத நம்பிக்கையாளர் பெருவாரியானவர்களாகவும், மத நம்பிக்கையற்றோர் சிறுபான்மையினராகவும் இருக் கின்றனர். ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு வீதியிலும், ஒவ்வொரு வீட்டிலும் கூட இதுதான் நிலை.

5 இலட்சம் ஆண்டு கால வரலாறு கொண்ட மனித இனத்தில், எண்ணற்ற கடவுள்களை மனிதக் கூட்டம் உருவாக்கியிருக்கிறது. இயற்கை மீது அவர்கள் கொண்ட ஓர் அச்சம்தான் இதற்குக் காரணம். இதன் அடிப்படை அவர் களின் அறியாமை. தாங்கள் கொண்டிருந்த புரிதல்களைத் தாங்கள் உருவாக்கிய கடவுள்களின் மீது சுமத்தி, அதற்கு அந்த கடவுள்களிடமே தீர்வைக் கேட்கும் உளவியல் அடிப்படை யிலே கடவுள் வணக்கத்தைக் கடைப்பிடித்தனர். கால ஓட்டத்தில் இந்தக் கடவுள்களிலே கூட மாற்றத்தைக் கண்டபடியே வந்திருக்கின்றனர். பரிணாம வளர்ச்சியின் வெளிப்பாடு இது.

மனித இனத்திற்கு மதம் என்ற அமைப்பு எப்போது தேவைப்பட்டிருக்கும்? மதங்களுக்கும் மனித இனத்திற்கு மான தொடர்பு என்ன? மதம் இல்லாமல் மனித சமூகத்தால் இயங்க முடியாதா? போன்ற கேள்விகள் இங்கே நாம் கவனத்துடன் விவாதிக்கப்பட வேண்டிய தேவை இருக்கிறது.

மதம் என்ற நிறுவனத்திற்கும் கடவுள் வழிபாட்டிற்கும் எந்தவிதச் சம்மந்தமும் கிடையாது. கடவுள், வணங்குதல், வழிபடுதல் போன்றவைகள் எல்லாம் மனித குலம் தோன்றியதிலிருந்தே ஏற்பட்ட ஒரு உணர்ச்சி தான். இயற்கையின் சீற்றங்களை அச்சத்துடன் பார்த்ததன் வெளிப்பாடுதான் அது. ஆனால் சமூக வளர்ச்சியின் போக்கில், ஆதிக்கச் சக்திகளால் உருவாக்கிக்கொண்டது தான் மதம் என்கிற அமைப்பு.

கடவுளை அறிவதற்கான வழியில் மனித ஆன்மா கடந்து செல்லும் வழி, அன்பின் அடையாளம், நன்னெறிகளை போதிக்கும் ஆசான் என்று, மதம் என்ற அமைப்புக்கு பல்வேறு விளக்கங்களைச் சொல்லிக் கொண்டாலும், உண்மை அதுவன்று. மதம் என்பது நம்பிக்கைகள் மீது கட்டப்பட்ட கோட்டை, எல்லையற்று சுதந்திரமாகச் சிறகடித்து பறக்க வேண்டிய மனிதச் சிந்தனைகளை முடக்குவதற்காக உருவாக்கப்பட்டது தான் மதம்.

காட்டுமிராண்டிச் சமூகம், பண்டைய பொதுவுடைமை சமூகம், அடிமை சமூகம், நிலப்பிரபுத்துவ சமூகம், முதலா ளித்துவச் சமூகம், சோசலிசச் சமூகம் என்று மனிதகுலம் கடந்து வந்த கால கட்டங்களை வரையறுத்துள்ளனர்.

பரந்து கிடந்த நிலபரப்பில் எல்லார்க்கும் எல்லாமும் என்று சமத்துவமாக வாழ்ந்த காலகட்டத்தைக் கடந்து, ''உடைமைச் சிந்தனை'' துளிர்த்தபோது மனிதர்கள் குழு மோதல்களில் ஈடுபட்டு வெற்றியடைந்தவர் தோல்வியுற்றோரை அடிமை களாக்கிக்கொண்டனர்.

அன்றைய காலக்கட்டத்தில் நிலங்கள் மட்டுமே உற்பத்தி சாதனங்களாக இருந்தன. இதைக் கைப்பற்றிக் கொள் வதற்கும், உடைமையாக்கிக் கொள்வதற்கும் ஏற்பட்ட பகை முரண்களில் உண்டானதுதான் அரசு என்ற அமைப்பு. உற்பத்தி உறவுகளில் ஏற்பட்ட உள் முரண்களால் உண் டானது மதம் என்ற அமைப்பு.

பல்வேறுபட்ட மொழி, தேசிய இனங்கள், தேசங்கள், அரசுகள் உருவான காலக்கட்டத்தினூடே மத நிறுவனங்களும் வளர்ச்சி பெற்று வந்துள்ளன. ஆங்காங்கே தோன்றிய அரசுகளால் மதக்கோட்பாடுகளும் புதிது புதிதாக உருவாகின. ஆதலினால் கடவுள் கதைகளையும் தனிமனிதச் சிந்தனை களையும் மெருகூட்டிப் பற்பல புதிய மதங்களை உருவாக்கிக் கொண்டனர்.

அரசு அதிகாரத்தில் பெரும்பாலான நாடுகளில் மதங்கள் முக்கிய பாங்காற்றுகின்றன. இதில் கிறித்துவம், இசுலாம், பவுத்தம் போன்ற மதங்கள் குறிப்பிடத்தக்கவைகள்.

அமெரிக்காவிலுள்ள பேவ் (யசிநி) பேரவை என்ற நிறுவனம் உலக அளவில் மதரீதியாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்தியது. அதில், உலக மக்கள் தொகை யில் கிறித்துவ மதத்தைச் சேர்ந்தவர்கள் 32 சதவிகிதம் பேர்; 157 நாடுகளில் பெருபான்மையுடன் வாழ்கிறார்கள் என்றும், உலக மக்கள் தொகையில் கிறித்துவர்கள் முதலிடத்தில் உள்ளனர் என்றும் சொல்லப்படுகிறது.

இதற்கு அடுத்த இடத்தில் இசுலாமியர்கள் 23 சதவிகிதம் பேர் என்றும் இவர்கள் உலகலவில், 160 கோடி பேர் என்றும், உலகின் 100 நாடுகளில் இவர்கள் வாழ்கின்றனர். இதற்கு அடுத்த இடத்தில் இந்து மதத்தினர் 15 சதவிதம் பேர் என்றும், உலக அளவில் இவர்கள் 100 கோடி என்றும், இதற்கு அடுத்த இடத்தில் புத்தமதத்தினர் 7 சதவிதம் பேர் வாழ்கின்றனர் என்றும், இவர்கள் 10க்கும் மேற்பட்ட நாடுகளில் வாழ்கின்றனர் என்றும் அவ்வறிக்கை சொல்லுகின்றது.

அதேபோல, 2015-ல் இங்கிலாந்திலிருந்து வெளியாகும் '' டெலிகிராஃப்'' பத்திரிக்கை, உலகில் அதிக மத நம்பிக்கை கொண்டவர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. எத்தி யோப்பியா - 99 % , இலங்கை - 99%, யேமன் - 99%,

சோமாலியா – 98%, ஆப்கானிஸ்தான் – 97%, எகிப்து – 97%, மியான்மர் – 97%, கம்போடியா – 96%, ஜோர்டான் – 96%

அமெரிக்கா – 56%, பிரிட்டன் – 30%,

பஹாய்கள், ஜைனர்கள், சீக்கியர்கள், தாவோயிஸ்டுகள் – 0.8%, யூதர்கள் – 0.2%,

**மத நம்பிக்கை இல்லாமல் வாழும் நாடுகளான :**

சீனா – 7%, ஜப்பான் – 13%, சுவீடன் – 19%, நார்வே – 21%, செக் குடியரசு – 23%, ஹாங்காங் – 26%, நெதர்லாந்து – 26%, இசுரேல் – 30%, நியூசிலாந்து – 33%, ஆஸ்திரேலியா – 34%, அஜர் பைஜான் – 34%, கியூபா – 34%, வியட்நாம் – 34%, ஸ்பெயின் – 37%, சுவிட்சர்லாந்து – 38%, ஆஸ்திரியா, ஹங்கேரி, லாக்சம்பர்க், அல்பேனியா – 39%.

மேற்குறிப்பிட்ட புள்ளி விவரங்களை ஆய்வுக்குட்படுத்தினால் ஒரு உண்மையைக் கண்டுபிடிக்க முடியும். அதாவது சமூக, அரசியல், பொருளாதார, நிலைகளில் வளர்ந்துள்ள நாடுகளில் வாழும் மக்களிடையே உள்ள மத நம்பிக்கையும் அதே வேளையில் சமூக, அரசியல், பொருளாதார நிலைகளில் வளர்ச்சியற்ற மக்களிடையே இருக்கும் மத நம்பிக்கையும் இந்த அளவுக்கு வேறுபட்டிருப்பதற்குக் காரணம் என்ன?

மத நம்பிக்கைக்கும், அரசியல், சமூக, அறிவியல், பொருளாதார வளர்ச்சிக்கும் நேரடித் தொடர்பு இருப்பது இங்கே புலப்படுகிறது. மத நம்பிக்கையற்ற தன்மையுள்ளவர்களையும் இதே அளவுகோல் கொண்டு கணக்கிட்டுக் கொள்ளலாம்.

மத நம்பிக்கை கொண்டோரில் எத்தியோப்பியாவில் 99% இருக்கும் அதே வேளையில், மத நம்பிக்கையற்றோரில் அல்பேனியாவில் – 39% மக்கள் இருக்கிறார்கள். இதிலிருந்து நாம் முடிவுக்கு வந்தடைய வேண்டிய இடம் எது?

வரலாற்று ரீதியாக, எத்தியோப்பியாவில் அரசியல், ஆட்சியில் எண்ணற்ற பிரச்சனைகள். இந்நாட்டு மக்கள் இன்று வரையில் தங்களின் அடிப்படைத் தேவைகளுக்களாகவும் சுகாதார வாழ்விற்காகவும், கல்விக்காகவும் போராடி வருகின்றனர். மேலும், இனக்குழுக்களிடையே தொடர்ந்து நடைபெறும் பிரச்சனைகள், அரசியல் அழுத்தங்கள் ஒருபுறம்; போதிய கல்வியறிவு, விழுப்புணர்வு போதாமை, ஒருபுறம் இயற்கை வளங்கள் நிறைய இருந்தாலும், எத்தியோப்பில மக்கள் கல்லாமையிலும் இல்லாமையிலும் இன்றளவும் வாழ்கின்றனர்.

இதே வேளையில், அல்பேனியா குடியரசு நாட்டில் 70% இசுலாமியர். மொத்தம் உள்நாட்டு உற்பத்தி – 12.3 பில்லியன் டாலர். மக்களின் சராசரி ஆயுட்காலம் ஆண் – 75, பெண் – 80, கல்வியறிவு வீதம் – 95.9%, இரண்டாம் உலகப்போருக்கு முன்னால், அல்பேனியர்களின் 70%, முஸ்லீம்கள் 12%, கத்தோலிக்கர்கள், 11% கிரேக்க ஆர்த்தடாக்ஸ் ஆகியோர், அனைத்து மசூதிகள், மற்றும் தேவாலயங்களை மூடிவிட்டு மதமற்ற அரசை அறிவித்தது.

முடிவாக, மதம் என்ற அமைப்பைப்பற்றி மனிதகுல மேம்பாட்டிற்காக உழைத்த, சிந்தித்த தலைவர்கள் கூறியிருக்கும் கருத்துக்களை இங்கே கவனிக்க வேண்டியது கட்டாயமாகிறது.

" எனக்கு மட்டும் அதிகாரம் இருக்குமானால் வகுப்பு வாதத்தையும், மதவெறிமையும், வெறுப்புணர் வையும், பகையையும் வளர்க்கக் கூடிய எல்லா எழுத்துக்களையும், தீண்டத்தகாதவையாக நான் அறிவிப்பேன்" என்று காந்தி அவர்களும்,

" அஷுவியலோடு கலக்காத மதம் குருட்டுத்தமானது" என்று அஷுவியல் மேதை ஐன்ஸ்டீன் அவர்களும்

" மதத்திலிருந்துதான் ஏதேச்சதிகாரம் பிறக்கிறது, மக்கள் அடிமைகளைக்கப்படுகின்றனர்" என்று நேரு அவர்களும்,

" உலகிலுள்ள மதங்கள் எல்லாம் குருட்டு நம்பிக்கை என்கிற பூமி மீதே கட்டப்பட்டுள்ளன, மனிதனை முட்டாளாக்கும், பிரித்து வைக்கும் அமைப்பு மதம் ஆகும். மதம் ஒழிந்த இடத்தில்தான் மனிதனின் பிறப்புப் பேதங்கள் புதைக்கப்படுகின்றன" என்று பெரியாரும்,

" மதம் என்பது பொதுவாக மானுடத்தின் அறிவியல், மகிழ்ச்சி, விடுதலை பேசுகின்ற கொள்கைகளை கொண்டிருக்கும்" என மேதை அம்பேத்கர் அவர்களும் கூறியிருக்கின்றனர்.

ஆனால் மதம் என்ற நிறுவனம் இச்சமூகத்தில் சற்றும் செல்வாக்குக் குறையாமல் தழைத்தோங்கி விளங்குவதற்கும், தமது இருப்பைத் தக்கவைத்திருப்பதற்கான காரணத்தை மார்க்சிய, லெனினியப் பார்வையோடு அணுகும்போது நமக்குப் புதிய புரிதலை ஏற்படுகின்றது.

அதாவது, சோசலிச் சமூகம் அமைகிறபோது மதத்தை தடை செய்ய வேண்டும் என்று டூரிங் கருத்து தெரிவித்தபோது அதனை எங்கல்ஸ் கடுமையாக எதிர்த்தார்.

" மதம் என்பது தனிநபரின் நம்பிக்கை. அதில் தலையிடக் கூடாது என்ற கருத்தைப் பற்றியும் சரியான புரிதல் வேண்டும்.

ஆயிரக் கணக்கான புத்தகங்கள் எழுதினாலும் மக்கள் மனங்களிலிருந்து மதம் அகன்றுவிடாது. ஏனென்றால் அந்த மக்கள் முதலாளித்துவ உழைப்புச் சுரண்டலால் பாதிக்கப் பட்டவர்கள். அமைப்பு ரீதியாக ஒன்றுபட்டுப் போராடும் மக்கள்தான் மதத்தின் அடிப்படைக்கு எதிராகவும் போராடக் கற்றுக் கொள்வார்கள்" என்றார், மேதை லெனின்.

**" மதம் ஒடுக்கப்பட்ட மக்களின் ஏக்கப் பெருமூச்சாகவும், இதயமற்ற உலகின் இதயமாகவும், ஆன்மா இல்லாத நிலைமைகளின் ஆழமாகவும் உள்ளது. மதம் மக்களுக்கு அபினி,**

**மதம் இதயமற்ற உலகின் இதயம்; (துன்பப்படும்) மக்களுக்குத் தேவையான அத்தியாவசியமான போதை" என்றார் மார்க்ஸ்**

**உலகெங்கும் நடைபெறுகின்ற கொடுமைகளுக்கெல்லாம் அந்தந்த நாட்டு அரசுகள்தான் முக்கிய காரணம், அதை மக்கள் நேரடியாக உணர்ந்து விடமால் பார்த்துக்கொள்ளும் வேலையை மதம் செய்கிறது. வெகுமக்கள் இதனை உணருகின்ற ஒரு கட்டம் வரும் போது, அரசுகளும், மதங்களும் தூள் தூளாகும்.**

# நிகழ்வும் நிலைப்பாடும்

## (சிதைவுறும் தமிழ்)

இரா. பச்சமலை

விருதுநகர் மாவட்டம், இராசபாளையத்திலிருந்து சேத்தூர் செல்லும் மதுரை மண்டல அரசுப் போக்கு வரத்துக் கழகச் சாத்தூர் கிளையின் பேருந்தில் ஏறிய நான் என் சொந்த ஊரான 'சேத்தூர்'க்குப் பயணச்சீட்டு கேட்க நடத்துநர் பயணச்சீட்டைத் தந்தார். அந்தச் சீட்டில் 'சேத்தூர்' என்ற ஊர்ப் பெயர் இடம்பெற வில்லை என்பதைப் பார்த்துக் கொண்டிருந்த போது நடத்துனர் என்னைக் கவனித்துவிட்டு ஏன் விழிக் கிறீர்கள் என்று கேட்டுவிட்டார். நான் சேத்தூருக்குப் பயணச் சீட்டுக் கேட்டுள்ள போது அந்தப் பெயர் இடம்பெறாமல் 'செய்த்தூர்' என்று உள்ளதே என்றேன். சேத்தூர் என்பதற்குத்தான் நம் படித்த அறிவாளிகள் 'செய்த்தூர்' என்று குறிப்பிட்டுள்ளனர் என ஏளனமாகச் சொல்லிச் சென்றார். அவர் கூற்று உண்மையில் என்னை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இது எப்படி இப்படி நிகழ்ந்துவிட்டது என எண்ணலானேன்.

அந்தச் சீட்டில் சேத்தூர் ஊரைக் குறிக்க ஆங்கிலத் தில் 'Seithur' எனப் பதிவாகியிருந்தது. பயணச் சீட்டை அச்சிட்டவர்கள் Seithur என்று ஆங்கிலத்தில் உள்ளதை அப்படியே ஆங்கிலத்தை எழுத்துக்கூட்டித் தமிழுக்கு மாற்றிச் 'செய்த்தூர்' என்று அச்சிட்டுள்ளனர் என எண்ணி துணுக்குற்றேன். தமிழர்கள் 90 விழுக்காடு வாழும் தமிழ்நாட்டில் எங்கும் தமிழ் என அரசினர் சொல்லிக் கொண்டு திரியும் வேளை ஒரு பொருள் பொதிந்த ஊரான 'சேத்தூர்'-ஐ எப்பொருளுமற்றத் தன் மையில் 'செய்த்தூர்' என்று அரசுப் போக்கு வரத்துக் கழகப் பேருந்தின் பயணச்சீட்டில் அச்சிட்டுத் தமிழைச் சிதைத்துள்ளனர். இந்த இழிவை அரசு நிறுவனமே இழைக்க முற்படும் போதுதான் நம் சிறுமையை உணர முடிகிறது.

''தமிழின் தொன்மை துலக்கும் தொல்காப்பியம்'' தமிழின் சிறப்பாக எச்சொல்லும் பொருள் குறித்த வையே என இலக்கணம் வகுத்துள்ளது. தமிழ் சொற்கள் யாவும் காரணப் பெயர்கள்தான் என்றும் வரையறுக் கப்பட்டுள்ளது (வடமொழி (சமற்கிருதம்), இடுகுறிப் பெயர்கள் கொண்ட சொற்களைக் கொண்டது). அதாவது பல ஆயிரம் வேர்ச்சொற்கள் நிறைந்த தமிழ் பற்பல ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்பே பன்நெடுங்காலம் பேசப் பெற்று தமிழ்ச் சொற்கள் காரணப் பெயர்களாக உள்ளன என்பதிலிருந்து உலக மொழிகளிலேயே உயர் செவ்வியல் மொழி என்பதைப் பறைசாற்றிக் கொண்டுள்ளது. இதன் பின்னணியில் பார்த்தால் 'சேத்தூர்' எனும் ஊர்ப் பெயர்ச் சொல் சேற்றூர் என்று இருந்து, அதாவது சேற்று மண் வளம் கொழிக்கும் செழுமையான பொருள் குறிக்கும் காரணத்துடனான பொருள் பெயர் இப்போது பொருளற்ற 'செய்த்தூர்' என்று ஆக்கப்பட்டுவிட்டது.

மேலும் தமிழ்ச்சொற்கள் அவை ஒலிப்பது போன்றே எழுத்துக்களைக் கொண்டிருக்கும். அதாவது ஒரு சொல்லின் ஒலியை எழுத்துக் கூட்டிச் சொல்லிக் கொண்டு ஒவ்வொரு எழுத்தாக எழுதினால் அச்சொல், தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத தமிழைப் பயிலும் எவராலும் பிழையின்றி எழுதப்பட்டுவிடும். காட்டாகச் சேத்தூர் என்பது எழுத்துக்கூட்டிச் 'சேத், தூர்' என ஒலிக்கும் போதே இன்னலேதுமின்றி எளிமையாகச் சேத்தூர் என்று எழுதமுடியும்; பிழையேதும் ஏற்பட வாய்ப்பில்லை. ஒவ்வொரு தமிழ்ச்சொல்லும் ஒலிப்பின் உருவாகவே அமையும் என்பதுதான் தமிழின் பெருஞ் சிறப்பு. விதி விலக்குகள் சில இருக்கத்தான் செய் கின்றன. அதற்கும் உரிய இலக்கணத்தைத் தொல் காப்பியம் தருகின்றது. காட்டாக மழையின் போது 'கொடை' எடுத்து வா எனச் சொல்லும் போது 'குடை' என்ற பொருள் பெயர்ச்சொல் மருவிவிட்டது. 'குடை' எடுத்து வா எனப் பொதுவாகச் சொல்வது இல்லை. அதேபோன்று 'கொடம்' கொண்டு வா என்பதில் 'குடம்' கொடமாக மருவியுள்ளது.

சேத்தூர் என்ற ஊர்ப் பெயர்ச் சொல்லை ஆங்கி லத்தில் எழுதப்பட்டுள்ள Seithur என்பதைச் 'சேத்தூர்' ஊர் அறியாதவர் அதை ஒலிக்க முற்படின் 'SEI' என்ற அசையைச் சேய், செய் எனவும் 'THUR' என்பதைத் துர், தூர் எனப் பலவாறு ஒலிக்க நேரிட்டு அவ்வூரின் பெயரே பொருளற்றதாகிவிடும். காட்டாக, ஆங்கிலச் சொற்கள் Cut, Put போன்றவற்றை ஒலிக்கும் போது Cut எனும் சொல்லின் 'அசை' 'cu' என்பது 'க' என்ற ஒலியுடன் 'கட்' என்றாகிறது; put என்பதில் 'pu' முன் போன்று 'ப' என்றாகாமல் 'பு' என ஒலித்து 'புட்' ஆகிறது. இன்னும் வியப்பு, cut என்பதின் முதல் எழுத்து 'c' என்பதைச் 'சி' என்ற ஒலியைத்தான் கொண்டுள்ளது. ஆனால் அது 'u' எழுத்துடன் சேர்கையில் 'cu' என்பது 'க' என்றாகிவிடுகின்றது. அதே போன்றதுதான் put. 'P' எழுத்து 'பி' எனத்தான் ஒலிக்கப்படுகிறது. ஆனால் அது 'u'வுடன் இணையும் போது 'pu' என்ற அசைச் சொல் 'பு' என்றொலிக்கிறது. இவ்வாறு ஆங்கிலச் சொற்க ளெல்லாம் அவற்றிலுள்ள எழுத்துக்களின் ஒலியைப் பெறாமல் ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறான ஒலிக ளுடன் ஒலிக்கின்றன. ஆனால் தமிழ் மொழியில் ஒவ்வொரு எழுத்தின் ஒலியும் அதைக் கொண்டுள்ள எல்லாச் சொற்களிலும் அதற்கடுத்துவரும் எழுத்தின் ஒலியின் ஊடாடல் இன்றி ஒரே ஒலியுடன் தான்

ஒலிக்கப்படுகிறது. காட்டாகக் கண், கனவு, கதவு. களவியல், கயமை, கடமை, கட்டில், கடன்,..... என 'க' எழுத்தின் ஒலி அது இடம்பெறும் எல்லாச் சொற்களிலும் 'க' என்ற ஒலியைத்தான் கொண்டுள்ளது.

எனவே செழிப்பான சொல் வளம் கொண்ட செம்மொழியாம் தமிழை இதுபோன்று 'சேத்தூர்' என்ற ஊர்ப் பெயர்ச் சொல்லை ஆங்கிலத்தில் SEITHUR என்று எழுதப்பட்டதிலிருந்து 'செய்த்தூர்' என்றெழுதி தமிழ்மொழியைச் சிதைத்துவிட்டது தமிழக அரசின் துறை.

இதே நிலை சென்னையிலும் ஏற்பட்டுவிடும் என்று எண்ணத் தோன்றுகின்றது. தமிழ்நாட்டின் ஊர்களின் பெயர்கள் அவையுள்ள நிலங்களைக் குறிப்பதாக அமைவதாகத்தான் உள்ளன. "ஊர்" என்ற சொல் மக்கள் வாழ் பகுதிகளைக் குறிக்கும் ஒரு பொதுச் சொல். ஆனால் பாக்கம், பட்டு, துறை, ஆறு எனப் பல்வேறு விகுதிகளுடன் முடிவடையும் ஊர்களின் பெயர்ச்சொற்கள் அப்பகுதியின் நிலத்தன்மையைக் குறிப்பதாக உள்ளன. 'பாக்கம், பட்டு' என்பவை கடற் பகுதி. கடல்சார் பகுதிகளைக் குறிக்கும். ஆறு, துறை என்பவை ஆற்றுப்படுகைப் பகுதிகளைக் குறிப்பதாக இருக்கும். காட்டாக, சேத்துப்பட்டு, சேப்பாக்கம், நுங்கம் பாக்கம், கோடம்பாக்கம் என்ற பெயர்கள். அவையெல் லாம் கடல்சார் பகுதிகளாக இருந்தன என விளக்கும். ஆனால் 'சேப்பாக்கம்' என்பதை ஆங்கிலத்தில் 'Chepauk' என்று ஆங்கிலத்தில் எழுதப்படுகிறது. முன்பே சொன்னது போல, 'சேத்தூர்' 'செய்த்தூர்' என்றானது போல் 'சேபாக்' என்றாகிவிடலாம். 'சேத்துப்பட்டு' என்பதற்கான 'Chetpet' என்ற ஆங்கிலச் சொல் 'செட்பெட்' என்றாகி விடும் இழிநிலையும் ஏற்படலாம். இதைத் தவிர்க்க, கோடம்பாக்கம், நுங்கம்பாக்கம் என்பவை தற்போது ஆங்கிலத்திலும் Kodampakkam, Nunkampakkam என்றிருப்பது போல் Chepauk என்றிருப்பதை Chepakkam என்றும், Chetpetஐ Chettuppattu என்றும் எழுதிடல் வேண்டும். இதேபோன்று 'பேட்டை' என்ற சொல் விகுதியாக இடம்பெறும் ஊர்ப்பெயர்ச் சொல் பாதுகாப் பான பகுதியைக் குறிப்பதாக இருக்கும். இங்கு சைதாப் பேட்டை, தேனாம்பேட்டை என்பவற்றை Saidapet, Thenampet என்ற ஒலிப்பில் ஆங்கிலத்தில் குறிப்பிடப் படுவது பின்னாளில் சைதாப்பெட் என்றும் தேனாம்பெட் என்றும் ஒலிக்க நேரிட்டு தமிழிலும் எழுதவிடப்பட லாம். எனவே இவற்றை ஆங்கிலத்திலும் Saidapettai, Thenampettai என்று எழுதப்பட வேண்டும்.

இவ்வாறெல்லாம் காலப்போக்கில் வரும் நாளில் தமிழிலிருந்து ஊர்ப்பெயர்கள் ஆங்கிலத்தில் எழுதப் பெற்று அவற்றிலிருந்து தமிழுக்கு மாற்றிட நேரிட்டு மேலே சொன்ன பொருளற்ற ஒலிகளுடன் ஊர்ப் பெயர் களாக மாறி தமிழ் ஒலி இன்றி தமிழைச் சிதைக்கவும், அழிக்கவும் நேரிட்டுவிடலாம். இதைக் கவனத்தில் கொண்டு தமிழ்நாட்டிலுள்ள, ஆங்கிலத்தில் உள்ள ஊர்களின் பெயர்களையெல்லாம் Tuticurion என்பதைத் Thoothukudi என ஒலிப்பதாக ஆங்கிலத்தில் எழுதவும், Nilgiri-ஐ Neelamalai (Neelakiri) என்றெல்லாம் ஆங்கிலத்தில் தமிழொலியுடன் மாற்றிய மைத்தது போல் ஒரு நெடும் பணியாகத் திட்டமிட்டு ஒரு கால வரைக்குள் செயல்படுத்திட வேண்டும். இதனால் ஊர்ப் பெயர்களின் தொன்மைத் தன்மையைப் பாதுகாப்ப துடன் இவ்வகையில் தமிழின் செம்மை சிறக்க நீடித்து, தமிழ் மண், மக்கள், இனம், பண்பாடு காப்பாற்றப்படும்.

இதன் நீட்சியாக, நம் ஊர்ப் பெயர்ச் சொற்கள் பிற மொழிக்கு மாற்றம் பெறும் போது தமிழின் ஒலி நிலைபெறவேண்டும் என விழையும் நாம் பிறமொழிச் சொற்களைத் தமிழுக்கு மாற்றும் போது அதற்கிணை யான தமிழில் எழுத்துக்கள், சொற்கள் இருக்குமெனில் அந்த மொழியின் ஒலியிலேயே ஒலிப்பதாக எழுதுவது தான் நியதி, காட்டாக, 'China' என ஆங்கில எழுத்துக் களிலிருந்து தமிழில் 'சீனா' என்றொலிப்பதை அம்மொழி யினர் தம் நாட்டை எப்படி ஒலிக்கிறார்களோ அதே போன்று தமிழிலும் ஒலிப்பதாகத் தமிழ்ப் பெயர்ச் சொற்களாக எழுதப் பெற வேண்டும். அதாவது England என்பதை இங்லாண்ட் என எழுதலாமே? என்ற திறந்த வினாவுடன்........

## ந.கருணாகரன் - அ.ஜெயக்கொடி 30 ஆண்டுகள் மணவாழ்க்கை நிறைவு



பெரம்பலூர் மாவட்டம் வடக்கலூரநடேசன்-அஞ்சலை அம்மாள் ஆகியோர் மகன் ந.கருணாகரன்- அ.ஜெயக் கொடி எங்கள் இருவருக்கும் பெரியாரியல் பேறிஞர், பெரியார் ஈ.வெ.ரா.சிந்த னைகள். பதிப்பாளர் தோழர் வே.ஆனைமுத்து அவர்கள் தலைமையில் பெரம்பலூரில் 4.2.1990 அன்று வாழ்க்கை ஒப்பந்த விழா சிறப்பாக நடைபெற்றது. எங்கள் திருமணம் நடைபெற்று 30 ஆண்டுகள் முடிந்து இன்று 4.2.2020 முதல் 31வது ஆண்டிலும் புரட்சியாளர் அம்பேத்கர், தத்துவ சுயசிந்த னையாளர் பெரியார் ஆகியோர் கருத்துக்கள ஏற்றுக் கொண்டு வாழ்க்கையில் எல்லா வளங்களும் பெற்று ஆரோக்கியமாக வாழ்கின்றோம் என்பதையும் மகிழ்ச்சி யோடு. தோழர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம். தோழர்கள். ந.கருணாகரன்- க.ஜெயக் கொடி. எங்களது 31வது வாழ்க்கை ஒப்பந்த விழாவை முன்னிட்டு சிந்தனையாளன் இதழ் வளர்ச்சி நிதியாக ரூபாய் 1000.00 வழங்கினார்.

# இந்தியப் பொருளாதார வீழ்ச்சியும் பணவீக்கமும்

- குட்டுவன்

இந்தியப் பொருளாதாரம் என்றும் இல்லாத அளவிற்குப் பெரும் சரிவினைச் சந்தித்து வருகிறது. ஒரு நாட்டினுடைய பொருள் உற்பத்தியின் அடிப்படையில் தான், அந்நாட்டினுடைய வளமும் வேலை வாய்ப்பு களும் பணச் சுழற்சியும் சார்ந்து நிற்கின்றன. பொதுவாக பொருளாதார இயலில் பணவீக்கத்தைப் பலப் படி நிலைகளில் விளக்கியுள்ளனர். பணத்தினுடைய மதிப்பு இழத்தலும் விலைவாசி உயர்வும் பணவீக்கத்தின் இரு கூறுகளாக அடையாளப்படுத்தப்படுகின்றன. முதலாளித் துவ நாடுகளில் பணவீக்கமும் பண மதிப்பிழப்பால் ஏற்படும் பணவாட்டமும் இயற்கையாகவே சுழற்சி முறையில் நிகழ்கின்றன.

1930இல் பொருளாதாரப் பெரும் வீழ்ச்சி அமெரிக்காவில் ஏற்பட்ட போது, அதனுடைய பாதிப்பு பெருமளவில் ஐரோப்பிய நாடுகளிலும் காணப்பட்டது. ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரமும் வீழ்ச்சி யடையத் தொடங்கின. ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் வெவ்வேறு விதமான பணவீக்கங்கள் ஏற்பட்டன. நடைவேகத்தில் செயல்படும் பணவீக்கம், தவழ்ந்து செல்லும் பணவீக்க,ம் ஓடும் பணவீக்கம், பாய்ந்து செல்லும் பணவீக்கம், தேவை இழுப்பு பணவீக்கம், செலவு உந்து பணவீக்கம், எனப் பணவீக்கம் பல வகைகளில் பொருளாதாரத்தை வீழ்த்தின. பணவீக் கத்தால் பெரும்பான்மையான நடுத்தர ஏழை மக்கள்தான் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

முதல் உலகப் போரில் அன்றைய ஏகாதிபத்திய நாடாகக் கருதப்பட்ட ஜெர்மனியும், அதனுடன் இணைந்து ஆஸ்திரியா, ஹங்கேரி போன்ற நாடுகள் ஒரு பக்கமும் பிரான்சு ரஷ்யா பிரிட்டன் போன்ற நாடுகள் எதிர்ப்பக்கமும் நின்று போரிட்டன. இந்தப் போரில் இராணுவப் படைவீரர்களும் பொது மக்களும் இரண்டு கோடிக்கு மேல் உயிரிழந்தனர். பல கோடிப் பேர் காயமடைந்தனர். இவ்வாறு பல நிலைகளில் ஏற்பட்ட பாதிப்புகள், பொருளாதார இழப்புகள், பல இலட்சம் கோடிகளைக் கடந்தன. பொருளாதாரத்தின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. அப்போது ஜெர்மனி நாட்டில் பாய்ந்து செல்லும் பணவீக்கம் இருந்தது. பொருளாதார நூல்களில் பாய்ந்து செல்லும் பணவீக்கத்தைப் பற்றி விளக்கமளிப்ப தற்கு ஒரு கதை சொல்வார்கள். ஜெர்மனி நாட்டின் ஒரு பணக்காரர் தனது சொத்தையும் வீட்டையும் தனது இரு மகன்களுக்கு எழுதி வைத்தார். ஒரு மகன் எந்தச் செலவும் செய்யாமல் தந்தை அளித்த பணத்தை வங்கியில் சேர்த்தும், சொத்தைப் பாதுகாத்து வந்தான். மற்றொரு மகன் பெரும் குடிகாரனாக இருந்தான். வீட்டை விற்றும் வங்கியில் இருந்த பணத்தை எடுத்தும் தினமும் வகை வகையான மதுப் புட்டிகளை வாங்கிக் குடித்தான். அவன் வாடகைக்கு இருந்த வீட்டில் குடித்துவிட்டு காலியான கண்ணாடிப் புட்டிகளை அடுக்கி வைத்திருந் தான். சிக்கனமாகப் பணத்தைச் சேர்த்து வைத்து வாழ்ந்த முதல் மகனின் பணத் தொகை பணவீக்கத்தால் பெருமளவிற்கு மதிப்பை இழந்தது. முழு நேரக் குடிகாரனாக இருந்த இரண்டாம் மகன் வைத்திருந்த கண்ணாடிப் புட்டிகளின் மதிப்புப் பெருமளவிற்குப் பணத்தின் மதிப்பைவிட உயர்ந்தது. போர் முடிந்தவுடன் காலிக் கண்ணாடிப் புட்டிகளை விற்று, குடிகாரன் பெரும் பணக்காரன் ஆனான். இந்தக் கதை ஒரு பொருளாதார உண்மையைச் சுட்டுகிறது.

பணமதிப்பிழப்பாலும் விலைவாசி உயர்வாலும் சாதாரண சாமானிய மக்கள் ஒழுக்கமாகப் பணச் சேமிப்பைச் செய்து வாழ்பவர்கள் எவ்வளவு நெருக் கடிக்கு உள்ளாவர்கள் என்பதை இந்த விளக்கம் தெளிவாக்குகிறது.

இரண்டாம் உலகப் போரின் பாதிப்பு உலகின் அனைத்து நாடுகளின் பொருளாதாரத்தைச் சீர்குலைையச் செய்தது. இரண்டு கோடி இராணுவத்தினரும், நான்கு கோடி பொது மக்களும் இப்போரின்போது கொல்லப் பட்டனர்.

முதல் சோசலிச நாடான சோவியத் ஒன்றியத்தில் 1917இல் புரட்சி ஏற்பட்ட காலத்திலிருந்து 1987 வரை ரொட்டி உட்பட மக்கள் நுகரும் உணவுப் பொருட்களின் விலை ஒரே நிலையில் இருந்தது. இன்றைக்கும் சோசலிச நாடுகளான கியூபா நாட்டிலும் வடகொரியாவிலும் பணவீக்கத்தின் தாக்கம் குறைவாகவே உள்ளது. மக்கள் சீனத்திலும் வியட்நாமிலும் பணவீக்கத்தின் தாக்கம் இருந்த போதிலும், அரசு எடுக்கும் கடுமையான நடவடிக் கைகளால் சந்தைப் பொருளாதாரத்தில் மக்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்தி வைப்பதாலும் முதலாளித்துவ நாடுகளில் இருப்பது போன்ற பணவீக்கத்தின் தாக்கம் அதிகமாக இருப்பதில்லை.

1991ஆம் ஆண்டில் உலகமயமாதல் கொள்கையைப் பல நாடுகள் பின்பற்றிய பிறகு, பணவீக்கத்தினுடைய பாதிப்பு ஏழை மக்களையும், நடுத்தர மக்களையும் நிலை குலைய செய்தது. சோசலிசக் கொள்கையைப் பின்பற்றிய கிழக்கு ஐரோப்பிய நாடான ஹங்கேரியிலும், போலந்

திலும் 1991 ஆம் ஆண்டிற்குப் பிறகு பாய்ந்து செல்லும் பணவீக்கம் மக்களை ஏழைகளாக்கியது என்பதை, 1995ஆம் ஆண்டு ஐரோப்பியப் பயணத்தில் இக்கட்டுரை ஆசிரியர் நேரில் கண்டார். காரணம் சோவியத் ஒன்றியம் வீழ்ந்த பிறகு, இந்த நாடுகள் சந்தைப் பொருளாதாரத் திற்கு மாறியதே ஆகும்.

மேலே குறிப்பிட்ட பலவகையான பணவீக்கங்களின் தன்மைகள் ஒரேவிதமாக இல்லாவிட்டாலும் வெவ்வேறு பொருள்களில் வெவ்வேறு வடிவங்களில் காணப்படு கின்றன. அமெரிக்காவில் ஒரு விழுக்காடு மக்கள் தொகை ஏறக்குறைய 70 விழுக்காட்டு செல்வத்தையும் வருமா னத்தையும் பெற்று வருகிறார்கள். அதே போன்று 70 விழுக்காட்டு மக்கள் 10 விழுக்காட்டிற்கும் குறைவான வருமானத்தையும் செல்வதையும் பெற்று வருகின்றனர் என்பதை அமெரிக்காவின் பொருளாதார அறிஞர்கள் பலர் குறிப்பிட்டு வருகின்றனர். இதன் காரணமாகத்தான் அமெரிக்கா அதிபர் டிரம்ப், ஈரான் மீது ஒரு போரினைத் தொடுப்பாரானால் அமெரிக்காவில் பெருமளவிற்குப் பொருளாதாரச் சரிவும், விலைவாசி உயர்வும் பண மதிப்பிழப்பும் ஏற்படும் என்று அஞ்சுகின்றனர். ஏற்கெனவே ஈராக்கில் ஓராண்டு ஏற்பட்ட போர்ச் செலவைக் கணக்கிட்டு, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கப் பேராசிரியர் ஜோசப் ஸ்டிக்லி, லின்டா பிலிம்சு ஆகியோர் இணைந்து 2009ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய் அமெரிக்கப் போர் என்ற நூலைப் படைத்துள்ள னர். மேற்கூறிய தொகையை 2005 வரை அமெரிக்கா ஈராக்கில் செலவிட்டுள்ளது என்று இந்த அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இந்தப் போர்ச் செலவின் விளைவு இன்றளவும் அமெரிக்கப் பொருளாதாரத்தைப் பாதித்து வருவதால்தான், ஈரான் மீது அமெரிக்கா தற்போது போர் தொடுக்கக் கூடாது என அமெரிக்காவின் பல மாநிலங் களின் தலைநகரங்களில் மக்கள் போராட்டங்கள் நடத்துகின்றனர். அமெரிக்காவின் செனட் சபை குடியரசுத் தலைவரின் போர் தொடுக்கும் அதிகாரத்தை ஒரு தீர்மானத்தின் வழியாக 2020 ஜனவரித் திங்களில் தடுத்து நிறுத்தியது. மேற்கூறிய கருத்துகளும் செயல் நடவடிக்கைகளும் உலக நாடுகள் பலவற்றிற்கு அமெரிக்க செனட் சபை கூறிய அறிவுரையாகவும் எச்சரிக்கை யாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தியாவின் பணவீக்கம் தற்போது 7.2 விழுக் காட்டு அளவிற்கு உயர்ந்துவிட்டதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. பொருளாதாரச் சரிவும் உற்பத்தித் துறைகளில் வீழ்ச்சியும் பணத்தின் மதிப்புக் குறைந்தும் விலைவாசி உயர்ந்தும் வருவது இந்தியப் பொருளார தாரம் தேக்க நிலைப் பணவீக்கத்தில் செல்கிறது என்பதையே எடுத்துரைக்கிறது. இந்தத் தேக்க நிலை பணவீக்கம் மெல்ல உடலில் செலுத்தும் நஞ்சைப் போன்றது. எல்லா நிலைகளிலும் பொருளாதாரத் தேக்க நிலையை ஏற்படுத்தி மக்களின் பணம் சொத்தின் மதிப்பைக் கீழே வீழ்த்திவிடும். தேக்க நிலை பொருளா தாரத்தின் அறிகுறிகள்2014 ஆம் ஆண்டிலேயே தென் பட்டன. இந்த அடிப்படையை உணராமல் பாசக தேர்தலில் பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசியது. 2014இல் மோடி ஆட்சிக்கு வந்த போது ஆண்டிற்கு இரண்டு கோடி பேருக்கு வேலை வாய்ப்புத் தருவேன் என்று கூறினார். ஒவ்வொருவரின் வங்கிக் கணக்கிலும் ரூபாய் பதினைந்து இலட்சங்களைச் செலுத்துவேன் என்றார். ஆனால் வங்கிகள்தான் தொடர்ச்சியாக இழப்பைச் சந்தித்து வருகின்றன. 2019இல் எவ்வளவுதான் மறைத்தாலும், வேலைவாய்ப்பு கடந்த 47 ஆண்டுகளாக இல்லாத அளவிற்குக் குறைந்துள்ளது என்று குறிப்பிடு கின்றனர். மேலும் ஊரகப் பகுதிகளில் வாழும் விவசாயக் கூலிகளும் நகர்ப்புறங்களில் வாழ்கின்ற கூலித்தொழிலாளர்களும் வேலையிழந்து வருகின்றனர். ஒரு பக்கம் வருமானம் இழப்பு; ஒரு பக்கம் விலை உயர்வு. இந்த மோசமான-அபாயகரமான போக்கினைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு எந்த ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. மாறாக நாள் தோறும் பிரதமரும், உள்துறை அமைச்சரும் இந்த மோசமான சூழ்நிலையை மறைப்பதற்கும் திசை திருப்பவும் குடியுரிமைத் திருத்தச் சட்டம் குடிமக்கள் பதிவேடுச் சட்டம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்து கின்றனர். 11 மாநிலங்கள் இந்தச் சட்டத்தை நடை முறைப்படுத்த முடியாது என அறிவித்த பிறகும், இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியே தீருவேன் என்று ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் அமித்ஷா கூறுகிறார். இந்தியப் பொருளாதாரம் 2014ஆம் ஆண்டி லேயே, கண்ட சரிவு நிலையைக் கண்டது. அதைச் சரி செய்வதற்குப் பதிலாக ரூ.1000 ரூ.500 பணத்தாள்கள் செல்லாது என அறிவித்துத் திசை திருப்பினர். ஜி.எஸ்.டீ வரியை நடைமுறைப்படுத்திப் பொருளாதாரச் சரிவை விரைவுபடுத்தியது. 2020ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் நாள் இந்து நாளேட்டில் பணவீக்கத்தை ரிசர்வ் வங்கி கட்டுப்படுத்தத் தவறிவிட்டது என்பதைப் புள்ளி விவரங்களோடு பி.பாலகிருஷ்ணன் என்பவர் ஒரு கட்டுரையை எழுதியுள்ளார். இக்கட்டுரையில் ரிசர்வ் வங்கியே பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்குப் பிறகு மிகப்பெரும் துன்பங்களை சாதாரண மக்களுக்கு இழைத்தது என்பதை விரிவாகச் சுட்டிக் காட்டியுள்ளார். பண மதிப்பிழப்பு நடவடிக்கைக்குப் பிறகு புதிதாக ரூ.2000 தாள்களை அறிமுகப்படுத்தியது பெரும் தவறு என்று சுட்டிக்காட்டியுள்ளார். காரணம் இந்தியாவில்

சாராசரியாக உழைப்பவர்களின் கூலி நாளொன்றுக்கு ரூ.500க்கு குறைவாகவே உள்ளது. இந்த 2000 பணத்தாள்களை அதிக சுழற்சியில் விட்டதனாலும் ரூ.500 ரூ.100 தாள்கள் குறைந்த அளவில் சுழற்சியில் இருந்ததாலும் இந்தப் பணமதிப்பிழப்பின் தாக்கம் ஏழைகளைக் கொடுமையான முறையில் தாக்கியுள்ளது. இதற்கு ஆட்சியாளர்களும் ரிசர்வ் வங்கியும் காரணமாக உள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார். இதற்கு முதன்மை யான காரணம் இந்தியாவினுடைய பொருளாதாரக் கூறுகளை, உற்பத்தியில் ஈடுபடும் பெரும்பான்மையான மக்களின் உணர்வுகளை அறிந்து கொள்ளாத செயலற்ற மதவாத அரசாக ஒன்றிய அரசு உள்ளது.

இந்து நாளேடு 15 ஜனவரி 2020 அன்று ஒடுகின்ற தந்திரங்கள் என்ற தலைப்பில் ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் சட்டப்பல்கலைக் கழகத்தில் ஆய்வாளராக உள்ள ஆர்.ஜோ' என்பவர் ஒன்றிய அரசு நேர்மையான பார்வையும் பொருளாதாரத் தீர்வுக்கான ஒரு பெரும் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தவில்லை. மாறாக. பிரதமர் மோடியும் அமித்ஷாவும் பொய்யையும் புனைந்துரையையும் கூறி வருகின்றனர் எனச் சுட்டி யுள்ளார். இந்த ஆய்வாளர் மொழியில் கூறவேண்டு மென்றால், மோடியும் அமித்ஷாவும் அதிகாரத்தைக் கைப்பற்றவும் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ளவும் முரட்டுத்தனமான சத்தங்களையே நம்பி வருகின்றனர் என்கிறார்.

இத்தகையப் போக்கினாலும், மிரட்டி வரும் பணவீக்கத்தினாலும் பாதிக்கப்படுவது பெரும்பாலான ஏழை சாதாரண உழைக்கும் மக்களே என்பதை ஊடகங்கள் மாறி மாறி மறைக்கின்றன. வட இந்தியாவில் இருந்து வெளிவரும் ''தி காரவன்'' என்கிற ஆங்கில மாத இதழில் காஷ்மீர் பிரச்சினையைத் திசை திருப்பி ஒன்றிய எடுத்த தவறான நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் ஒளி அச்சு ஊடகவியலாளர்கள் பெரும்பான்மையோர் காஷ்மீர் பார்ப்பனர்களே என்று தோலுரித்துக் காட்டுகின்றது.

இன்றையப் பொருளாதாரச் சூழலில், ஏழைகள் பரம ஏழைகளாகவும் பணக்காரர்கள் பெரும் பணக்காரர் களாகவும், நடுத்தர, பிரிவினர் ஏழைகளாக தள்ளப்படு கின்ற நிலையும் உள்ளது. சிறு,குறு தொழிலகங்களில் வேலையின்மை ஏற்பட்டு வருகிறது. பெருந்தொழில் களும் நசிந்து வருகின்றன. இச்சூழலில் பணவீக்கத்தின் தாக்கம் இந்தியப் பொருளாதாரத்தையே சீரழித்து வருகிறது. குறும்பு பார்ப்பனரான சுப்ரமணிய சாமி பணத்தாள்களில் லட்சுமி படத்தை அச்சிட்டால் பொருளா தாரம் பெருகும் என்று துணிந்து நச்சைக் கக்குகிறார். அவர் பணத்தாளில் காந்தி படத்தை எடுத்துவிட்டு லட்சுமியை அச்சிட வேண்டும் என்று மோடிக்கு வழிகாட்டுகிறார். ஆர்.எஸ்.எஸ். சங் பரிவாரங்களும், ஜவகர்லால் பல்கலைக் கழகம், ஜாமியா மிலியா பல் கலைகழக மாணவர்களை முகமூடி அணிந்து தாக்கி யுள்ளனர். முப்படைகளின் தளபதியாக புதிதாக பொறுப் பேற்றுள்ள ராவத் காஷ்மீரில் அரசு நடத்திய வன்முறை கள் சரி என வாதாடுகிறார்.

ஏன் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை எதிர்த்துப் பேசினீர்கள் என்று இந்து ஏட்டின் நிருபர் கேட்ட கேள்விக்குப் பெரும்பாலும் அறிவியல் துறை சார்ந்தே கருத்துகளையே நான் விவாதிப்பேன் ஆனால் தற் போதைய நிலை என்னைப் பாதித்ததால் அரசியல் பற்றிப் பேசினேன் என்று அறிவியலில் நோபல் பரிசு பெற்ற வெங்கட்ராம ராமகிருஷ்ணன் பதிலளித்துள்ளார் (18 ஜனவரி 2020 இந்து ஆங்கில நாளேடு).

இந்தியா ஒரு மதச்சார்பற்ற அரசமைப்புச் சட்டத்தைக் கொண்டுள்ளது மதச்சார்பான ஒரு சட்டத்தை நீதிமன் றங்கள் ஏற்குமா என எனக்குத் தெரியவில்லை என்று குறிப்பிட்டு, இந்தியாவில் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சி செல்வாக்குப் பெற வேண்டுமென்றால், அமைதியான சூழலும் அரவணைத்துச் செல்கின்ற போக்கும் ஆட்சியாளருக்கு ஏற்பட வேண்டும் என்கிறார். மேலும் பாசிச ஜெர்மனியில் அறிவியலை குறுகிய நோக்குடன் பார்த்ததனால் இரண்டு அல்லது மூன்று தலைமுறைகளைப் பாதித்தது என்கிறார். இந்த நிலை யில் இருந்து மீள்வதற்கு ஜெர்மனிக்கு 50 ஆண்டுகள் ஆயிற்று என்றும் கூறுகிறார்.

சமூகங்களைப் புறந்தள்ளுகிற-சகிப்புத்தன்மையற்ற எவ்விதச் சூழலும் அறிவியல் வளர்ச்சிக்கு உகந்ததன்று என்றும் குறிப்பிட்டுள்ளார். பழங்கால ஏடுகளில் அறிவியல் கண்டுபிடிப்புகள் இருந்தன என்று கூறுவதும், அணு குண்டு இருந்தது என்று கூறுவதும், மரபணுக்கள் பற்றிய கருத்துகள் இருந்தன என்று கூறுவதும் மூடநம்பிக் கையைச் சார்ந்த கருத்துகளாகும். இவ்வாறான போலி அறிவியல் கருத்துகள், இந்தியாவை உலகளவில் கேலிக்குரியதாக ஆக்குகிறது.

இந்தியாவில் பல கல்வியாளர்கள் அறிவியல் அறிஞர்கள் இருந்தும்கூட ஒருவிதப் பிற்போக்கான மூடநம்பிக்கை சார்ந்த நாடு என்று கருதப்படுகிறது. இது போன்ற முற்போக்கு அறிவியல் அறிஞர்களின் கருத்து களையும், உண்மையான வல்லுநர்களின் கருத்து களையும் கேட்காமலும் ஏற்காமலும், இந்துத்துவா வெறியர்களின் மேற்பார்வையில் ஆட்சியை நகர்த்தும் இந்தியா, மிகவும் சிக்கலான பணவீக்கத்திற்கும் விலை வாசி உயர்வுக்கும் பொருளாதாரத் தேக்க நிலைக்கும் தீர்வு காணுமா? அல்லது இந்தியப் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியுறுமா? என்பவையே தற்போதுள்ள முதன்மையான வினாக்களாகும்.

### மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் 05.01.2020 ஞாயிறு அன்று முற்பகல், சென்னை, மேற்கு மாம்பலம், ஆ.சந்திரசேகர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற

## தமிழ்நாட்டுக் கல்வி உரிமை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

**தீர்மானம் -1 :**

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் வே. ஆனைமுத்துவின் துணைவியார் ஆ.சுசீலா அவர்கள்; மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் ஈடு இணையற்ற போராளி கவிஞர் தமிழேந்தி அவர்கள்; வேலூர் இயக்கச் செயல்வீரர் து. அரங்கநாதன் அவர்கள்; ஜெ. தத்தனூர் பொட்டக் கொல்லை செயல்வீரர் சா.துரைக்கண்ணுவின் துணைவியார் சின்னம்மாள் ஆகியோரின் மறைவுக்கு இம்மாநாடு வருந்துவதுடன், அப்பெருமக்களின் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் - 2 :**

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் 1976 வரை மாநில அரசின் அதிகாரப் பட்டியலில் இருந்த (State List) கல்வித்துறை, "நெருக்கடி நிலை" ஆட்சியில், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 42-வது திருத்தத்தின் மூலம் இந்திய ஒன்றிய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் பொதுவான அதிகாரப் பட்டியலுக்கு (Concurrent List) மாற்றப்பட்டது.

அதன் விளைவாக நடைமுறையில் கல்வித்துறை அதிகாரங்கள் முழுமையாக இந்திய ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் என்று ஆகிவிட்டது. கல்வித் துறையின் அதிகாரத்தை - மாநில அரசுகளிடமிருந்து பறித்த "நீட்" நுழைவுத் தேர்வு முதலான கேடுகளை - இந்திய ஒன்றிய அரசு திணிப்பதற்குக் காரணமாயிற்று.

எனவே, கல்வித் துறையை மீண்டும் தமிழ்நாடு உள்ளிட்ட மாநில அரசின் அதிகாரத்தின் கீழ்க் கொண்டுவரத் தொடர்ந்து போராட வேண்டும். இந்தக் கொள்கைக்கு இசைவாக மற்ற மாநிலங்களில் உள்ள கட்சிகள், இயக்கங்களையும் ஒருங்கிணைத்துப் போராடுமாறு தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகள் இயக்கங்களை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் - 3 :**

தமிழ்நாட்டில் தொடக்கக் கல்வி முதல் அனைத்து நிலைகளிலான கல்வி நிலையங்களிலும் மாணவர்களுக்குப் பயிற்றுமொழி தாய்மொழியான தமிழ்தான் இருத்தல் வேண்டும். இதனைத் தமிழ் நாட்டரசு உறுதியாகத் தீர்மானித்தால் நடைமுறைப்படுத்த முடியும். எனவே, தமிழ்நாட்டில் உள்ள கட்சிகளும் இயக்கங்களும் ஒருங்கிணைந்து, இக்கோரிக்கை நிறைவேறும் வரை உறுதியான போராட்டங்களை நடத்திடுவது உடனடித் தேவையாகும் என இம்மாநாடு தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறது.

**தீர்மானம் - 4 :**

தமிழ்நாட்டிற்குள் இயங்கும் அஞ்சல்துறை, தொடர்வண்டித்துறை, வங்கிகள், வருமானவரித் துறை என இந்திய ஒன்றிய அரசின் துறைகள் எல்லாவற்றிலும் அலுவல் மொழியாகத் தமிழ் மட்டுமே இருக்க வேண்டும். இதேபோல் மற்ற மாநிலங்களிலும் அந்தந்த மாநில மொழியே அலுவல் மொழியாக இருத்தல் வேண்டும்.

இந்தி உள்ளிட்ட 52 மொழிகளின் மொத்தம் ஆக உள்ள பொய்யான கணக்குப்படி இந்தியக் குடிமக்களில் 50 கோடிப் பேர் பேசுவதாக உள்ள இந்தி மொழியை - இந்தி பேசாத 80 கோடி மக்கள் மீது திணிப்பது அநீதி ஆகும். இந்த அநீதியைத் தடுத்து நிறுத்திட வேண்டும்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ள 22 இந்திய மொழிகளையும் இந்தியாவின் அலுவல் மொழிகளாக்க வேண்டும்.

இதற்கு, தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள், மற்ற இந்தி பேசாத மாநிலங்களில் உள்ள அரசியல் கட்சிகளின் துணையுடன் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு இம்மாநாடு வேண்டுகிறது.

**தீர்மானம் - 5 :**

மெக்காலே கல்வித் திட்டத்தால், 1835 ஆண்டு முதல் பொதுப் பள்ளிக் கல்வி முறையால் இந்தியா முழுவதுமுள்ள பட்டியல் வகுப்பு மக்களும், பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களும் ஓரளவு கல்வி பெற்றுள்ளனர். இந்தியா விடுதலை அடைந்து 70 ஆண்டுகள் கடந்த பின்னும் இம்மக்கள் அனைவரும் கல்வி பெற்றிடவில்லை.

இந்தச் சூழ்நிலையில், "தேசியக் கல்விக் கொள்கை" என்ற பெயரால் - இதுவரை பெற்று வந்த கல்வியையும் பறிக்கத் திட்டமிட்டுள்ளது பா.ச.க. தலைமையிலான இந்திய ஒன்றிய அரசு.

இத்திட்டம் நடைமுறைக்கு வந்தால், ஆங்கிலப் பயிற்று மொழி இப்போதுள்ளதை விட மேலும் அதிகமாகும். இந்தியும் சமஸ்கிருதமும் புகுத்தப் படும். அத்துடன் சாதிய ஏற்றத் தாழ்வையும் - பெண் ணடிமையையும் நிலைநாட்டுவதுதான் இந்தியப் பண்பாடு என வரலாறு கற்பிக்கப்படும். பட்டியல் வகுப்பு, பிற்படுத்தப்பட்ட வகுப்பு, சிற்றூர் சிறுவர்கள் பள்ளிப்படிப்பு இடைநிற்றல் அதிகமாகும்.

கல்வி கற்கும் சூழலை மேலும் சுமையானதாக ஆக்குகின்ற - மாநிலங்களின் கல்வி உரிமையைப் பறிக்கின்ற - சமஸ்கிருதத்தையும் இந்துத்துவத்தை யும் திணிக்கின்ற - சமூக நீதிக் கொள்கைக்கும் குழி பறிக்கின்ற தேசியக் கல்விக் கொள்கை அறவே கைவிடப்பட வேண்டும்.

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையில் நடக்கும் தமிழ்நாட்டு அரசு, இந்தத் தேசியக் கல்விக் கொள்கையில் தமிழக அரசு தம் நிலையைத் தெளிவுபடுத்தாமல் இருப்பது கண்டனத்துக்குரியது.

## மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் 05.01.2020 ஞாயிறு அன்று பிற்பகல், சென்னை, மேற்கு மாம்பலம், ஆ.சந்திரசேகர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற

# சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

**தீர்மானம் : 1**

தந்தை பெரியார் விதைத்த சுயமரியாதைக் கொள்கைகள் தமிழர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கும் முற்போக்குக்கும் மிகவும் துணை செய்துள்ளன. மேலும் இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களும் பெரியார் கொள்கையின் தேவையை உணர்ந்து வருகின்றனர்.

வருணாச்சிரமப் பிறவிச்சாதி அமைப்பை நியாயப்படுத்துகின்ற- நிலைப்படுத்துகின்ற தன்மையிலும், பட்டியல் வகுப்பு, பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் உரிமைகளைப் பறிக்கின்ற வகையிலும், சமூக நீதிக் கொள்கைகளை முடக்குகின்ற - மூடநம்பிக்கைகளுக்கு முட்டுக் கொடுக்கின்ற வகையிலும் தீவிரமாகச் செயல்படும் ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. பார்ப்பன இந்துத்துவத்தை எதிர்த்துப் போராடும் கருவியாகப் பெரியாரின் கொள்கைகள் இன்றையக் கால கட்டத்தில் மிகவும் தேவைப்படுகின்றன.

அனைத்து ஒடுக்குமுறைகளிலிருந்து விடுபட்டு, மனித உரிமைகளை மீட்டெடுக்கவும், சமவுரிமையை நிலைநாட்டப் போராடவும் பெரியாரின் சுயமரியா தைக் கொள்கைகளை மக்களிடையே பரப்புவது இன்றியமையாததாகும்.

தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் பெரியாரிய உணர்வாளர்களின் துணைகொண்டு, 2020 ஆம் ஆண்டிலிருந்து பெரியார் சுயமரியாதைக் கொள்கை மாநாடுகள் நடத்திட வேண்டும் என்று இம்மாநாடு தமிழர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் : 2**

அண்மையில், அய்தராபாத்தில் நடைபெற்ற ஆர்.எஸ்.எஸ். பயிற்சி வகுப்பு நிறைவு விழாவில் உரையாற்றிய ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவர் மோகன்பகத் அவர்கள், உண்மைக்கு மாறான- மானிட வரலாற்றுக்கு எதிரான தன்மையில் "இந்தியாவில் இன்று வாழும் 130 கோடி மக்களும் இந்துக்கள் தான் - இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் தான்" என்று பேசியிருப்பது ஒரு பொய்யான கற்பனை. அவருடைய சொற்பொழிவை சுயமரியாதை மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

**தீர்மானம் : 3**

தோழர் வே.ஆனைமுத்து உருவாக்கியுள்ள "தந்தை பெரியார்" வாழ்க்கை வரலாறு" நூல், 1400 பக்கங்கள் கொண்ட இரு தொகுதிகளாக 2020 ஆண்டு இறுதிக்குள் வெளியிடப்பட உள்ளது.

இந்நூலினை, மார்க்சியப் பெரியாரியப் பொதுடைமைக்கட்சி வெளியிடுவது என, 8-9-2019 ஞாயிறு அன்று, வேலூரில் நடைபெற்ற மா.பெ. பொ.க. பொதுக்குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நூல் 10,000 படிகள் வெளியிடப்பட வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்நூலுக்கு 500 படிகளுக்கு மேல் முன்பதிவு செய்திடுமாறு மா.பெ.பொ.க தோழர்களையும் அனைத்துத் தமிழ்ப்பெரு- மக்களையும், இம்மாநாடு அன்புடன் வேண்டிக் கொள்கிறது.

1

2

3

4

5

6

7

8

# "சிந்தனையாளன் பொங்கல் மலர் - 2020" வெளியீட்டில் என் பணி

- கு. தொல்காப்பியன்

சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளியீடு அன்று முதல் அமர்வு மாநாட்டில் நன்றியுரைக்காக என்னை மேடைக்கு அழைத்தார்கள். மேடையில் ஏறி கூட்டத்தைப் பார்த்ததும் நான் பேச வேண்டிய வார்த்தைகள் எதுவும் வாயை விட்டு வரவில்லை. இருப்பினும் நான் நன்றிகூற நினைத்தவர்களுக்கு இதன் மூலம் நன்றியைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

தொடர்ந்து 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிந்தனையாளன் பொங்கல் மலரை ஆண்டுதோறும் பொங்கலுக்கு முன்பாக வெளியிட்டு, தன் 95ஆம் வயதிலும் எப்பாடுபட்டேனும் மலர் வெளியிட்டே ஆகவேண்டும் என்று திட்டமிட்டு நடத்திக் காட்டிய அய்யா வே. ஆனைமுத்து அவர்களுக்கு மாநாட்டின் சார்பிலும், மா.பெ.பொ.க. சார்பிலும் நன்றி.

தன்னுடைய 91-ஆவது வயதில் உடல்நலமில்லாமல் மருத்துவமனையில் இருந்த போதும், தோழர் சித்தார்த்தனைத் துணைக்கு அழைத்துக் கொண்டு தன் சக்திக்கு மீறி விளம்பரங்களைத் திரட்டிக் கொடுத்த பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் மா. நாராயணசாமி அவர்களுக்கு நன்றி.

மலர் வெளியிடுவது முடிவானதும் கட்டுரையாளர்களைத் தொடர்பு கொண்டு கட்டுரைகள் வாங்குவது மெய்ப்புத் திருத்துவது, ஒழுங்குபடுத்துவது போன்ற வேலைகளை 80 வயது கடந்தும் உடல்நலக் குறைவு இருந்தாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் தொடர்ந்து ஒரு வாரகாலமாக சன் நகலத்தில் அருகில் இருந்து கொண்டே கட்டுரை வேலைகளைக் கச்சிதமாக முடித்துக் கொடுத்த தோழர் முகிலன் அவர்களுக்கு நன்றி.

விளம்பரங்கள், கடிதங்கள் பதிவது, அனுப்புவது போன்ற வேலைகளை நாமே செய்யலாம் என்று கூறி கடைசி வரை அனைத்து நிலைகளிலும் எனக்கு ஆலோசனைகளை வழங்கி மாநாட்டை வெற்றிகரமாக்கிய தோழர் வல்லவன் அவர்களுக்கு நன்றி.

தான் வெளியூரில் இருந்தாலும் தினம் தினம் என்னைக் கைப்பேசியில் தொடர்பு கொண்டு என்னை உற்சாகப்படுத்தி ஆலோசனை வழங்கிய தோழர் சித்தார்த்தன் அவர்களுக்கு நன்றி.

பொதுவுடைமைக் கொள்கைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் தோழர் பச்சமலைக்கு நன்றி.

மாநாடு நடைபெற்ற நாள் முழுவதும் உணவு, தேநீர் ஆகியவற்றை ஏற்பாடு செய்து அவற்றை சிறப்பாக நடத்திக் கொடுத்த தாம்பரம் சுப்பிரமணி அவர்களுக்கு நன்றி.

அவ்வப்போது மலர் பதிவில் ஏற்படும் குறைகளைச் சுட்டிக்காட்டி, சரிசெய்து கொடுத்த ப.வடிவேலு, கலசம் ஆகியோருக்கு நன்றி.

தன் வேலைகளை ஒதுக்கி ஒரு நாள் முழுவதும் வேலூரில் இருந்து வந்திருந்து அழைப்பிதழ் அனுப்பும் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட மோ.சி. சங்கர், மதனகவி ஆகியோருக்கு நன்றி.

விளம்பர அறிக்கை அனுப்பிய உடன் விளம்பரங்களையும், சந்தாக்களையும் முதன்முதலில் திரட்டிக் கொடுத்த தி.ச. குணசேகரன் மற்றும் பொறியாளர் சிவப்பிரகாசம், கட்சியின் மூத்த தோழர் கலியபெருமாள், இரா.கலியமூர்த்தி, முத்து அன்பழகன், ந.கருணாகரன், பா.மோகன், சேலம் செ.ஆனையப்பன் ஆகியோருக்கும் புதுச்சேரி இரா.திருநாவுக்கரசு, கோ. கோதண்டராமன், தீத்தாண்டப்பட்டு முருகேசன், வாலாசா ப. வெங்கடேசன், காஞ்சி சி.நடராசன், க.முகிலன், சூலூர் ம. சரவணக்குமார் ஆகியோருக்கும் நன்றி.

மலர் வெளியீடு என்றாலே முதல் நாளே வந்து அனைத்து வேலைகளிலும் பங்கெடுத்து சிறப்பாகச் செய்யும் தோழர் டில்லிபாபு மற்றும் நான் அழைத்த உடன் எங்கிருந்தாலும் வந்து தன் பங்கைச் சரியாகச் செய்து கொடுக்கும் தோழர் முருகவேல், மாறன், பெங்களூரில் இருந்து வந்து புத்தக விற்பனையை ஏற்றுக்கொண்ட மா. செந்தில்குமார், அரியலூர் தோழர் செந்தில் முருகன், பெண்ணாடம் தோழர் தே. சின்னதுரை, மாளிகைக் கோட்டம் தோழர் செல்வா, விளம்பரங்களையும், கணக்கு வழக்குகளையும் நல்ல முறையில் பதிவு செய்து கொடுத்த பகுத்தறிவாளன் ஆகியோருக்கும் நன்றி.

நான் எப்போது சென்றாலும் மலர் விளம்பர வேலையாகட்டும், சிந்தனையாளன் இதழ் வேலையாகட்டும் என்னை இன்முகத்துடன் வரவேற்று, என்னை காக்க வைக்காமல் வேலையை முடித்து அனுப்பி வைக்கும் சன் நகலகம் சரவணன் அவர்களுக்கும் நன்றி.

ஆண்டுதோறும் மலர் வெளியீட்டிற்கு அய்யா கேட்டவுடன் மறுக்காமல், தொடர்ந்து மண்டபம் கொடுத்து உதவும் இலக்கியப் புரவலர் மாம்பலம் ஆ.சந்திரசேகர் அவர்களுக்கு மாநாட்டின் சார்பிலும், மா.பெ.பொ. கட்சியின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# திறன்மிகு தியாகராயர் சாலை

- இராமியா

அண்மைக்காலமாய்த் "திறன்மிகு" என்ற சொல் வெகுவாகப் பயன்படுத்தப்பட்டுக் கொண்டு இருக்கிறது. அந்தவகையில் சாலைகளில் போக்குவரத்து வசதியை மேம்படுத்தத் திறன்மிகு சாலைகளை அரசு அமைத்துக் கொண்டு இருக்கிறது. அவற்றுள் சென்னை, தியாகராய நகரில் உள்ள தியாகராயர் சாலையும் ஒன்று.

முன்பு தியாகராயர் சாலையின் இருமருங்கிலும் நடைபாதைக் கடைகள் நிரம்பி இருந்தன. அக்கடைகள் இருப்பது நடைபாதையில் நடப்பவர்களுக்கு இடையூறாக இருப்பாகக்கூறி, அவற்றை அகற்ற முயன்றார்கள். ஆனால் தங்கள் வாழ்வுரிமை பாதிப்பதாகக் கூறி நடைபாதை வணிகர்கள் நீதிமன்றத்தில் வழக்காடி தங்கள் உரிமையைத் தக்கவைத்துக் கொண்டனர்.

வழக்கமான முறையில் நடைபாதைக் கடைகளை அகற்ற முடியாததைக் கண்ட "மிகத் திறமையான" அரசு அதிகாரிகள், திறன்மிகு சாலைத் திட்டத்தின் மூலம் அதைச் செய்துவிடலாம் என்று ஒரு வழியைக் கண்டனர். "புலிக்குப் புல் வாங்கிப் போட்ட செலவு ரூ.500" என்பது போல், நடைபாதை வணிகர்களின் வாழ்வுரிமைக்கு மாற்று இடம் ஒதுக்கிக் கடைகள் கட்டுவதாக அத்திட்டத்தை வடிவமைத்தனர். திட்டம் செயல்படுத்தப்படுவதற்கு முன்பு அது தங்களைப் பாதிக்கும் என்று நிறுவமுடியாத நிலையில் நடைபாதை வணிகர்கள் அதை எதிர்க்க முடியவில்லை.

பணமதிப்பு இழப்பு, கருப்புப் பணத்தை ஒழிக்கும் என்றுஉறுதிமெழி அளிக்கப்பட்டாலும் நடைமுறையில் அப்படி எதுவும் நடக்காதது போல் நடைபாதை வணிகர்களுக்கு அளித்த உறுதிமொழியும் பொய்யாகிப் போனது. அது ஒருபக்கம் இருக்கட்டும். யார் யார் பயன் அடைந்தார்கள்? என்ன என்ன விளைவுகள் ஏற்பட்டன?

நடைபாதையின் அகலம் அதிகமாக்கப்பட்டு, சீராக்கப்பட்டு நடப்பதற்கு வசதியாகச் செய்யப்பட்டு உள்ளது. இதனால் நடைபாதையில் நடப்பவர்களில் ஒரு விழுக்காட்டுக்கும் குறைவான எண்ணிக்கையில் உள்ள "அறிவாளிகள்" மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். மற்றவர்கள் தங்களுக்கு மலிவான விலையில் பொருள்களை விற்கும் வணிகர்களைக் காணாமல் ஏமாற்றம் அடைகின்றனர். அதனால் நடப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து வாகனப் போக்குவரத்துக்கு அதிக வசதி கிடைத்து உள்ளது.

அந்த அதிக வசதி எப்படிப் பயன்பட்டுக் கொண்டு இருக்கிறது? சாலையின் இருமருங்கிலும் வாகன நிறுத்த இடமாக மாற்றப்பட்டு உள்ளன.

இவ்வாறு சாலைப் பகுதி வாகன நிறுத்தப் பகுதியாக மாற்றப்பட்டு உள்ளதால், வாகன ஓடுதளம் குறுகிவிட்டது. அதன் தொடர்ச்சியாக அச்சாலை ஒருவழிப் போக்கு வரத்தாக மாற்றப்பட்டுவிட்டது. அதன் விளைவு?

முன்பு வாகனங்களில் வரும் செல்வந்தர்கள் அவற்றை நிறுத்த இடம் கிடைக்காமல் சிரமப்பட்டுக் கொண்டு இருந்தனர். அவர்களுடைய நேரம் அதிகமாக விரயம் ஆகிக்கொண்டு இருந்தது. இப்பொழுது அவர்கள் நேரம் விரயம் ஆகாமல் தங்கள் வேலையை முடித்துக் கொண்டு போக வசதி செய்து கொடுக்கப்பட்டு உள்ளது.

ஒருவழிச் சாலையாக மாற்றியதால் பேருந்தில் வரும் நடுத்தர, ஏழை மக்கள் அதிகமாக நடக்கவேண்டி உள்ளது. அதனால் அவர்களுக்குச் சிரமம் ஏற்பட்டு உள்ளது. ஏற்கெனவே குறைந்த விலைக் கடைகளை அகற்றியதன் மூலம் ஏழை, நடுத்தர நுகர்வோர்களை விரட்டி அடித்த திறன்மிகு சாலைத்திட்டம், அதிகமாக நடக்கவைக்கும் இன்னொரு சுமையையும் ஏற்றி அவர்களுடைய வருகையை மேலும் குறைக்க ஏற்பாடு செய்து, நடைபாதையின் பயன் அளவை வெகுவாகக் குறைத்து உள்ளது. அதாவது ஏழை, நடுத்தரப் பயனாளிகளில் மிகப் பலரை விரட்டி அடித்துவிட்டு, போக்குவரத்து நெரிசலைக் குறைத்துவிட்டோம் என்று வெளிச்சம் போடுகிறார்கள்.

சாலையின் இருமருங்கிலும் வாகன நிறுத்தங்களை உருவாக்கி வாகன உரிமையாளர்களுக்கு அளப்பரிய சலுகைகளை அளித்து, சாலையின் போக்குவரத்துத் தாங்குதிறனை வெகுவாகக் குறைத்துவிட்டார்கள். பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்காய் முடிந்த கதையாக, திறன்மிகு சாலை அமைக்கப்போய், திறன் குறைச்சாலையை அமைத்து இருக்கிறார்கள். அதுமட்டுமா? சாலையை ஒருவழிப் பாதையாக மாற்றியதன் மூலம் எல்லா வாகனங்களும் தேவை இல்லாமல் சுற்றிச்சுற்றி அதிக தொலைவு பயணிக்க வேண்டி உள்ளது. இதனால் தேவை இல்லாமல் எரிபொருள் விரயம் ஆகிறது. எரிபொருள் விரயம் ஆவதால் அந்நியச் செலாவணி விரயம் ஆகிறது என்பது மட்டும் அல்லாமல், புவிவெப்ப உயர்வை முடுக்கிவிடப்படவும் செய்கிறது.

இந்தக் கூத்துகள் எல்லாம் ஏன் நடக்கின்றன? ஏழைகளுக்கு எதிராகவும், பணக்காரர்களுக்குச் சார்பாகவும் என்று நினைப்பது ஒரு மேம்போக்கான கருத்தோட்டமே. உண்மையில் இது உழைக்கும் மக்களுக்கு எதிரானதும் முதலாளிகளுக்குச் சார்பானதும் ஆகும். எப்படி?

உழைக்கும் வர்க்கத்தினர் நுகரும் பொருள்கள் கிடைப்பதில் தடை அல்லது உராய்வு ஏற்படுத்தியதன் மூலம் இது அவர்களுக்கு எதிரான ஒரு திட்டமாகும்.

முதலாளிகளுக்கு எப்படிச் சார்பானது? முதலாளிகள் தங்கள் மூலதனத்தை இலாபகரமாக ஈடுபடுத்தும் தொழில்களில் முக்கியமானது வாகன உற்பத்தித் தொழில். வாகன உரிமையாளர்களுக்கு வசதிகளை

அதிகரித்துக் கொடுப்பதன் மூலம், இப்பொழுது வாகனம் இல்லாமல் உள்ள உயர் நடுத்தர நிலையில் உள்ள மக்களை வாகனம் வாங்க ஊக்குவிக்கிறார்கள். அதன் மூலம் வாகன உற்பத்தியை அதிகரித்து மூலதனப் பயணத்தில் உராய்வு ஏற்படாமல் பார்த்துக் கொள்கிறார்கள்.

வாகன உற்பத்தி மேலும் அதிகரித்தால் புவி வெப்ப உயர்வு மேலும் முடுக்கிவிடப்படும் அல்லவா? அது சுற்றுச் சூழலுக்கும், புவிப்பாது காப்பிற்கும் கேடு அல்லவா?

ஆம். ஆனால் அதைப்பற்றி முதலாளிகளுக்கும், முதலாளித்துவ அறிஞர்களுக்கும் கவலை இல்லை. மூலதனப் பயணம் உராய்வு இன்றித் தொடர வேண்டும் என்பதைத் தவிர வேறு எந்த அக்கறையும் அவர்களுக்கு இல்லை.

“திறன்மிகு சாலை” என்ற பெயரில் திறன் குறைச்சாலைகள் அமைக்கப்பட்டு ஏழை, நடுத்தர மக்களை இன்னலுக்கு உள்ளாக்குவதோடு மட்டும் அல்லாமல், புவிவெப்ப உயர்வையும் முடுக்கிவிடும் முதலாளித்துவ அரசின் திட்டங்களின் உடனடிக் கொடுமைகளையும், நீண்டகால அழிவினையையும் அமைதியாக ஏற்றுக் கொள்ளப்போகிறோமா? அல்லது உழைக்கும் மக்களின் நலன்களை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும் என்று அரசுக்கு அழுத்தம் தரப்போகிறோமா?

## மு.பாலகுருசாமியின் தந்தை மறைவு




கடலூர் மாவட்டம், திருமுட்டம் வட்டம் கொழை மு.பாலகுருசாமி, மு.பாலசுப்பிரமணியன், மு.பழனிவேல் இவர்களது தந்தை யார் பூ.முருகேசன் ஆசிரியர் (ஓய்வு) அவர்கள் 15.12.2019இல் தனது 92-ம் வயதில் காலமனார்.

அன்னாரது நினைவேந்தல் படத்திறப்பு 05.01.2020இல் நடைபெற்றது. தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் தி.வேல் முருகன் தலைமையில் முன்னாள் அமைச்சர் திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் படத்தினைத் திறந்து வைத்தார். புவனைச் சட்டமன்ற உறுப்பினர் திரு.துரை.கி.சரவணன் மற்றும் த.வா.க., தி.மு.க., தி.க. நிருவாகிகள் கலந்து கொண்டனர்.

## மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி சென்னையில் 05.02.2020 அன்று நடத்திய சிந்தனையாளன் “பொங்கல் மலர்-2020 வெயீட்டுவிழா” “தமிழ்நாட்டுக் கல்வி உரிமை மாநாடு” “சுயமரியாதை மாநாடு” ஆகிய நிகழ்ச்சிகள்

05.01.2020அன்று சென்னை, மேற்கு மாம்பலம் சந்திரசேகர் திருமண மண்டபத்தில் முதல் நிகழ்வாக சிந்தனையாளன் பொங்கல் மலர்-2020 வெளியீட்டு விழா மா.பெ.பொ.க., காஞ்சி மாவட்டச் செயலாளர் சி.நடராசன் தலைமையில் தொடங்கியது. காஞ்சி மாவட்டத் துணைச் செயலாளர் மா.சுப்பிரமணி வரவேற்க, தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை கு.இராம கிருட்டிணன் மலரை வெளியிட மாம்பலம் ஆ.சந்திரசேகரன் அவர்களின் மகன் ச.ஜனந் முதல்படியைப் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தோழர்கள் இரா.கலியபெருமாள், பா.வை.அருண் மொழி, மு.செயப்பிரகாசு, முனைவர் ப.வெங்கடேசன், சீனி.பழனி, இரா.பகுத்தறிவாளன் ஆகியோர் மலர் பெற்றனர். மலரை வெளியிட்ட கோவை.கு.இராமகிருட்டிணன் சிந்தனை யாளன் பொங்கல் மலர் தொடர்ந்து வெளியிடுவது பற்றியும் இன்றையச் சூழலில் பெரியார் கொள்கைகளின் தேவை பற்றியும் சிறப்பான உரையாற்றினார். தொடர்ந்து தோழர்கள் முத்து. அன்பழகன், இரா.கலியமூர்த்தி, பொ.சுப்பிரமணியன், செ.ஆனையப்பன், பா.மோகன், மு.சுவாமிநாதன், ந.கருணா கரன், நா.மதனகவி ஆகியோர் உரையாற்றினர். இந்நிகழ்வு கு.தொல்காப்பியன் நன்றியுரையுடன் நிறைவடைந்தது.

பகல் 12.00மணிக்கு சா.குப்பன் தலைமையில் தமிழ்நாட்டுக் கல்வி உரிமை மாநாடு தொடங்கியது. பேராசிரியர் சோம.இராசேந்திரன் சிந்தனைக்குரிய தொடக்கவுரை ஆற்றினார். வேலூர் பேராசிரியர் இர.நடராசன், சிதம்பரம் முனைவர் சி.இரா.இளங்கோவன், கீழ்ப்பெண்ணாத்தூர் கோ.கோதண்டராமன், காஞ்சிபுரம் குறளமிழ்தன் ஆகியோர் கல்விச் சிக்கல்கள் அவற்றிற்கான தீர்வுகள் பற்றி உரை யாற்றினர். வாலாச வல்லவன் படித்த மாநாட்டுக்கு தீர்மானங்கள் கையொலியுடன் நிறைவேற்றப்பட்டன. வேலூர் மீ.டில்லிபாபு நன்றியுரையுடன் இந்நிகழ்வு நிறைவடைந்தது.

பகல் உணவுக்கும் பின்னர் பிற்பகல் 3மணிக்கு வாலாசாவல்லவன் தலைமையில் சுயமரியாதை மாநாடு தொடங்கியது. மா.முருகேசன் வரவேற்புரைக்குப் பின் தலைவர் உரையும் தொடர்ந்து திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி தொடக்கவுரையும் ஆற்றினார். சி.பெரியசாமியும் அடுத்து புதிய குரல் ஓவியாவும் உரை யாற்றினர். தொடர்ந்து தமிழக மக்கள் முன்னணி ஒருங்கி ணைப்பாளர் பொழிலன், க.முகிலன், தி.ச.குணசேகரன், புதுவை இரா.திருநாவுக்கரசு, துரை.கலையரசு, கோவிஇராமலிங்கம், இரா.பச்சமலை, தி.துரைசித்தார்த்தன் ஆகியோர் உரை யாற்றினர். இறுதியில் தோழர் வே.ஆனைமுத்து நிறைவுரை யாற்றிட ப.வடிவேலு நன்றியுரையுடன் மாலை 7மணிக்கு மாநாடு நிறைவுற்றது. காலை மாநாடு தொடங்கியது முதல் நிறை வடையும் வரை அரங்கம் நிறைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# குசராத்தில் முசுலீம்கள் மீதான தாக்குதலுக்கு நற்சான்று வழங்கும் நானாவதி ஆணையம்

- க. முகிலன்

2002 பிப்பிரவரி 27, 28 மற்றும் மார்ச்சு 1 ஆகிய நாள்களில் குசராத் மாநிலத்தில் சங்க பரிவாரங்களால் ஆயிரத்துக்க மேற்பட்ட முசுலீம்கள் கொல்லப்பட்டதற்கும், பல்லாயிரம் முசுலீம்கள் கடுமை யாகத் தாக்கப்பட்டதற்கும் அவர்களின் கோடிக்கணக்கில் மதிப்புடைய உடைமைகள் அழிக்கப்பட்டதற்கும் அப்போது குசராத்தில் முதலமைச்சராக இருந்த நரேந்திர மோடி யின் ஆட்சிமீது குற்றம் சாட்ட முடியாது என்று இதற் காக நீதிபதி நானாவதி தலைமையில் அமைக்கப்பட்ட ஆணையம் நற்சான்று வழங்கியுள்ளது.

கலவரங்கள் நடக்கும் போது அரசு தகுந்த முன் னெச்சரிக்கையுடன் செயல்படவில்லை என்று ஊடகங் களும் மக்களும் குற்றம் சாட்டுவதைத் திசை திருப்பு வதற்காகவே விசாரணை ஆணையங்கள் அரசுகளால் அமைக்கப்படுகின்றன. ஆறு மாதங்களுக்குள் ஆணையம் ஆய்வறிக்கையை அளிக்க வேண்டும் என்று அரசு கூறினால், ஆறு ஆண்டுகளுக்குப் பிறகுகூட ஆணையத் தின் அறிக்கை தரப்படுவதில்லை. காலங் கடந்து அரசிடம் அளிக்கப்படும் ஆய்வறிக்கைகளில் பலவற்றை அரசுகள் வெளியிடாமல் தவிர்த்துவிடுகின்றன. பொதுவாக விசாரணை ஆணையங்களின் அறிக்கைகள் ஆட்சி யாளர்களையோ, அரசின் நிர்வாகத்தையோ குற்றஞ் சாட்டுவதில்லை. மேலும் கலவரம் நடந்து பல ஆண்டு கள் கழித்து அறிக்கை வெளியாவதால், அதில் யாரும் அக்கறை காட்டுவதில்லை. 2002-இல் குசராத்தில் முசுலீம்கள்மீது நடத்தப்பட்ட கொடிய தாக்குதல் குறித்த நீதிபதி நானாவதி ஆணையத்தின் அறிக்கையும் ஆறிய கஞ்சி பழங்கஞ்சி என்பது போலாகிவிட்டது. இது ஊடகங்களில் பேசுபொருளாகவில்லை.

2002-இல் குசராத்தில் முசுலீம்கள் மீது நடத்தப்பட்ட கொடிய தாக்குதலை, இந்தியா முழுவதும் விரிவு படுத்துவதற்கான ஒரு முன்னோட்டம் என்று சங் பரிவாரங்கள் கூறின. அதேபோல், நரேந்திர மோடி 13 ஆண்டுகள் குசராத் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த பின், 2014-இல் இந்தியாவின் பிரதமராகப் பதிவு ஏற்றது முதல் முசுலீம்களுக்கு எதிரான வெறுப்பு ணர்வையும், தாக்குதலையும் இந்திய அளவில் அரசின் நடவடிக்கைகள் மூலமும், சங் பரிவாரங்கள் வழியா கவும் மேற்கொண்டு வருகிறார். இந்தப் பின்னணியில் 2002-இல் குசராத்தில் முசுலீம்கள் மீதான தாக்குத லையும் அதுகுறித்த நானாவதி விசாரணை ஆணைய அறிக்கையையும் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.

1992 திசம்பர் 6 அன்று அயோத்தியில் பாபர் மசூதி சங் பரிவாரங்களால் தகர்க்கப்பட்ட பின், அவ்விடத் தில் இராமர் கோயில் கட்டுவதற்காகக் ‘கரசேவை’ செய்தல் என்ற பெயரில் நாள்தோறும் இந்தியா முழு வதிலிருந்தும் ஆயிரக்கணக்கான இந்துக்கள் அயோத் திக்குச் சென்று வந்தனர். அவ்வாறு குசராத்திலிருந்து அயோத்திக்குச் சென்று திரும்பிய கரசேவகர்கள் இருந்த ‘சபர்மதி’ தொடர்வண்டி கோத்ரா தொடர்வண்டி நிலை யத்தில் இருந்த போது எஸ்.6 எண் கொண்ட பெட்டித் தீப்பற்றி எரிந்தது. அப்பெட்டியில் இருந்த 59 கரசேவ கர்கள் தீயில் கருகி மாண்டனர். இந்நிகழ்ச்சி 2002 பிப்பிரவரி 27 அன்று நடந்தது. முசுலீம்கள்தான் தொடர் வண்டியின் பெட்டிக்குத் தீயிட்டனர் என்று கூறி விசுவ இந்து பரிசத், பஜ்ரங்தள் உள்ளிட்ட சங் பரிவாரங்கள் முசுலீம்கள் மீது கொடிய தாக்குதலை நடத்தின. கருவுற்றி ருந்த முசுலீம் பெண்களின் வயிற்றை வாளால் கிழித்து அக்குழந்தையை எடுத்து மேலே வீசி வாளால் வெட்டி னர். அந்த அளவுக்கு முசுலீம் வெறுப்பு எனும் நஞ்சு சங் பரிவாரங்களின் நெஞ்சங்களில் வளர்த்தெடுக்கப் பட்டிருந்தது.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட முசுலீம்கள் கொல்லப் பட்டனர். பல ஆயிரம் முசுலீம்கள் படுகாயமடைந்தனர். கோடிக்கணக்கில் மதிப்புடைய முசுலீம்களின் சொத்துகள் சூறையாடப்பட்டன. இலட்சித்திற்கும் மேற்பட்ட முசுலீம்கள் அகதிகள் முகாம்களில் அடைக்கலம் புகுந்தனர். மூன்று நாள்கள் முசுலீம்கள் மீது சங்பரிவாரங்கள் நடத்திய தாக்குதல்களைத் தடுத்திட முதலமைச்சர் நரேந்திர மோடியின் ஆட்சி நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுடன் தாக்குதல் நடத்தியவர் களுக்கு ஆதாரவாகச் செயல்பட்டது. எனவேதான் அப்போது பிரதமராக இருந்த வாஜ்பாய் முதலமைச்சர் நரேந்திர மோடி, ‘‘இராஜ தர்மத்தைக் காக்கத் தவறி விட்டார்’’ என்று கண்டித்தார். அப்போது துணைப் பிரதமராக இருந்த எல்.கே. அத்வானி நரேந்திர மோடிக்கு உற்ற துணையாக நின்றதால் நரேந்திர மோடி பதவி விலகும் நிலையிலிருந்து தப்பினார்.

குசராத்தில் முசுலீம்கள் மீதான கொடிய தாக்குதலுக்கு உலக அளவில் கடும் கண்டனம் எழுந்தது. எனவே நரேந்திர மோடி தலைமையிலான குசராத் அரசு, 2002 மார்ச்சு மாதம் நீதிபதி கே.ஜி. ஷா தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையத்தை அமைத்தது. சபர்மதி தொடர்வண்டிப் பெட்டி எரிப்பு மற்றும் அதன் விளைவாக எழுந்த கலவரங்கள் குறித்து ஆராய்தல் ஆணையத்தின் நோக்கமாக அறிவிக்கப்பட்டது. நீதிபதி கே.ஜி. ஷா மோடிக்கு நெருக்கமானவர் என்று எதிர்ப்புகள் எழுந்ததால், உச்சநீதிமன்ற நீதிபதி ஜி.டி. நானாவதி ஆணையத்தின் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டார். 2008-இல் கே.ஜி. ஷா இறந்துவிட்டதால், குசராத் உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி அக்சய் மேத்தா ஆணையத்தின் உறுப்பினரானார்.

2004-இல் மன்மோகன் சிங் தலைமையில் காங்கிரசுக் கட்சியின் ஆட்சி ஒன்றிய அரசில் அமைந்தது. ஒன்றிய அரசு குசராத் கலவரம் குறித்து வேறொரு விசாரணை ஆணையத்தை அமைக்குமோ என்கிற அச்சத்தால், ஆணையத்தின் விசாரணை இலக்கை குசராத் அரசு விரிவுபடுத்தியது. முதலமைச்சர் மோடி, பிற அமைச்சர்கள், காவல் துறை அதிகாரிகள், தனிப்பட்ட நபர்கள், அமைப்புகள் ஆகியோர் குறித்தும் விசாரணை ஆணையம் ஆராயும் என்று குசராத் அரசு அறிவித்தது.

மன்மோகன் சிங் அமைச்சரவையில் தொடர்வண்டித் துறை அமைச்சராக இருந்த லாலு பிரசாத், இரயில்வே துறையின் உயர்மட்ட விசாரணைக் குழு ஒன்றை கோத்ரா இரயில் பெட்டி எரிப்பு குறித்து ஆராய அமைத்தார். அக்குழு, எஸ்.-6 இரயில் பெட்டியினுள் இருந்த பொருளால்தான் தீப்பிடித்து எரிந்தது என்று கூறியது.

விசாரணை ஆணையத்தின் முதல் அறிக்கை 2008 செப்டம்பரில் அரசிடம் அளிக்கப்பட்டது. அதன்பின் அது குசராத் சட்டமன்றத்தில் வைக்கப்பட்டது. அதில் எஸ்.-6 பெட்டியிலிருந்து திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதலால்தான் தீப்பற்றியது என்று கூறப்பட்டது நானாவதி - மேத்தா ஆணையத்தின் இரண்டாவது அறிக்கை 2018 நவம்பர் 11 அன்று குசராத் அரசிடம் அளிக்கப்பட்டது. ஆனால் அந்த ஆய்வறிக்கை குசராத் சட்டமன்றத்தில் வைக்கப்படவில்லை. குசராத் கலவரத்தின் போது கூடுதல் காவல்துறை ஆணையராக இருந்த ஸ்ரீகுமார் என்பவர் குசராத் உயர்நீதிமன்றத்தில் நானாவதி - மேத்தா அறிக்கையைக் குசராத் சட்டமன்றத்தில் வைக்க வேண்டுமென்று பொதுநல வழக்குத் தொடர்ந்தார். அதன் விளைவாக 11.12.19 அன்று அந்த அறிக்கை குசராத் சட்டமன்றத்தில் வைக்கப்பட்டது.

ஒன்பது தொகுதிகளாக - 1500 பக்கங்கள் கொண்ட நானாவதி-மேத்தா ஆணைய அறிக்கையில், ''கோத்ரா கலவரத்தில் முதலமைச்சருக்கோ, மற்ற அமைச்சர்களுக்கோ, காவல்துறை அதிகாரிகளுக்கோ எவ்வகையிலும் தொடர்பு இருந்ததற்காக எந்த ஆதாரமும் இல்லை. மேலும் வகுப்புக் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதிலும் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு வழங்குவதிலும் தங்கள் கடமையைச் செய்வதில் எந்தக் குறைபாடும் இல்லை. தேசிய மனித உரிமை ஆணையத்தின் வழிகாட்டுதல்கள் பின்பற்றப்பட்டுள்ளன. எந்தவொரு மத அமைப்போ, அரசியல் கட்சியோ திட்டமிட்டு இக்கலவரத்தை நடத்தியதற்கான ஆதாரம் இல்லை. விசுவஇந்து பரிசத், பஜ்ராங்தள் ஆகிய அமைப்புகளின் உள்ளூர் அளவிலான தொண்டர்கள் சிலர் தங்களது பகுதியில் வன்முறையில் ஈடுபட்டனர் என்பதை ஆணையத்தின் முன் வைக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் சொல்ல முடியும்'' என்று கூறப்பட்டுள்ளது.

சுருக்கமாகச் சொல்வதாயின், 1992 திசம்பர் 6 அன்று அயோத்தியில் திரண்ட கரசேவகர்கள் உணர்ச்சி வயப்பட்டு பாபர் மசூதியை இடித்தது போல், 2002 பிப்பிரவரி 27 அன்று எஸ்-6 இரயில் பெட்டியில் 59 கரசேவகர்கள் மாண்டதால் இந்துக்கள் உணர்ச்சி வயப்பட்டு முசுலீம்களைத் தாக்கினார்களே தவிர, இதில் இந்து அமைப்புகளுக்கோ, அரசு நிர்வாகத்திற்கோ, ஆட்சியில் இருந்தவர்களுக்கோ எந்த வகையிலும் தொடர்பு இல்லை; அவர்களைக் குற்றம் சொல்ல முடியாது என்பதே நானாவதி - மேத்தா ஆணையத்தின் கூற்றாகும்.

முதலமைச்சராக இருந்த மோடியோ, அவரின் அமைச்சர்களோ முசுலீம்கள் மீதான தாக்குதலை நேரடியாகவோ, மறைமுகமாகவோ தூண்டிவிட்டார்களா என்பது ஒருபுறம் இருக்க, ஆயிரத்துக்கும் மேற்பட்ட முசுலீம்கள் கொல்லப்படவும், பல்லாயிரக்கணக்கான முசுலீம்கள் தாக்குதலால் பாதிக்கப்பட்டு, உடைமைகளை இழந்து அகதிகள் முகாம்களில் தங்கிடவும் நேர்ந்த கொடுமைக்கு ஆட்சியில் இருந்த மோடியும் அவருடைய அமைச்சர்களும் பொறுப்பேற்க வேண்டுமல்லவா? அதனால்தானே பிரதமர் வாஜ்பாய், நரேந்திர மோடி 'இராஜ தர்மத்தைக்' கிடைப்பிடிக்கத் தவறிவிட்டார் என்று கண்டித்தார்.

மேலும் விசாரணை நீதிமன்றத்தால் முதலமைச்சர் மோடி ஆட்சியில் பெண் அமைச்சராக இருந்த மாயா கொத்தானியும் மற்ற பா.ச.க.வினரும் குசராத் கலவரத்தில் ஈடுபட்டதற்காகத் தண்டிக்கப்பட்டனர். ஆனால் நானாவதி ஆணையம் முழுப்பூசணியைச் சோற்றில் மறைப்பது போல் இந்த உண்மையைப்

புறக்கணித்துவிட்டு, எங்கும் திட்டமிட்ட வன்முறை நிகழவில்லை என்றும் எந்த அரசியல் கட்சியும், மத அமைப்பும் இதில் ஈடுபடவில்லை என்றும் கூறுவது வெட்கக் கேடாகும்.

குசராத்தில் 2002 பிப்பிரவரி 27, 28 மற்றும் மார்ச்சு 1 ஆகிய நாள்களில் முசுலீம்கள் மீது சங் பரிவாரங்கள் காவல் துறையின் - ஆட்சி நிர்வாகத்தின் துணையுடன் எவ்வாறு கொடிய தாக்குதல்களை நடத்தின என்பது குறித்து நாளேடுகளில் அப்போது விரிவான செய்திகள் வெளியிடப்பட்டன. காவல் துறையின் கட்டுப் பாட்டு அறைகளில் சங் பரிவாரத்தினர் அமர்ந்து கொண்டு தாக்குதல்களுக்கான ஆணைகளைப் பிறப்பித்தனர். காவல் துறையினர் உயர் அதிகாரிகள் மூலம் விசார ணை ஆணையத்திடம் ஆட்சியாளர்கள் - காவல் துறை அதிகாரிகள் - சங் பரிவாரங்களுக் கிடையே தாக்குதலின் போது இருந்த தொடர்புகள் குறித்து சாட்சியம் அளித்தனர்.





குசராத் கலவரத்தின் போது கூடுதல் காவல் துறை ஆணையராக இருந்த ஆர்.பி. ஸ்ரீகுமார் முதலமைச்சர் நரேந்திர மோடி அரசு கலவரத்தை ஒடுக்கத் தவறி விட்டது என்று அப்போதே குற்றம் சாட்டினார். நானாவதி ஆணையத்திடம் இதுகுறித்து ஒன்பது அறிக்கைகள் அளித்தார். அதனால் குசராத் அரசு அவருக்குப் பதவி உயர்வு அளிக்கவில்லை. மற்றொரு காவல் துறை அதிகாரி இராகுல் சர்மா என்பவர் குசராத் கலவரத்தின் போது பவநகர் மாவட்டத்தின் காவல் துறை கண் காணிப்பாளராக இருந்தார். அவருடைய கட்டுக்கோப் பான நடவடிக்கையால், பவநகர் மாவட்டத்தில் சங் பரிவாரங்களின் வெறியாட்டம் மட்டுப்படுத்தப்பட்டது. நரோடா பாட்டியா பகுதியில் முசுலம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அரசியல்வாதிகளுக்கும் காவல் துறை யினருக்கும் இடையே நடந்த உரையாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவை, இராகுல் சர்மா 2004-இல் நானாவதி ஆணையத்திடமும் 2008-இல் சிறப்புப் புலனாய்வுக் குழுவிடமும் அளித்தார். அதனால் மோடி ஆட்சி அவருக்குப் பலவகையிலும் தொல்லை கொடுத்தது. அவர் பதவி யிலிருந்து விலகி வழக்குரைஞராகத் தொழில் செய்து கொண்டிருக்கிறார்.

மூன்றாவது காவல் துறை அதிகாரி சஞ்சய் பட். இவர் குசராத் கலவரத்தின் போது உளவுப் பிரிவில் அதிகாரியாக இருந்தவர். சக்கியா ஜப்ரி வழக்கில் சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம் சாட்சியம் அளித்த சஞ்சய் பட், ''கலவரம் நடக்கப் போகிறது என்று முதலமைச்சர் நரேந்திர மோடிக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. 2002 பிப்பிரவரி 27 அன்று மோடி கூட்டிய அரசு அதிகாரிகள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் கூட்டத் தில் நானும் இருந்தேன். அப்போது நரேந்திர மோடி இந்துக்கள் தங்கள் சினத்தை வெளிப்படுத்த அனுமதிக்க வேண்டும் என்று சொன்னார்'' என்று கூறினார். அதன்பின் குசராத் அரசு அளித்த நெருக்குதல் களைத் துணிவுடன் எதிர்கொண்டார் சஞ்சய் பட். ஆனால் நரேந்திர மோடி பிரதமரான பின் 2015-இல் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். 1990-இல் அவர் கட்டுப்பாட்டின்கீழ் இருந்த காவல் நிலையத்தின் விசாரணைக் கைதியின் சாவுக்கும் இவருக்கும் தொடர்பு இருப்பதாக அண்மை யில் குற்றஞ்சாட்டப்பட்டு வாழ்நாள் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறார்.

இம்மூன்று காவல்துறை அதிகாரிகளும் அரசுக்குக் களங்கம் கற்பிக்க வேண்டும் என்கிற உள்நோக்கத்துடன் செயல்பட்டுள்ளனர் என்று நானாவதி ஆணையம் கண்டித்துள்ளது. இம்மூவர் மீதும் காவல்துறையின் விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று குசராத் அரசு அறிவித்துள்ளது. இதேபோன்று குசராத் கலவரத்தில் கொல்லப்பட்ட முசுலீம் குடும்பங்களுக்கு நீதித்துறை மூலம் நியாயம் பெற்றுத் தருவதற்காகத் தொடர்ந்து போராடிவரும் சமூகச் செயற்பாட்டாளர் தீஸ்தா செதல்வத் மீதும் குசராத் அரசு பல வழக்குகளைத் தொடுத்துள்ளது.

நானாவதி - மேத்தா ஆணையம் குசராத் அரசுக்கு ஒரு அடியாள் போல் செயல்பட்டிருக்கிறது. எனவே தான் ஆணைய அறிக்கையில், ''இதுபோன்ற கலவர சமயங்களில் செய்தி ஏடுகள் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்கின்றனவா என்று அரசு அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும். செய்தி ஊடகங்கள் எல்லை மீறுவதாகத் தெரிந்தால் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று அறிவுரை கூறியுள்ளது. அரசுக்கு எதிராகக் கருத்து கூறுவோரை தேச விரோதிகள், நகர நக்சலைட்டுகள் என்று கூறி மோடி ஆட்சி ஒடுக்கி வரும் நிலையில், எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றுவது போல் ஆணை யத்தின் அறிவுரை அமைந்துள்ளது.

இந்தியா சுதந்தரம் அடைந்த பின் திட்டமிட்டு முசுலீம்கள் மீது நடத்தப்பட்ட கொடிய தாக்குதல் இது. இக்கொடிய தாக்குதலுக்கு யாரும் பொறுப்பில்லை என்று நானாவதி ஆணையம் கூறுவது சட்டத்தின் ஆட்சி, சனநாயகக் கட்டமைப்பு ஆகியவற்றையே இழிவு படுத்துவதாகும். மதத்தின் பெயரால் மக்களைப் பிளவுபடுத்தி நாட்டைப் பாசிசத்தை நோக்கி நகர்த்திக் கொண்டிருக்கும் சங்பரி வாரங்களின் ஆதிக்கத்தை முறியடித்து உண்மையான மதச்சார்பின்மையையும், சனநாயக நெறியையும் மீட்டெடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு நம்முன் உள்ளது.

தேசியப் பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் ஆணையத்தின்
(NATIONAL COMMISSION FOR BACKWARD CLASSES [NCBC])
மாண்புமிகு உறுப்பினர்

# ஆச்சாரி தல்லோஜு அவர்களுக்குப் பாராட்டு விழா

✻

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் விசுவகரும வகுப்பினருக்கு உள்ஒதுக்கீடு கோரிக்கை மாநாடு**

✻

**எல்லா வகுப்புகளுக்கும் விகிதாசார வகுப்புவாரிப் பங்கீட்டுக்கான அரசமைப்புச் சட்டத் திருத்தக் கோரிக்கை மாநாடு**

இடம் : **விசயா மகால்**
அவ்வை சண்முகம் சாலை, (நாகாத்தம்மன் கோயில் அருகில்)
இராயப்பேட்டை, சென்னை 600014.

நாள் : **9-2-2020, ஞாயிறு**
முற்பகல் 10 மணி முதல் பகல் 1.30 மணி வரை

## அனைவரும் வருக!

: நிகழ்ச்சி ஏற்பாடு :
**விசுவகரும சமுதாய மேம்பாட்டு ஆர்வலர்கள்**
**ASPIRANTS OF V.K. COMMUNITY DEVELOPMENT**
கைப்பேசி : 9444607804

## நிகழ்ச்சி நிரல்

தலைமை :
கவிஞர் **வேணு. குணசேகரன்**
நிறுவனர், எழில் கலை மன்றம்
சென்னை

வரவேற்புரை :
திருமதி **கலாவதிசண்முகம்**
மேலாளர் (ஓய்வு), இந்தியன் வங்கி

நிகழ்ச்சித் தொகுப்புரை :
தோழர் **தி.ஞா. அருள்ஒளி**
சென்னை

கோரிக்கை விளக்க உரை :
தோழர் **லோ. இரத்தினகுமார்**
ரூபம் ஆர்ட்ஸ், வேலூர்

பாராட்டுரை :
தோழர் **வே. ஆனைமுத்து**
புரவலர் – தலைவர்
அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர்,
பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர்,
மதச் சிறுபான்மையினர் பேரவை

நன்றியுரை :
தோழர் **கோ. விசுவநாதன்**
ஆசிரியர், பஞ்ச சக்தி

சிறப்பு விருந்தினரின் ஏற்புரை :
**திரு. ஆச்சாரி தல்லோஜு**
மாண்புமிகு உறுப்பினர்
தேசியப் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கான
ஆணையம், புது தில்லி

ஒருங்கிணைப்பாளர் : **கலசம்**

## பாராட்டு செய்பவர்கள்

தோழர்கள் :

**மா. ஞானப்பிரகாசம்**
செயலாளர்
திருப்பத்தூர் மின்வாரிய ஓய்வூதியர் சங்கம்

**ச. இராதாகிருட்டிணன்**
அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவை
திருச்சி

**டாக்டர் விமுனாமூர்த்தி**
நிறுவனர், முற்போக்கு சமூக நீதிப் பேரவை
காஞ்சிபுரம்

**மு. அரங்கநாதன்**
பொருளாளர், பெரியார் சமூக நீதிப் பேரவை
மறைமலைநகர்

**வே. இராசேந்திரன்**
செயலாளர், பெல் சமூகநீதிப் பேரவை,
இராணிப்பேட்டை

**கு.மா. சுப்பிரமணியன்**
முத்தரையர் வரலாற்று ஆய்வு மன்றம்

**த.ம. பிரகாஷ்**
தலைவர்
வண்ணார் குல ஒருங்கிணைப்புக் குழு

**க. இராம்பாபு**
விசுவகரும சமுதாய மேம்பாட்டு ஆர்வலர்

**கு. தனசேகர்**
பொதுச் செயலாளர்
மத்திய அரசு பிற்படுத்தப்பட்ட அலுவலர்
நலச் சங்கங்களின் பேரமைப்பு

மற்றும்
**ஒடுக்கப்பட்ட சமுதாய மேம்பாட்டு ஆர்வலர்கள்**

# ஊ.பு.அ.சௌந்திரபாண்டியன்
# சிம்மம் என எழுந்த ஒப்பற்ற தலைவன்

- மரு.சோமாஸ்கந்தன்

பதினாறாம் நூற்றாண்டில் விஜய நகரப் பேரரசின் கீழ் சிற்றரசர்களாக விளங்கிய சோழன் வீரசேகரனும், பாண்டியன் சந்திரசேகரனும் போரிட்டுக் கொண்டிருந்த காலத்தில், இடையே நுழைந்த நாயக்கர்கள் பாண்டிய அரசைக் கைப்பற்றித் தென்தமிழகத்தில் ஆட்சிபுரியத் தலைப்பட்டனர். அவர்களின் ஆட்சிக்கு உறுதுணையாக இருந்தவர்கள் சாதிய அடுக்கில் மேல்தட்டிலிருந்த பிராமணர்களேயாவர்.

அரியணையில் நாயக்க மன்னர்கள்; ஆனால் ஆட்சி அதிகாரம் அனைத்தும் பிராமணர் கைகளிலே! நாயக்க மன்னர்களின் தளவாய்கள் பெரும்பாலும் பிராமணர்களாகவே இருந்தனர். ஆனபடியால் அவர்கள் அளவற்ற உரிமைகளையும், செல்வாக்கையும் பெற்றிருந்தனர். ஆகவே அவர்களின் எண்ணப்படியே நாயக்க மன்னர்களின் ஆட்சி நடைபெற்றது!

அதன் விளைவாக, ஆண்ட பாண்டியர் வழிவந்த நாடார் சமுதாயத்தினர், அரசியல் பொருளாதார,சமுதாயத் தளங்களில் சொல்லொண்ணாக் கொடுமைகளுக்கு உள்ளாக் கப்பட்டனர். நாடார் சமுதாயத்தினர் பொது வீதிகளில் நடக்கத் தடை; கோயில் வீதிகளில் திருமண ஊர்வலங்கள் நடத்த அனுமதி மறுப்பு; மேல் சாதியினர் முன் நடந்திடக் கூடாது; பொதுக் கிணறுகளைப் பயன்படுத்த அனுமதி கிடையாது; இந்த மக்கள் கால்களில் காலணி அணிதல் கூடாது; குடை எடுத்துச் செல்லக் கூடாது. இச் சமுதாயப் பெண்கள் பொன் நகைகள் அணிதல் கூடாது; இந்தப் பெண்கள் மார்பகங்களை மேலாடை அணிந்து மறைத்திடல் கூடாது; தண்ணீர்க் குடங்களை இடுப்பில் ஏந்திச் செல்லக் கூடாது எனப் பல்லாற்றாலும் கொடுமைப் படுத்தப்பட்டனர்.

இவ்வாறு காலங்காலமாய் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்ட இந்தச் சமூக மக்கள் வீறுகொண்டெழுவதற்குச், சிம்மம் என எழுந்த ஒப்பற்ற தலைவன் தான் ஊ.பு.அ. சௌந்திரபாண்டியன்.

திண்டுக்கல்-கொடைக்கானல் அருகில் பட்டிவீரன்பட்டியில், வாழ்ந்த முக்கிய பண்ணையார் குடும்பத்தில், 'தோன்றில் புகழோடு தோன்றுக' என்ற வைரவரிக்கு எடுத்துக்காட்டாக அந்த ஆண் சிங்கம் நிகர் தலைவர் தோன்றினார்.

அந்தப் பண்ணையின் உரிமையாளர் ஊ.பு.அ. ஐயநாடார். அவருடைய கரம் பற்றியவர் திருமதி சின்னம்மாள். இவர்களுக்கு 1893 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் இரண்டாவது மகனாகப் பிறந்தார் பட்டிவீரன்பட்டி. ஊ.பு.அ. சௌந்திர பாண்டியன்.

### உடன்பிறப்புகள்

இவருடன் பிறந்தவர்கள் தமக்கை பெரிய நாயகி, இரண்டாவது பாண்டியனார், மூன்றாவது தங்கை இராஜலட்சுமி, நான்காவது தங்கை இராஜேஸ்வரி, ஐந்தாவது தம்பி இரங்கசாமி.

தன் தாய் தந்தையரிடம் மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார்., தன் உடன்பிறந்தவர்களிடம் அளப்பரிய அன்பும் பாசமும் கொண்டிருந்தார். மேலும் மற்ற உற்றார் உறவினர்களை உள்ளன்புடன் நேசித்து வாழ்ந்தார். மனித நேயமிக்க மனிதராக வளர்ந்து வந்தார் .வாய்மையையும் நேர்மையையும் போற்றி வாழ்ந்து வந்துள்ளார். போட்டி, பொறாமை, புறங்கூறுதல் ஆகிய பண்புகளைப் புறந்தள்ளி வாழ்ந்து வந்துள்ளார். அஞ்சாமை அவருடன் பிறந்த பண் பாகும். கல்வி:

அவருடைய இல்லத்தில் வசித்துவந்த ஆசிரியர் சின்னசாமி அவர்களிடம் முதலில் பாடம் பயின்றார். பின்னர் விருதுநகரில் அமைந்திருந்த விருதுநகர் சத்திரிய வித்யாசாலையில் தொடக்கக் கல்வி பயின்றார். பின் மதுரையில் ஐக்கியக் கிறித்துவ உயர் நிலைப்பள்ளியில் உயர் நிலைப் பள்ளிப் படிப்பை முடித்த பின்னர், சென்னை கிறித்துவக் கல்லூரியில் கலை இணையர் வகுப்பில் சேர்ந்து படிக்க முற்பட்டார். ஆனால் குடும்பப் பொறுப்பின் காரணமாகக் கல்லூரிப் படிப்பைக் கைவிட்டார்.

### விளையாட்டு

விளையாட்டுகளில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். பள்ளியில் பயிலுங்காலத்தில் கால்பந்தாட்ட அணியில் இடம் பெற்றுத் தான் சிறந்த கால்பந்தாட்ட வீரர் என மெய்பித்துள்ளார். பல போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளையும் பெற்றுள்ளார். நிலாக் காலங்களில் தமிழ் மண்ணுக்கே உரிய சடுகுடு ஆட்டம் ஆடி மகிழ்ந்துள்ளார். தன் பண்ணையில்லத்தில் டென்னிஸ் ஆடுகளம் அமைத்து டென்னிஸ் ஆடி மகிழ்ந்துள்ளார்.

### குடும்பம்

அகவை இருபது நிரம்பிய பின்னர் 1913 ஆம் ஆண்டு, விருதுநகரில் பிறந்து வளர்ந்த பாலம்மாள் என்ற பெண்மணி யைக் கடிமணம் புரிந்துகொண்டார்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. குறள்-45

என்பதை அறிந்து அன்போடும், அறப்பண்போடும் கருத்தொருமித்து இல்லறம் எனும் நல்லறம் நடத்தினர். விருந்தோம்பலில் சிறந்து விளங்கினர். செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பர். பணியாளர்களிடம் அன்புடனும், கனிவுடனும், தோழமையுடனும் நடந்துகொள்வர். தீனதயாளன், விஜயாம்பிகா, இராஜசேகரன் என்கிற சந்திராபோஸ், பாஸ்கரன்,

கிருஷ்ணமூர்த்தி என ஐவர் இவர்களுடைய மக்கள் செல்வங்கள். இராஜசேகர் அகவை 15 இல் கொடைக்கானல் ஏரியில் எதிர்பாராத நிலையில் காலமாகிவிட்டார்.

### நண்பர்கள்

சௌந்திர பாண்டியனார் எல்லோரிடமும் சாதி, மதம், கட்சி கடந்து இன்முகம் காட்டிப் பழகும் தன்மையர் ஆனபடியால், அவருடைய நட்பு வட்டம் பெரியது குறிப்பாகப் பெரியாரின் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டிருந்த பாண்டியன், அவரிடம் மிகுந்த அன்புடனும் நட்புரிமையுடனும் பழகி வந்துள்ளார்

மதுரையில் சர்.பி.டி.இராசனுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார் பொதுக்காரியங்களில் ஈடுபடுமுன்னர் இருவரும் ஒன்றினைந்து ஆலோசனை செய்வர்; அதன் பின்னரே செயல்படுவர். மதுரையின் இரட்டைத் தலைவர்கள் என்றே மக்கள் அவர்களைக் கருதினர். பூ.வாளுர் அ.பொன்னம்பலம் அவர்களின் நட்பும் அத்தகையதே

மற்ற முக்கிய நண்பர்கள், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவ நாதம், புரட்சிப்பாவேந்தர் பாரதிதாசன், சர்.பிட்டி தியாகராயர், சுப்பராயர், பசும்பொன் முத்து ராமலிங்கம், திருச்சி இரத்தினவேல், ஆதித் திராவிடத் தலைவர் சிவராஜ், கலைவாணர்.என்.எஸ்.கிருஷ்ணன் மற்றும் பலர் அவரிடம் நெருங்கிப் பழகி நட்பு கொண்டிருந்துள்ளனர்.

### நட்பிற்காக

திருச்சி நகராட்சித் தலைவராக இருந்தவர் திரு.இரத்தின வேல் தேவர். இவர் பாண்டியனாரின் உயிர் நண்பர். அவர் கொடைக்கானலைச் சுற்றிப்பார்க்க விரும்பினார். கொடைக் கானலைச் சுற்றிக்காட்டுதற்குத் தன் மகன் இராஜசேகரனை உடன் அனுப்பி வைத்தார். தேவர் ஏரியில் படகில் சுற்றி வந்துள்ளார்.கரையிலிருந்த இராஜசேகரனை நீந்தி வந்து படகினைப் பிடிக்கமுடியுமா என்று வினவியுள்ளார். இளம் கன்று பயம் அறியாது என்பதற்கிணங்க, ஏரியில் நீந்தத் தலைப்பட்டார். சிறிது நேரத்தில் நீரின் குளிர்ச்சியாலும், நீரிலிருந்த செடிகொடிகள் அவரை இறுகப்பற்றிக் கொண்டதாலும் நீரிலிருந்து மீள முடியாமல் அவர் துன்புற்று உயிர் நீத்தார். பாண்டியனார் செய்தி அறிந்தார். இத் துன்ப நிகழ்வை எவர்க்கும் அறிவிக்காது இரகசியம் காத்தார்; கலவரம் ஏற்படாதவாறு நிலைமையைச் சமாளித்தார். இரத்தினவேல் தேவரைப் பாதுகாப்போடு திருச்சிக்கு அனுப்பி வைத்தபின்னரே எலோருக்கும் மகனின் மரணம் குறித்துச் சொல்லியுள்ளார். மகனை இழந்த சோகத்திலும் நண்பருக்கு ஊறு விளைந்திடக் கூடாது என்று கவலையோடு செயல்பட்டுள்ளார்.

### பசும்பொன் முத்துராமலிங்கம்-பாண்டியன் நட்பு:

முத்துராமலிங்கம் வெளியூர்களுக்குச் சென்றால் அவருடைய நண்பர்கள் தம் இல்லங்களில் இருந்து மதிய உணவு அனுப்பிவைப்பர். அவரின் பாதுகாவலர்கள் அந்த உண வினைப் பரிசோதித்த பின்னரே முத்துராமலிங்கம் உண்பார். ஒருமுறை பாண்டியனார் இல்லத்திலிருந்து உணவு அனுப் பப்பட்டது. தேவரின் காவலர்கள் உணவினைப் பரிசோதிக்க முயன்றதைக் கண்ணுற்ற தேவர், பாண்டியன் இல்லத்து உணவைப் பரிசோதிக்கத் தேவையில்லை என்றும், பாண்டியன் தன் உயிர் நண்பர் என்றும் கூறி விருப்புடன் உண்ணத்தலைப் பட்டார் என்று விஷயமறிந்தோர் குறிப்பிட்டுள்ளனர். இந்நிகழ்வு பாண்டியனார் எல்லோரிடமும் ஆழ்ந்த நம்பிக்கைக்குரிய நண்பராகவே பழகி வந்துள்ளார் என்றறிய முடிகின்றது.

### வாக்குத் தவறாமைக்கு ஓர் எடுத்துக்காட்டு

திரு. ஏ.கே.செர்புதின் என்ற செல்வந்தரின் தோட்டத்தை மூன்றரை இலக்கம் உருபாய்க்குக் குத்தகைக்கு பாண்டியனார் எடுத்திருந்தார். வரும் வருவாயில் இருபத்தைந்து விழுக்காடு பாண்டியனாருக்கும் எழுபத்தைந்து விழுக்காடு செர்புதினுக்கும் என்று உறுதி செய்துகொண்டனர். வந்தவருவாய் ஓர் இலக்கம். அதனால் மகிழ்வுற்ற செர்புதின் அவர்கள் பாண்டியனாரிடம் உருபாய் ஐம்பதாயிரம் தந்துள்ளார். ஆனால் பாண்டியனார் உறுதி செய்து கொண்டதற்கொப்ப, உருபாய் இருபத்தைந்தா யிரத்தைத் திருப்பிக் கொடுத்தார். இதனைக் குறித்து செர்புதின், கதையிலே தான் ''நான் நாணயம் உள்ளவங்களைப் பத்தி படிச்சிருக்கேன். இப்ப நேர்லே பாக்கறேன் என்று கூறியுள்ளார்'' என அறிகின்றோம்.

### புறங்கூறுதலைத் தவிர்த்தல்

மதுரையில் சர்.பி.டி.இராஜன் இல்லத்தில், பெரியார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் ஆகியோர் உரையாடிக்கொண்டிருந்தனர். அப்பொழுது சென்னை மாநகரத் தந்தையாக இருந்தவர் சிவராஜ். அந்த உரையாடலின் இடையே பெரியாரும், பி.டி.இராசனும், சிவராஜ் குறித்துக் குறை கூறியுள்ளனர். பாண்டியனார் சினத்துடன், ''நாம சிவராஜோட உண்மையான நண்பர்களே இல்லை. உண்மையான நண்பர்களாக இருந்தா, அவரு இல்லாத எடத்திலே அவரைப் பத்திப் பேசியிருக்கமாட்டோம் அவரெ வரவழைச்சி அவருக்கு எதிர்லே தான் பேசியி ருப்போம். நீங்க பேசிக்கிட்டிருக்கிறதெ கேக்கறதுக்கு எனக்கு விருப்பமில்லை என்று சொல்லி எழுந்து விட்டார். உடன் பி.டி. ராஜன் பாண்டியனார் கையைப் பிடித்துச் சமாதானப்படுத்தி அமரச்செய்தார்''. சில நிமிட அமைதிக்குப் பின்னரே மீண்டும் உரையாடியுள்ளனர்.

''துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு'' (குறள் 188)

என்ற இந்தக் குறளின் பொருளை உணர்ந்தவராகப் பாண்டியனார் விளங்குகின்றார்.

### நன்றி மறவாமை

பாண்டியனாரின் தந்தையார் நீரிழிவு நோயினால் முதுகுத் தண்டு பாதிக்கப்பட்டு மிகவும் சிரமப்பட்டார். குடந்தை மருத்துவர் கிருஷ்ணமூர்த்தி அவருக்கு அறுவை சிகிச்சை செய்து நலமடையச் செய்தார். பாண்டியனார் தம் நன்றிப்பெருக்கின் அடையாளமாகத் தன் கடைசி மகனுக்கு மரு.கிருஷ்ண மூர்த்தியின் பெயரையே சூட்டி மகிழ்ந்தார்.

"மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு". (குறள் 106)

என்ற குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்துள்ளார் பாண்டியனார்.

**விவசாயம்-தொழில் முனைவு**

பாண்டியனாரின் பாட்டனார் திரு.அருணாச்சலம், பட்டி வீரன்பட்டி சுற்றியுள்ள

தொண்ணூறு ஏக்கர் தோட்டத்தை விலைக்கு வாங்கி விவசாயம் செய்தவர்.பாண்டியனாரின் தளராத உழைப்பின் பயனாய் மூவாயிரம் ஏக்கர் தோட்டமாக வளர்ச்சியடைந்தது.

மைசூர் மாநிலத்தில் 2,300 ஏக்கர் பரப்பளவு கொண்ட அசோகா என்ற பண்ணையில் காபி, ஏலம் முதலிய பயிர்களைப் பயிரிட்டு வந்தார்.

மலை,காடுகளில் இவருடைய விவசாயப் பண்ணைகள் இருந்தன. தம்பி இரங்கசாமியுடன் இணைந்து பாடுபட்டு, பண்படுத்தப்படாத நிலங்களை விளை நிலங்களாக மாற்றி விவசாயம் செய்துள்ளார். இப்பண்ணைகளில் புதிய புதிய வேளாண் உத்திகளைப் பயன்படுத்தி, வேளாண்மை ஆய்விலும் ஈடுபட்டிருந்தார். அதன் காரணமாக மதுரை மாவட்ட கரும்பு விவசாயப் போட்டியில் ஐநூறு உரூபாய் பரிசை வென்றார். கரம்பு நிலத்தில் கரும்பைப் பயிரிட்டு, அரசின் பாராட்டுப் பட்டம் பெற்றார். 1951 ஆம் ஆண்டில் சிறந்த நெல் வேளான்மைக்கான பரிசினையும், 1953 ஆம் ஆண்டில் சிறந்த நிலக்கடலை வேளான்மைக்கான பரிசினையும் பெற்றார்.

தன் தோட்டத்தில் விளைந்த திராட்சைப் பழங்களைக் கொண்டு திராட்சை இரசம் தயாரிக்க வேண்டி ஆலையைத் தொடங்க ஏற்பாடுகளைச் செய்தார் பாண்டியனார். ஆலையைத் தொடங்கும் நிலையில்,அன்னையாருக்குத் தெரியவந்தது. அன்னையாருக்கு இந்த ஆலையைத் தொடங்குவதில் விருப்பம் இல்லை. அவர் தன் இளையமகனிடம், "இது வேணாம்னு சொல்லு" என்றார். தம்பி இரங்கசாமி, தமையன் பாண்டிய னாரிடம் தாயின் விருப்பமின்மையைத் தெரிவித்தார். பான்டியனார் தாயிடம் வந்து,ஆலையை மூடினால் பெரும் நஷ்டம் வருமே, என்றார். இந்த வியாபாரம் நம்ப குடும்பத்திலே வேணாம் என்றார் தாய். தாயாருக்குச் சம்மதம் இல்லை என்றான பின்னர், ஆலைக்கு மூடுவிழா செய்துவிட்டார் அன்னையின் ஆணைக்குக் கட்டுப்பட்டு.

**பாண்டியராஜபுரம்**

1947 ஆம் ஆண்டில் சர்.பி.டி.ராசனோடு இணைந்து, மதுரை-திண்டுக்கல் நெடுஞ்சாலை யில் மதுரை சர்க்கரை ஆலையைத் தொடங்கினார். ஆலையை ஒட்டி உருவான புதிய ஊருக்கு, சௌந்திரபாண்டியன் பெயரையும் அவரின் உற்ற நண்பர் பி.டி.ராசன் பெயரையும் இணைத்து "பாண்டிய ராஜபுரம்" எனப் பெயர் சூட்டினார், முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம். இந்த ஆலையை உருவாக்குதற்காகப் பாண்டியனார் அவ்விடத்திலேயே 1947 முதல்1951 வரை தங்கியிருந்து செயல்பட்டார்.

1943 ஆம் ஆணடில் ஏலக்காய் விவசாயிகள் நலமுடன் வாழத் தென்னிந்திய ஏலக்காய் விவசாயிகள் சங்கத்தை நிறுவி, அதன் தலைவராக 1943 முதல் 1953 வரை பதவி வகித்து, விவசாயிகளுக்குப் பல நலன்கள் கிடைக்கச் செய்தார்.1941 ஆம் ஆண்டில் காஃபி வாரியத்தின் உறுப்பினராகப் பணியாற்றி யுள்ளார்.

கூட்டுறவு இயக்கத்தில் இணைந்து கூட்டுறவு இயக்கத்தின் வெற்றிக்காகப் பாடுபட்டார். அதன் விளைவாக, பட்டிவீரன்பட்டி காஃபி பதனிடும் கூட்டுறவுத் தொழிற்சாலை, பட்டிவீரன்பட்டி கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கம், பட்டிவீரன்பட்டி கூட்டுறவு பண்டகசாலை ஆகிய அமைப்புகளை உருவாக்கி, அவற்றின் தலைவர் அல்லது இயக்குநர் பதவிகளை வகித்துள்ளார்.

விவசாயிகளும், வணிகர்களும் பயன்பெறவேண்டும் என்பதற்காக, 1921 ஆம் ஆண்டில் தமிழ் நாடு மெர்க்கண்டைல் வங்கியைத் தொடங்கினார். அந்த வங்கியைத் தொடங்கிட நிதி திரட்டிட பெரும்பாடுபட்டுள்ளார், அந்த வங்கி இன்று பல கிளைகளோடு வெற்றிகரமாக இயங்கிவருகின்றது.

முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லையென்று வருந்தியுள்ளார். 80 விழுக்காடு மக்கள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் நலன்கள் காப்பாற்றப்படவேண்டும். விவசாயம் நலிந்தால் நாடும் நலிவு பெற்றுவிடும். எனவே விவசாயத்திற்கும் தொழிற்சாலைகளுக்கும் சரிசமமான முக்கியத்துவம் தரப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார். அது செவிடன் காதில் ஊதிய செய்தியாயிற்று. இன்றும் உழுவார் நிலை பாராட்டும் நிலையில் இல்லை. நாட்டிற்கே உணவளிக்கும் தஞ்சை மண்ணைப் பாலைவனமாக்கும் முயற்சியில் மைய அரசு முனைந்துள்ளது

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை. (குறள் 1031)

என்பதை உணராத அரசுகள் என் சொல்ல?

இவ்விதம் விவசாயம், வணிகம், தொழில்,ஆகிய துறை களில் வெற்றிகரமாகச் செயல்பட்டு வந்துள்ளார். அது போன்றே அவர் அரசியல்,சமுகப் பணிகளிலும் வெற்றிகரமாக செயலாற்றி யுள்ளார்.

**சமூகப்பணி**

ஒடுக்கப்பட்டத் தமது சமுதாய மக்களின் மேம்பாட்டிற் காகவும், தாழ்த்தப்பட்ட மக்களின் நலன் கருதிக் குரல் கொடுப்பதற்காகவும்,செயல்படுவதற்காகவும் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பு மகாஜனசங்கம். 1920 முதல் 1937 வரை இச் சங்கத்தின் பொதுச்செயலாளராக நான்கு ஆண்டுகளும், துணைத் தலைவராகப் பதினேழு ஆண்டுகளும் பொறுப்பு வகித்து அரும்பணியாற்றியுள்ளார். நீதிக்கட்சி-சுயமரியாதை இயக்கத்தில்:

தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் என்ற நீதிக்கட்சி 1916 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இச் சங்கம் தொடங்கப்பட்ட நாள் முதல் சௌந்திரபாண்டியன் உறுப்பினராகி, தன் அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார். பெரியார், காங்கிரசில் பார்ப்பனர் ஆதிக்கம் மிகவும் இருந்தகாரணத்தால் காங்கிரசிலிருந்து விலகி, 1926 ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார் பெரியாரின் புரட்சிகரமான சமூகச் சீர்திருத்தக்கருத்துகளும், அவரின் நேர்மையான தொணடின் சிறப்பும், சௌந்திரப ாண்டியனைக் கவர்ந்தன. ஆதலால் பெரியாரிடம் நெருங்கிய நட்புகொண்டு அவருக்கும் சுயமரியாதை இயக்கத்திற்கும் துணையாக இருந்தார். பெரியாரின் சுயமரியாதை தத்துவம் ‘‘யாரும் யாருக்கும் தாழ்ந்தவர் அல்லர், எவரும் எவரையும் தாழ்த்து-வரல்லர்’’ இந்த நற்கருத்தைப் பட்டி தொட்டி எங்கும் பரப்பியவர் பாண்டியனார் ஊர்தோறும் பள்ளிகள் தோன்று வதற்கும் அரும்பாடுபட்டுள்ளார். சௌந்திரபாண்டியனின் நேர்மைப் பண்பையும், கொள்கைப் பிடிப்பினையும் உணர்ந்து கொண்டிருந்த பெரியார், தான் தொடங்கிய சுயமரியாதை இயக்கத்தின் தலைமைப் பொறுப்பில் சௌந்திரப்பாண்டியனை நியமித்தார். துணைத்தலைவராகப் பெரியார் தன்னை இருத்திக்கொண்டு பணியாற்றினார்.

1929 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17,18 நாள்களில் செங்கல்பட்டில் நடை பெற்ற முதல் சுயமரியாதை மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். தலைவரை முன்மொழிந்து பெரியார் ஆற்றிய உரையில், இந்த மாநாட்டுக்குத் தலைமை தாங்கயிருக்கிற நாடார் அவர்களைப் பற்றிச் சொல்ல வருவது என்பது பகலில் சூரியனைக் காட்டுவதற்குத் தீவட்டி பிடிப்பது போலாகும். அவர் சுயமரியாதைக் கொள்கைகளில் மூழ்கியவர்; அக்கொள்கைகளை மனப்பூர்த்தியாக ஒப்புக்கொண்டு ஒழுகு கின்றவர்; மற்றவர்களும் இக் கொள்கைகளை ஏற்று நடப்பதற்குத் தன்னுடைய உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தஞ்செய்து தொண்டு செய்தற்கு தயாராயிருக்கிறார் என நான் மனப்பூர்வமாகச் சொல்லுகின்றேன். அப்பேர்பட்ட பெரியார் நமக்குக் கிடைத்தது நாம் வெற்றிபெறுவோம் என்பதற்கு அறிகுறி என்று குறிப்பிட்டார்.

மாநாட்டுத் தலைவர் பாண்டியுன் தன் தலைமையுரையில், நாம் பழம்பெருமைகளைப் பற்றிப் பேசிமகிழ்வதில் பொரு ளில்லை. தற்காலச் சீர்கேடுகளை ஆய்ந்து காலத்துக்கு ஏற்றவாறு செப்பனிட்டுக் கொள்வதே சிறந்ததாகும். உத்திரத்திலிருந்து இங்கு போந்த ஆரியர்களின் ஆதிக்கம் வலுத்த நாள் முதல், நம் நாட்டிற்குக் கேடு கிட்டியது, வர்ணாசஸ்ரம தர்மம் கோலோச் சியது. ஒன்றாயிருந்த மக்கள் சாதி மத வேற்றுமைகளால் பிரிக்கப்பட்டு ஒற்றுமை குலைக்கப்பட்டது. பார்ப்பனர் முன் நாம் அனைவரும் சூத்திரர்கள்தான்; வேசிமக்கள்தான். பார்ப்பனர்கள் முன் சமுதாய அடிமைகளாகவும், ஆங்கிலேயர்க்கு அரசியல் அடிமையாகவும் இருக்கின்றோம். இந்த இரு அடிமைத் தளைகளிலிருந்தும் நாம் விடுதலை பெறவேண்டும் என்ற போதிலும், சமூக அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெறுவதே முதல் முக்கியக் கடமைஎன்று நான் அபிப்பிராயப்படுகின்றேன், என்று தன்னுடைய வாழ்வின் முக்கிய கடமை என்று முடிவு செய்கிறார். அதன்படி நடப்பதற்காகப் பார்ப்பனரல்லாத எல்லா மக்களையும் அழைத்தார்.

1936 ஆம் ஆண்டு நீதிக்கட்சி தேர்தலில் தோல்வியுற்று, வலிவிழந்து துவண்டு போயிற்று. கட்சியை வலிவுடனும், பொலிவுடனும் நிலை நிறுத்திடத் தலைவர் தந்தை பெரியாருடன் இணைந்து நாடெங்கும் சுற்றிப் பரப்புரை செய்தார் சௌந்திர பாண்டியனார். அப்போது வெளியிடப்பட்ட பாண்டியன்-இராமசாமி அறிக்கை கட்சியில் விவாதத்தையும், சர்ச்சையையும் உருவாக்கிற்று, என்ற போதிலும், பாண்டியன் பெரியாருடன் இணைந்து அறிக்கையில் சொல்லப்பட்ட செயல்திட்டங்களை நிறைவேற்றுவதில் முனைந்து நின்றார்.

அந்த அறிக்கையின்படி பார்ப்பனரல்லாத மக்களிடையே எழுச்சியை உருவாக்க; பிரச்சாரக் கமிட்டியை உருவாக்கினர் கமிட்டியின் தலைவராகப் பாண்டியன் அவர்களையே தேர்ந்தெடுத்தனர். சி.டி.நாயகமும், பெரியாரும் செயலாளர்களாக இருந்தனர்.இவர்கள் திட்டங்களைத் தீட்டிச் சுயமரியாதைக் கட்சி, நீதிக் கட்சி ஆகியவற்றின் கொள்கைகளைக் கோட்பாடுகளைத் தீவிரமாக நாடெங்கும் பரப்பினர்.

### திமிர் வரி

1918 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கமுதியில் நாடார் சமுதாயத்தினருக்கும், மறவர் சமுதாயத்தினருக்கும் இடையே கலவரம் மூண்டது. இக்கலவரத்தைக் காரணமாகக் கொண்டு கமுதியிலும் அதைச்சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் இரு சமுதாயத்தி னருக்கும் திமிர் வரியை விதித்தது, ஆங்கிலஅரசு.

இந்த வரியினைச் செலுத்த முடியாமல் இருபிரிவினரும் அல்லலுற்றனர். சௌந்திரபாண்டியனார், இருசமூகத்தினரிடமும் நல்லுறவை ஏற்பத்திடப் பாடுபட்டு வெற்றியும் கண்டார்.

### சட்டசபையில்

இந்த நிலையில்,மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் படி தேர்தல் நடைபெற்றது. நீதிக்கட்சி வெற்றிபெற்று ஆட்சியில் அமர்ந்தது. நீதிக்கட்சியின் தலைவர் சர்.பி.டி இராசன் பரிந்துரையின்படி ஆளுநர் வெல்லிங்டன் நாடார் மகாஜனசபை சார்பாக சௌந்திரபாண்டியனை மேலவை உறுப்பினராக நியமித்தார்; சௌந்திரபாண்டியனார் 1920ஆம் ஆண்டு முதல் 1937ஆம் ஆண்டுவரை மேலவை உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார்; 1927ஆம் ஆண்டு முதல் 1937ஆம் ஆண்டுவரை சுப்பராயன் அமைச்சரவையில் நீதிக்கட்சியின் கொறடாவாகப் பணியாற்றியுள்ளார்.

திமிர் வரியை நீக்கவும், தண்டம் வசூலிக்க நிறுத்தி வைக்கப்பட்டுள்ள காவலரை விலக்கிக்கொள்ளவும் 10-2-1921 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் சௌந்திரபாண்டியனார் தீர்மானம் கொண்டுவந்தார். இராமநாதபுரம் ராஜா முத்துராமலிங்க சேதுபதி, அத்தீர்மானத்தை ஆதரித்து வழிமொழிந்தார் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பல தலைவர்கள் இத் தீர்மானத்திற்கு ஆதரவாகத் தங்கள் கருத்துகளை வழங்கினர். ஆனால் உள் துறை அமைச்சர்

சர்.லயனல் டேவிட்சன் கமுதியில் திமிர் வரியை நீக்கவும், தண்டம் வசூல் செய்யும் காவலரை விலக்கிடவும் ஒப்புக் கொள்ளவில்லை. அதனால் பாண்டியனார் இத் தீர்மானத்தை வாக்கெடுப்பிற்கு விட்டு முடிவெடுக்கக் கோரினார். தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது; தீர்மானத்தை ஆதரித்து 43 பேரும் எதிர்த்து 13 பேரும், நடுநிலை வகித்து 9 பேரும் வாக்களித்தனர். தீர்மானம் நிறைவேறியதாக அறிவிக்கப்பட்டது. திமிர் வரி நீக்கப்பட்டது

சௌந்திரபாண்டியனாரின் விடாமுயற்சியினால் கமுதியில் திமிர் வரியால் அல்லலுற்ற நாடார் சமுதாயத்தினரும், மறவர் சமூகத்தினரும் நிம்மதியடைந்து இன்புற்றனர்; பகை மறந்து நல்லுறவு கொண்டனர்; இவை பாண்டியனாரின் தளராத முயற்சிக்கும் உழைப்பிற்கும் கிடைத்த வெற்றியாகும். இந்த இரண்டு சமூகத்தினரும் ஒன்றுபட்டு என்றும் நல்லுறவுடன் வாழ்ந்திடவேண்டும் என்று விரும்பினார். ஆதலால் நாடார் மகாஜனசபை ஆண்டுவிழாவில், இராமநாதபுரம் ராஜா முத்துராமலிங்க சேதுபதி அவர்களைத் தலைமை ஏற்கச் செய்து சிறப்பித்தார். இதன் மூலமிரு சமுதாயத்தினரிடையே ஏற்பட்டுள்ள நட்பு வலுப்பெறச்செய்தார்.

பாண்டியனார் தன் சமுதாய முன்னேற்றத்திற்காக மட்டும் பணியாற்றவில்லை. அனைத்து மக்கள் சமுதாயமும், சமத்துவத்துடனும், சகோதரத்துவத்துடனும்; சுயமரியாதை யுடனும் வாழவேண்டும் என்பதற்காகப் பாடுபட்டார்.

1921 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 4ஆம் நாள் சட்டமன்றத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள், பொதுச் சாலைகள், பொதுக்கிணறுகளைப் பயன்படுத்தத் தடை செய்பவர்களுக்குக் கடும் தண்டனை வழங்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தார். இத்தீர்மானத்தை ஆதரித்து எம்,சிராஜா முதல் பல தலைவர்கள் கருத்துரை வழங்கினர். இறுதியாக முதல்வர் பனகல் அரசர் தடை செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதிமொழி வழங்கினார்.

### இராம நாதபுரம், மதுரை மாவட்டக் கழகங்களில்

சௌந்திரபாண்டியனார் 1926ஆம் ஆண்டு முதல் 1930 ஆம் ஆண்டு வரை இராம நாதபுரம் மாவட்டக் கழகத்தின் தலைவராகப் பதவி வகித்தார். அக்காலத்தில் பேருந்துகளில் ஆதித் திராவிட மக்கள் பயணிக்கத் தடையிருந்தது. அதனை அறிந்த பாண்டியனார், ''ஆதித் திராவிட மக்கள் பயணிக்கத் தடை செய்யும் பேருந்துகளின் உரிமம் பறிக்கப்படும்'' என, ஆணை பிறப்பித்தார். அதன் பின் ஆதித் திராவிடமக்களும் பேருந்துகளில் சரிசமமாக மற்ற சமுதாயமக்களுடன் பயணித்தனர்.

தாழ்த்தப்பட்ட மக்களின் பிள்ளைகளைப் பள்ளிகளில் சேர்க்க மறுத்தனர் ஜாதி இந்துக்கள். இந்த அநீதியைப் பாண்டியனார் அரசுஆணை பிறப்பித்து நீதியை நிலை நாட்டினார்;அனைத்துச் சமூகமக்களின் பிள்ளைகள் கற்பதற்கு வழிவகுத்தார்.

மதுரை மாவட்டக் கழகத் தலைவராக 1943 முதல் 1948 வரை பணியாற்றினார். கோப்புகளை உடனுக்குடன் பார்த்து, வேண்டும் ஆணைகளையிட்டார். காலதாமதம் மக்களைப் பாதித்துவிடும் என்று கவனமாக இருந்தார்.

பேரறிஞர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை 1949ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் நாள் தொடங்கினார். சௌந்திரபாண்டியனாரிடம் மிகுந்த அன்பும் மதிப்பும் கொண்டிருந்த அண்ணா, தான் தொடங்கிய அரசியல் இயக்கத் திற்கு அவரைத் தலைமைப் பொறுப்பேற்கவேண்டும் என்று அழைத்தார், பாண்டியனார் அண்ணாவின் அழைப்பை அன்புடன் மறுத்துவிட்டார். தன் வாழ் நாள் முழுதும் சமூக மறுமலர்ச்சிக்காகப் பாடுபடவே தனக்கு விருப்பம் என்று கூறியுள்ளார்.

15-1-1953 அன்று ஏலக்காய் விவசாயச் சங்கம் சார்பில் அரசினரிடம் பேசுதற்கு சென்னை தலைமைச் செயலகம் சென்றார், மறுநாள் சென்னைப் பொது மருத்துவமனையில் நெஞ்சுவலி என்று சேர்ந்தார்,

**எல்லோரிடத்தும் அன்பும் பரிவும் கொண்டிருந்த மனித நேயம் மிக்கவர்; பொது வாழ்வில் தூய்மை, நிர்வாகத்தில் நேர்மை என்று வாழ்ந்த அந்த மாமனிதர் 22-2-1953 ஞாயிறு அன்று மீண்டும் நெஞ்சுவலி ஏற்பட்டு மாலை மூன்று மணியளவில் இயற்கை எய்தினார். வாழ்க அவர் புகழ்!**

உயர்ந்தோர் என்ற பிரிவில், சௌந்திரபாண்டியன் என்ற தலைப்பில், பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய பாடலுடன் நிறைவு செய்கின்றேன்.

பாண்டியன் பேர் வாழ்கவே-சவுந்திர
பாண்டியன் பேர் வாழ்கவே
வேண்டிய செல்வம் அணுகிடும் போதும்
விலகிய செல்வம் விலகும் போதும்
மாண்பிடத்தக்க நோய் வந்த போதும்
மட்டில்லா உடல் நலம் வளர்ந்த போதும்
யாண்டும் எப்போதும் சுயமரியாதை
இயக்கம் பேணத் தயக்கம் கொள்ளாப்
பாண்டியன் பெயர் வாழ்கவே
கயவர் கத்தி உருவும் போதும்
கற்றவர் புகழ்ந்து பேசும் போதும்
அயலவர் சூழ்ச்சி வலுத்திடும் போதும்
ஆரியர் வணங்கி அழைத்திட்ட போதும்
இயலும் முப்போதும் சுயமரியாதை
இயக்கம் பேணத் தயக்கம் கொள்ளாப்
பாண்டியன் பெயர் வாழ்கவே
தோழர்கள் எல்லாம் தொகை வேண்டும் போதும்
தொகை பெற்ற தோழர் பகை காட்டும் போதும்
தாழ்வுறத் தலைவர் ஒதுக்கிடும் போதும்
தலைவர்கள் தலைமேல் தூக்கிடும் போதும்
ஏழ்மையை வெருட்டும் சுயமரியாதை
இயக்கம் பேணத் தயக்கம் கொள்ளாப்
பாண்டியன் பெயர் வாழ்கவே!



## அந்தோ, மறைந்தாரே
# கூத்தூர் கா. ஆதிமூலம் ஆசிரியர்

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம் கூத்தூர் கிராமத்திலிருந்த காசிராசா அஞ்சலையின் மகனாகிய ஆசிரியர் கா.ஆதிமூலம் அவர்கள் பணி ஓய்வுக்குப்பின், கடந்த சில ஆண்டுகளாக உடல் நலமின்றி தொடர் மருத்துவ சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் 17.01.2020, வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில், தனது 85- ஆவது வயதில் இயற்கை எய்தினார். அன்னாருக்கு சுற்று வட்டார ஊர் மக்கள், உறவினர்கள், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சித் தோழர்கள், பெண்கள் பலரும் சாரை, சாரையாக வந்து இறுதி மரியாதை செலுத்தினர். தொடர்ந்து 18.01.2020, சனிக்கிழமை மாலை 6.00 மணியளவில் கூத்தூர் இடுகாட்டில், உடல் எரி யூட்டப்பட்டது.

மறைந்த கா.ஆதிமூலம் அவர்களுக்கு 27.01.2020 திங்கள் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடை பெற்ற நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு, திருமழபாடி திருக்குறள் மாமணி முனைவர் அ.ஆறுமுகம் அவர்கள் தலைமை யேற்று, கா. ஆதிமூலம் படத்தைத் திறந்து வைத்து இரங்கலுரையில். அவரது பண்பு நலன்கள் பற்றி விளக்கினார். கா. ஆதிமூலத்தின் மருமகன் மேனாள் தோட்டக் கலை உதவி இயக்குநர் இரா. நலங்கிள்ளி தேன்மொழி இரங்கற்பாவோடு வரவேற்புரையாற்றினார்.

கா. ஆதிமூலம் அவர்கள், பெரியார் பிரியன் என்ற றிந்த கூத்தூர் பொட்டுகல்லை பெரியசாமி, இலந்தங்குழி ஆ.செ.தங்கவேலு, கூடலூர் தி.க.சுப்பையா ஆகியோருடன் இணைந்து பெரியாரியல் அறிஞர் வே. ஆனைமுத்து அவர்களின் வழியில் தன்மானப் பரப்புரைகள் மேற் கொண்டு வந்ததை ஆலத்தூர் ஒன்றிய தி.க. தலைவர், கூத்தூர் து. பெரியசாமி ஆசிரியர் அவர்கள் நினைவு கூர்ந்தார். புலவர். பொன். முத்துசாமி அவர்கள் கா. ஆதிமூலத்தின் அமைதியான வாழ்க்கை முறைகள் குறித்தும், அவரை பிரிந்து வாடும் அவரது துணைவியார் மணிமேகலை மற்றும் பிள்ளைகளின் எளிமை குறித்தும் பெருமையாக உரைத்தார். உதவி கல்வி அலுவலர் பெ.தர்மலிங்கம் அவருடன் பணியாற்றிய தன்மைகள் குறித்தும், இரா. பிச்சைப்பிள்ளை ஆசிரியர் கா.ஆதிமூலத் தின் ஆசிரியப் பணிகள் குறித்தும், இலுப்பக்குடி ஆசிரியர் கலியமூர்த்தி அவர்கள், பிறர்க்குதவும் குணங்கள் மற்றும் கல்விக்கு வழிகாட்டிய விதங்கள் பற்றியும் பாராட்டிப் பேசினார் திமுக ஒன்றிய மகளிரணி செயலர் திருமிகு . பெ. கல்யாணி, ஒன்றிய குழுத்தலைவர் நா. குமார் அரியலூர் அரசு சிமெண்ட் ஆலை த. ஆறுமுகம், பேரையூர் எல். அய். சி., முகவர் கோ. இராச மாணிக்கம் ஆகியோர் இரங்கலுரையாற்றினர். இறுதியாகத் திராவிடர் கழகத் தலைமை நிலையப் பேச்சாளர் மானமிகு நாத்திகநம்பி அவர்கள் இடஒதுக்கீடு, பெண் கல்வி, சமுதாய சீர்திருத்தம், தாய்மொழிப் பற்று ஆகியவை குறித்த தந்தை பெரியார் அவர்களின் சிந்தனைகள் மீது கா. ஆதிமூலம் அவர்கள் கொண்டிருந்த ஈடுபாடுகள் குறித்து விரிவாகப் பேசினார். கா. ஆதிமூலத்தின் மகன் பொறியாளர் ஆ.கென்னடி நன்றி கூறினார், உறவினர்கள் யாவரும் நினைவேந் தலில் கலந்துகொண்டனர். இதற்காக சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக 1,000 ரூபாய் அனுப்பப்பட்டது.



- செய்தி : **நலங்கிள்ளி தேன்மொழி**

## வாழ்க்கைத்துணை வேண்டல்

| | | |
|---|---|---|
| பெயர் | : | **க.பெரியார்நம்பி (எ) செல்வராசு** (மனைவியை இழந்தவர்) |
| பிறந்த நாள் | : | 28-06-1970 |
| கல்வி | : | பத்தாம் வகுப்பு தேர்ச்சி |
| பணி | : | அரசுப்பணி அஞ்சல் துறை |
| ஊதியம் | : | மாதம் 21,000/- |
| வசிப்பிடம் | : | ஒட்டன்சத்திரம் திண்டுக்கல் மாவட்டம் |
| உயரம் | : | 157 செ.மீ |
| எடை | : | 63 கிலோ |
| குழந்தைகள் | : | இல்லை |
| சாதி | : | பார்ப்னியத்தால் தாழ்த்தப்பட்டவன் |
| எதிர்பார்ப்பு | : | பகுத்தறிவுள்ள திராவிடர் இயக்க சிந்தனை சாதி மறுப்பு, மறுமணம், விதவை மணம் குழந்தையிருப்பினும் சரி |
| தொடர்புக்கு | : | 9486648007, 6380582823 |

## இறைக்குருவனாரின்
## நூல்கள் வெளியீட்டு விழா



சென்னை, அடையாறு முத்தமிழ்பேரவை, டி.என்.இராசரத்தினம் அரங்கில் இன்று காலை 10 மணியளவில் ஐயா திருக்குறள்மணி புலவர் இறைக் குருவனார் அவர்களின் தொகுப்புகள் தமிழோசை, தமிழாரம் நூல்களை ஐயா பழ.நெடுமாறன் வெளியிட தமிழறிஞர்கள், தமிழன்பர்கள் மற்றும் தி.மு.க ஐயா டி.கே.எசு.இளங்கோவன், வி.சி.க.ஐயா திருமாவளவன், நாம் தமிழர் கட்சி செந்தமிழன் சீமான், அம்மா தேன்மொழி, ஐயா அருளி, ஐயா.அரசேந்திரன், தி.வி.க. தோழர் கொளத்தூர் மணி, த.பெ.தி.க. தோழர் கோவை இராமகிருட்டிணன், தமிழக மக்கள் முன்னணி தோழர் பொழிலன், ம.தி.மு.க.மல்லை.சி.சத்யா, தமிழ்த் தேசிய பேரியக்கம் ஐயா பெ.மணியரசன், தமிழ்த்தேச விடுதலை இயக்கம் தோழர் தியாகு, த.ஒ.வி.இ. தோழர் நிலவழகன், தமிழர் பேரரசு கட்சி இயக்குனர் கௌதமன், மே 17 இயக்கம் திருமுருகன் காந்தி, தமிழ்த்தேச மக்கள் கட்சி தோழர் தமிழ்நேயன், தமிழ்த்தேச குடியரசு கட்சி தோழர் செந்தமிழ்வாணன், பு.இ.மு.தோழர்.சீராளன், த.நா.க.இ.ஒப்புரவாளன் உள்ளிட்ட அனைத்துக்கட்சி இயக்க எண்ணற்ற தலைவர்கள் பங்கேற்றனர். தலைமை ஐயா.முனைவர்.மா.பூங்குன்றன் அவர்களும் தொடக்க உரை அம்மா இறை.பொற்கொடி அவர்களும், வரவேற்புரை.முனைவர் கி.குணத்தொகையன் அவர் களும், தொகுப்புரை திரு.மயிலை.வேலுமணி, வழக்கு ரைஞர் திருமலைதமிழரசன் அவர்களும் நன்றியுரை இ.இசைமொழி,வழக்குரைஞர் அங்கயற்கண்ணி அவர்களும் வழங்கினார்கள்.

ஒருங்கிணைப்பு : **தென்மொழி**

## சிறுநாத்தூர் ஊ.ஒ.ந.நி. பள்ளியில் முன்னாள் மாணவர்களுக்குப் பரிசளிப்பு விழா



திருவண்ணாமலை மாவட்டம், கீழ்ப்பென்னாத்தூர் வட்டம், சிறுநாத்தூர் கிராமத்தில் உள்ள ஊ.ஒ.ந.நி. பள்ளியில் 2020 சனவரி 26, ஞாயிற்றுக்கிழமை ஊர்த் தலைவர் திருமதி. சித்ரா - பரந்தாமன் தலைமையில் தமிழாசிரியர் சி.ஏ. முருகன் வரவேற்று தொகுப்புரை வழங்க பள்ளிக் கல்வி, உதவி கல்வி அலுவலர் ஸ்ரீராமுலு சிறப்புரை வழங்க முன்னாள் மாணவர் திரு. ப. வடிவேலு, திருமதி. சுகுணா இணைந்து 29-ஆவது ஆண்டாக முதல் மதிப்பெண், இரண்டாம் மதிப்பெண், மூன்றாம் மதிப்பெண் பெற்ற அனைத்து வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ் ஆங்கில - கையகராதி, காந்தி, பெரியார், திருக்குறள், அம்பேத்கர், காமராசர், குழந்தைப் பாடல்கள் ஆகிய நூல்களுடன் எழுதுகோல், ஜியோ மின்ட்ரி பெட்டி, பென்சில் பெட்டி, அடிக்கோல், வண்ண பென்சில் போன்ற பரிசுகள் வழங்கினர்.

சு. தமிழரசன் (இராணுவம், ஓய்வு) 8-ஆவது ஆண்டாக கலை நிகழ்ச்சி, பேச்சுப் போட்டி, நாடகம் போன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அனைத்து மாணவர் களுக்கும் நூல்கள் பரிசாக வழங்கினார். புதுவரவாக கார்த்திக் என்ற மாணவர் முதல்முறையாக அனைத்து மாணவர்களுக்கும் எழுதுகோல் பரிசாக வழங்கினார். விழா உபத்தலைவர் திருமதி. லட்சுமி வேடியப்பன் முன்னிலை வகிக்க, தலைமை ஆசிரியர் திருமதி. அ.தில்ஷாத் நன்றிகூற விழா இனிப்புடன் இனிதே முடிவுற்றது.

செய்தி : **ப. கிருஷ்ணன்**

## 5 மற்றும் 8 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுக்குக் கண்டனம்

**ஒடுக்கப்பட்ட மக்கள் கல்வியை மேலும் தடுப்பதற்குத் துணை போகும்**
**தமிழக அரசு நடத்தவிருக்கும் 5 மற்றும் 8 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு**
**கடும் கண்டபத்திற்குரியது இதை உடன் கைவிட வேண்டுமென**
**மா.பெ.பொ.க.க., அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.**



புரட்சியாளர்

# அம்பேத்கர்...

சாதிஒழிப்புப் போராளிகள்
நினைவை ஏந்தி...

# நீலச் சட்டைப் பேரணி



## சாதி ஒழிப்பு மாநாடு

**09** பிப்ரவரி 2020
ஞாயிற்றுக்கிழமை


**கோவை**

பேரணி தொடங்குமிடம் : வி.கே.கே.மேனன் சாலை (காந்திபுரம்)
சேருமிடம் : வ.உ.சி.திடல் (மைதானம்)

நேரம் : பிற்பகல் 2.00 மணி



## சாதி ஒழிப்பு மாநாடு



வரவேற்புரை : **குடந்தை அரசன்**
விடுதலைத் தமிழ்ப் புலிகள் கட்சி

தலைமை : **கோவை கு.இராமக்கிருட்டினன்**
தந்தை பெரியார் திராவிடர் கழகம்

நோக்க உரை : **பொழிலன்**
ஒருங்கிணைப்பாளர், பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு

தொடக்க உரை : **நாகை.திருவள்ளுவன்**
தமிழ்ப்புலிகள் கட்சி

தீர்மானங்கள் முன்மொழிவு : **திருமுருகன் காந்தி**
மே பதினேழு இயக்கம்

நூல் வெளியீட்டு உரை : **வாலாசா வல்லவன்**
மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி

நூல் பெறுகை உரை : **மா.டைசன்**
தமிழர் விடியல் கட்சி

**வழக்கறிஞர் சி.வெண்மணி**
திராவிடர் தமிழர் கட்சி

முன்னிலை :

**கோவை ஞானி**
**பா.செயப்பிரகாசம்**
**கோ.திருநாவுக்கரசு**
தாளாண்மை உழவர் இயக்கம்
**கி.வே.பொன்னையன்**
தற்சார்பு விவசாயிகள் சங்கம்
**ஆ.நெடுஞ்சேரலாதன்**
பெரியாரியல் ஆய்வு நடுவம்
**புலவர் இரத்தினவேலன்**
தமிழ் உரிமைக் கூட்டமைப்பு

**எசு.வி.இராசதுரை**
**கனல்மைந்தன்**
**கண.குறிஞ்சி**
தமிழ்த் தேச நடுவம்
**மனிதி செல்வி**
மனிதி
**குறள்மொழி**
தமிழர் அறிவியக்கப் பேரவை
**மதுரை பி.வரதராசன்**
புரட்சிக் கவிஞர் மன்றம்

**செந்தலை ந.கௌதமன்**
**பல்லடம் மாணிக்கம்**
**வழக்கறிஞர் பானுமதி**
தமிழ்நாடு முற்போக்கு பெண் வழக்கறிஞர்கள் சங்கம்
**தூல் தேன்மொழி**
மகளிர் பகுத்தறிவு தன்மானக் கழகம்
**கடவூர் ப.மணிமாறன்**
குளித்தலை தமிழ்ப் பேரவை
**இ.டி.சார்லஸ்**
தேசிய தலித் கிறிஸ்தவர் பேரவை

மாநாட்டுக் கருத்துரை :

**பூ.சந்திரபோசு**
தியாகி இமானுவேல் பேரவை
**முருகவேல்ராசன்**
மக்கள் விடுதலைக் கட்சி

**கே.எம்.செரிப்**
தமிழக மக்கள் ஜனநாயகக் கட்சி
**நிலவன்**
நீரோடை

**கு.ஜக்கையன்**
ஆதித் தமிழர் கட்சி
**நிலவழகன்**
தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்

# நீலச் சட்டைப் பேரணி

**தலைமை :**

**கொளத்தூர் தா.செ.மணி**
திராவிடர் விடுதலைக் கழகம்

**தொடங்கி வைப்பவர் :**

**இரா.அதியமான்**
ஆதித்தமிழர் பேரவை

**முன்னிலை :**

**துரை.சிங்கவேல்** – மக்கள் சனநாயகக் குடியரசுக் கட்சி
**பரிதி** – தமிழ் தமிழர் இயக்கம்
**வழக்கறிஞர் திருநாவுக்கரசு** – தலித் மக்கள் விடுதலை முன்னணி
**தீபக்** – டிசம்பர் 3 இயக்கம்
**பொ.ம.இரணியன்** – வனவேங்கைகள் கட்சி
**து.கு.கதிரவன்** – போர்க்குரல் பரப்புரைக் கட்சி
**பா.சுப்பிரமணியம்** – பட்டியலினத்தோர் பணியாளர் தொழிலாளர் ஐக்கிய சபை
**தமிழ் இராசேந்திரன்** – பாவாணர் பேரவை
**அருணா சுந்தரராசன்** – வளரி
**தேனி ராசா** – வீர சாம்பவர் பேரவை
**நாகேசுவரன்** – பெரியார் பேரவை
**அண்ணாதுரை** – சம நீதிக் கழகம்
**துரை.மணிவண்ணன்** – சிந்தனைக்கூடம்
**மாரிமுத்து** – மக்கள் விடுதலை முன்னணி
**செல்வராசு** – கற்பி சமூகக் கல்வி மையம்
**சந்தனமேரி** – உழைக்கும் பெண்கள் இயக்கம்

**சு.அகத்தியன்** – தமிழ்ச் சிறுத்தைகள் கட்சி
**சுப்பு மகேசு** – தமிழர் உரிமை இயக்கம்
**இரேவதி நாகராசன்** – செட்யூல்டு ஷெட்யூல்டு தலித் முன்னணி
**சே.இளையராசா** – தலித் கிறிஸ்தவப் பேரவை
**எம்.சி.வினிதன்** – தமிழ்நாடு மக்கள் கட்சி
**தம்பி மண்டேலா** – மக்கள் குடியரசு இயக்கம்
**சோழநம்பியார்** – தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம்
**சதா.சிவக்குமார்** – ஆதி திராவிடர் முன்னேற்றக் கழகம்
**அ.லூர்துசாமி** – அம்பேத்கர் பெரியார் மார்க்ஸ் படிப்பு வட்டம்
**சிலம்பரசன்** – தமிழ்த்தேச குடியரசுக் கட்சி
**தேவராசன்** – சமூக நீதி இயக்கம்
**சிவந்தி அருணாசலம்** – வள்ளுவர் இலக்கிய மன்றம்
**கே.கிளாடியஸ்** – தலித் கிறித்தவர் நலச் சங்கம்
**குணசேகரன்** – சாமானிய மக்கள் கட்சி
**கார்க்கி** – சமத்துவக் கழகம்
**வெ.இராசசேகரன்** – சமூக விடுதலை முன்னணி

**காஞ்சி.அமுதன்** – ஊர்தலை கலை பண்பாட்டு இணையம்
**திருமலை தமிழரசன்** – தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம்
**சு.பழனிராசன்** – சமவெளி விவசாயிகள் இயக்கம்
**மூர்த்தி** – கல்வி மேம்பாட்டுக் கூட்டமைப்பு
**இலயோலா மணி** – தமிழ்நாடு இளையோர் மாணவர் கூட்டமைப்பு
**நாவை.செ.வேலு** – பெரியாரின் பெயரர்கள் பேரியக்கம்
**அரசெழிலன்** – விழிக் கொடை விழிப்புணர்வு இயக்கம்
**பாபு இராசேந்திரன்** – தாய்த்தமிழ்ப் பள்ளிகள் கூட்டமைப்பு
**நரேந்திர கந்தசாமி** – பாரி பவுண்டேசன்
**சோம.சண்முகம்** – பெரியார் அம்பேத்கர் மக்கள் இயக்கம்
**பிரதீப்** – தமிழ்நாடு மக்கள் மன்றம்
**சுப்பிரமணியன்** – துறைசாரா வணிகத் தமிழ்ப்போர் நலச் சங்கம்
**மாதேசுவரன்** – கலைத்தாய் அறக்கட்டளை
**ஆனந்து சுகுமார்** – தமிழ் உணர்வாளர்கள் கூட்டமைப்பு
**சா.கருப்பையா** – மதிப் பாரிய எஸ்.சி.எஸ்.டி அலுவலர் கூட்டமைப்பு
**சீ.ரா.அம்பேத்கர்வழியன்** – தமிழக அனைத்து மக்கள் கட்சி

**சு.இராசன்** – தமிழர் தன்மானப் பேரவை
**சின்னப்பத் தமிழர்** – தமிழ்வழிக்கல்வி இயக்கம்
**கோகுல்காந்தி** – பெரியார் திராவிடர் விடுதலைக் கட்சி
**ம.தங்கராசு** – சமத்துவ அம்பேத்கர் மக்கள் கட்சி
**த.இரா.சீவராசு** – பச்சை மனிதர்கள்
**மா.இராமசாமி** – சமூகக் கல்வி மேம்பாட்டுக் கூட்டமைப்பு
**முல்லை வேந்தன்** – திராவிடர் பண்பாட்டு நடுவம்
**நாகேசுவரன்** – தமிழிய சட்ட நிறுவனம்
**வழக்கறிஞர் இலிங்கன்** – எழுத்தாளர்
**கல்யாணசுந்தரம்** – சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம்
**நிலவழகன்** – திராவிட இயக்கத் தமிழர் பேரவை
**தீனா** – பெரியார் சிந்தனையாளர் இயக்கம்
**வணங்காமுடி** – திருமணி மாவட்டத் தமிழ்ச் சங்கங்கள்
**அருட் செல்வன்** – அம்பேத்கர் பெரியார் மார்க்ஸ் வாசகர் வட்டம்
**ந.பன்னீர்ச்செல்வம்** – சமூக நீதிக் கட்சி

**பங்கேற்கும் கலைக்குழுவினர்**

புத்தர் கலைக் குழு, முரசு கலைக் குழு, நிமிர்வு கலைக் குழு, நிகர் கலைக் குழு,
அதிர்வு கலைக் குழு, நடம் பதி கலைக் குழு.

**மாநாட்டுச் சிறப்புரை :**

**கி.வீரமணி** – திராவிடர் கழகம்
**பாலபிரஜாபதி அடிகளார்** – அய்யா வழி
**இரா.அதியமான்** – ஆதித்தமிழர் பேரவை
**தெகலான் பாகவி** – எசு டி பி ஐ
**அரங்க குணசேகரன்** – தமிழக மக்கள் புரட்சிக் கழகம்
**இயக்குநர் வெற்றிமாறன்** – திரைப்பட இயக்குநர்
**புனித பாண்டியன்** – தலித் முரசு
**பேரா வசந்தா கந்தசாமி** – ஆய்வறிஞர்
**மகேசு** – காஞ்சி மக்கள் மன்றம்
**சூர்யா** – மக்கள் அதிகாரம்
**அன்பு வேந்தன்** – இந்தியக் குடியரசுக் கட்சி
**வழக்கறிஞர் அங்கயற்கண்ணி** – தமிழ்நாடு பெண் வழக்கறிஞர்கள் சங்கம்
**மங்கையர்ச் செல்வன்** – விடுதலை வேங்கைகள்
**வழக்கறிஞர் பாலமுருகன்** – மக்கள் சிவில் உரிமைக் கழகம்
**சௌ.சுந்தரமூர்த்தி** – தமிழர் விடுதலைக் கழகம்
**க.இரா.தமிழரசன்** – தமிழ்த் தேசக் குடியரசு இயக்கம்
**செல்வமணியன்** – தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி
**ஏ.தெய்வமணி** – அம்பேத்கர் சிறுத்தைகள் இயக்கம்

**வே.ஆனைமுத்து** – மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி
**தி.வேல்முருகன்** ச.ம.மு.உ., – தமிழக வாழ்வுரிமைக் கட்சி
**பேரா ஜவாகிருல்லா** ச.ம.மு.உ., – மனிதநேய மக்கள் கட்சி
**நடிகர் சத்தியராசு** – திரைக் கலைஞர்
**பேரா நெடுஞ்செழியன்** – தமிழறிஞர்
**ஜிக்னேசு மேவானி** ச.ம.உ. – இராசுடிரிய தலித் அதிகார் மஞ்ச்
**வழக்கறிஞர் ப.பா.மோகன்** – சமூகச் செயற்பாட்டாளர்
**ஓவியா** – புதிய குரல்
**எழுத்தாளர் ஜெயராணி** – சமூகச் செயற்பாட்டாளர்
**கோவை சுல்தான் அமீர்** – மனிதநேய சனநாயகக் கட்சி
**சுந்தரராசன்** – பூவுலகின் நண்பர்கள்
**வழக்கறிஞர் சுப்பிரமணியன்** – தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்
**மதிவண்ணன்** – தமிழ்நாடு சாக்கிய அருந்ததியர் சங்கம்
**க.அழகேசன்** – கலப்புத் திருமணத் தம்பதிகள் சங்கம்
**கா.சு.நாகராசன்** – தமிழ்நாடு திராவிடர் கழகம்
**பார்த்திபன்** – ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம்
**வழக்கறிஞர் பகத்சிங்** – உயர்நீதி மன்றத்தில் தமிழ் போராட்டக் குழு
**வழக்கறிஞர் செம்மணி** – தமிழக மக்கள் உரிமைக் கழகம்

**தொல்.திருமாவளவன்** நா.ம.உ., – விடுதலைச் சிறுத்தைகள் கட்சி
**கொளத்தூர் தா.செ.மணி** – திராவிடர் விடுதலைக் கழகம்
**உ.தனியரசு** ச.ம.உ., – தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை
**பேரா சுப.வீரபாண்டியன்** – திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை
**ப.அருளியார்** – சொல்லாய்வு அறிஞர்
**இயக்குநர் கோபி** – திரைப்பட இயக்குநர்
**மீ.த.பாண்டியன்** – தமிழ்த் தேச மக்கள் மன்றம்
**எம்.பி.செங்கோட்டையன்** – தலித் விடுதலைக் கட்சி
**மருத்துவர் சாலினி** – மனநல மருத்துவர்
**அப்துல் ரகுமான்** – வெல்பேர் பார்ட்டி ஆப் இண்டியா
**சிவஞானம்** – தீண்டாமை ஒழிப்பு முன்னணி
**அல்லூர் கா.சீனிவாசன்** – பசும்பொன் மக்கள் முன்னேற்றக் கழகம்
**மலரவன்** – புரட்சிகர இளைஞர் முன்னணி
**வழக்கறிஞர் பாவேந்தன்** – தமிழக மக்கள் முன்னணி
**பேரா.டாக்டர் ம.மேரிசான்** – தலித் கிறித்தவர் விடுதலை இயக்கம்
**பாவெல்** – இனங்களின் இறையாண்மைக்கான இளைஞர் இயக்கம்
**பேரா கி.கதிரவன்** – உச்சநீதிமன்ற/மாற்றுத்திறனாளிகள் சங்கம்
**வழக்கறிஞர் செ.குணசேகரன்** – ஆதலினால் காதல் செய்வீர் அறக்கட்டளை

**நன்றியுரை :**

**வெ.ஆறுச்சாமி** தந்தை பெரியார் திராவிடர் கழகம்

இவண் :

# பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு

**9443822256, 8608068002, 9894182482**

# மொழிப்போர் ஈகியர் நாள் பேரணி



இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து தன்னுயிர் ஈந்த ஈகியர் நாளான சனவரி 25 மொழிப்போர் ஈகியர் நாள் பேரணி. தமிழ் உரிமைக்கூட்டமைப்பு நடத்திய 20 ஆம் ஆண்டு பேரணி சென்னை மூலக் கொத்தளத்தில் நடைத்தியது. ஒருங்கிணைப்பாளர் புலவர் இரத்தினவேலன் தலைமையில் நடை பெற்ற இப்பேரணியை முனைவர் ப.சிவக்குமார் தொடங்கி வைத்தார் காஞ்சி அமுதன், திருமலை தமிழரசன், ஆவல் கணேசன் செந்தமிழ்க்குமரன் உள்ளிட்டோர் எழுச்சி முழுங்கங்கள் எழுப்பினர். நிகழ்வில் தோழர் பொழிலன், சா.குப்பன், வழக்குரைஞர் புகழேந்தி, இயக்குநர் வ.கௌதமன், வழக்குரைஞர் கோ.பாவேந்தன், கதிர்நிலவன், ஆழி.செந்தில்நாதன், தபசி குமரன், அ.சி.சின்னப்பா தமிழர், செந்தமிழ்வாணன், வெற்றிச்செல்வன், சோழ நம்பியார், இரா.பத்மநாபன், வீ.இறை யழகன், அ.ரா.மூர்த்தி, அன்பு உள்ளிட்டு பல அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள் பங்கேற்றனர். முதல் மொழிப்போர் ஈகியர் நடராசன்-தாளமுத்து நினைவிடத்தில் மொழிப்போர் வரலாற்று நினைவு மண்டபம் அமைக்கத் தொடர் நடவடிக்கையில் ஈடுபடுவது எனவும் முடிவெடுக்கப்பட்டது. மொழிப் போர் தமிழர்களே திரண்டெழுவீர்.

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - பிப்ரவரி-2020

| | | |
|---|---|---|
| **விசுவகரும சமுதாய மேம்பாட்டு ஆர்வலர்கள்** | | 2000/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 1250/- |
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **பாவேந்தன்** | அரக்கோணம் | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மதனகவி** | வாணியம்பாடி | 500/- |
| **சோ.அண்ணாதுரை** | பெங்களூரு | 500/- |
| **இரா.பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - பிப்ரவரி-2020

| | | |
|---|---|---|
| **இரா.பச்சமலை** (ஆண்டுக்கு) | சென்னை | ....15000/- |
| **ச.சம்பந்த சிவகுமார்** | காஞ்சிபுரம் | .... 500/- |
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |


**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர்,** சென்னை-50. ☎ : 9597526990

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**